கோகுலம்


GOKULAM

மார்ச் '86 ரூ 2.





போப்பாண்டவர்



கோகுலம்

1986 மார்ச் இதழ்

மலர் 4   இதழ் 2

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

— பாரதியார்

தனிப்பிரதி ரூ. 2.

ஆண்டுச் சந்தா ரூ. 24/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா



புகைப்படம்: கோவை சீதாராம்.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

கோகுலம் சிறுவர் சங்கத்தில் இதுவரை 13,000 உறுப்பினர்கள் சேர்ந்து விட்டனர். மேலும் சேர வேண்டுமென்ற ஆவலில், பலர் அஞ்சல் அட்டைகளிலும், வெள்ளைத் தாள்களிலும், பெயர், பிறந்த தேதி, முகவரி ஆகியவற்றை எழுதி அனுப்புகிறார்கள். கோகுலத்தில் அச்சிடப்பட்டு வரும் மனுவைத்தான் நிறைவு செய்து அனுப்ப வேண்டும். இந்த இதழில் உறுப்பினர் மனு அச்சாகியுள்ளது. தனியாக எழுதி அனுப்பும் விவரங்களை வரிசைப்படுத்தி வைத்துக் கொள்வது சிரமமாயுள்ளது. ஆகையால், ஏற்க இயலாது.

அச்சிட்ட மனுவைப் பூர்த்தி செய்யும்போது தமிழ்நாட்டில் உள்ளவர்கள் தமிழிலே எழுதுங்கள். வெளி இடங்களில் உள்ளவர்கள் ஆங்கிலத்தில் எழுதுவதே நல்லது. முகவரியில் உங்கள் ஊரின் பின் கோடு இருப்பது அவசியம்.

சிலர், உறுப்பினர் மனுவுடன், அல்லது கதை, கவிதையுடன் தங்களின் புகைப்படத்தையும் அனுப்புகின்றனர். ஒரு கதையோ கவிதையோ தேர்ந்தெடுக்கப்பட்டால் உடனே நாங்கள் தெரிவிப்போம். அப்போது புகைப்படம் அனுப்பினால் போதும். முன்பே அனுப்பத் தேவையில்லை. புகைப்படத்தின் பின்புறம் பெயர், உறுப்பினர் எண் இரண்டையும் மறக்காமல் குறிப்பிடுங்கள்.


பலமுறை எடுத்துக் கூறியும், சிலர், தங்கள் பெயர் வெளிவரவேண்டுமென்ற ஆசையில், காப்பி அடித்து அனுப்பிவிடுகின்றனர். மற்றவர்கள் எழுத்தைத் திருடுவதும் குற்றம்தானே!

சில சுவையான தகவல்களை எழுதி அனுப்பும்போது, அவற்றிற்கு ஆதாரம் என்ன என்பதையும் குறிப்பிடுங்கள்.

நீங்கள் எதை எழுதினாலும், அதை வீட்டிலுள்ள பெரியவர்கள் அல்லது ஆசிரியர்கள், அல்லது நண்பர்களிடம் காட்டுங்கள். அவர்கள், ''நன்றாக இருக்கிறது; கோகுலத்திற்கு ஏற்றதுதான்'' என்று சொன்னால், அதன் பிறகு அனுப்புங்கள். ஒருவேளை 'நன்றாக இல்லை' என்று சொல்லிவிட்டால், மனம் தளர்ந்துவிடாதீர்கள். எழுத்தாளன் ஆக வேண்டும், கவிஞன் ஆகவேண்டும் என்ற உண்மையான ஆர்வமும், துடிப்பும் இருந்தால், நிச்சயம் வெற்றிபெறுவீர்கள்.

— அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்



லென்ஸ்




மீனாட்சி வான்மோகன்



அவினாசி முருகேசன்


பிருந்தாவனக் கவிஞர்கள்



வி. ரமேஷ்




முருகு தெய்வநாயகம்



ப. அம்பிகா



கு. வெ. பாலசுப்பிரமணியம்



இரா. மாரியப்பன

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



பெ. சரவணன்



கோ. அன்னபூரணி

மேலட்டை வண்ணப்படம்: யோகா.

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.

அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இப்போது. காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.



23

மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்

புரதம்	ரிபோ
கொழுப்பு	ஃப்ளேவின்
கார்போ	நிகோடி
ஹைட்ரேட்	னமைடு
கால்ஷியம்	மக்னீஷியம்
பாஸ்பரஸ்	பென்டோதெனேட்
சோடியம்	கோலின்
குளோரைடு	வைட்டமின் (பி6)
(வி வடிவில்)	வைட்டமின் (பி12)
பொட்டாஷியம்	ஃபாலிக் அமிலம்
இரும்புச்சத்து	வைட்டமின் ஸி
அயோடின்	வைட்டமின் டி
வைட்டமின் 'ஏ'	வைட்டமின் ஈ
வைட்டமின் 'பி'	வைட்டமின் கே

பால் சேர்த்திடத் தேவையில்லை.



காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

884. GLC. 120 Tm

சித்திரப் புதிர்! 11


ஆழி ______



1 திபேத்தில் இந்த மிருகத்தின் பாலைத்தான் உபயோகிக்கிறார்கள். என்ன மிருகம் இது?




2 இவள் எந்த நாட்டுப் பெண்மணி? இவள் உடுத்தியிருக்கும் இந்தத் தேசிய உடையின் பெயர் என்ன? *



3 இந்த நியூஜிலாந்துப் பறவையின் பெயர் என்ன?

4 ஒரு கண்டம் 3 துண்டுகளாக்கப்பட்டிருக்கிறது. என்ன கண்டம் இது?





5 இந்தப் பையன் வீட்டுக்குப் போக சரியான வழிகாட்டுங்கள்!

விடை வேறு பக்கம்

மின்மினிக் கதைகள்

-அண்ணா சொன்னவை



திருடன் வைத்த விருந்து

ஒருவர் வீட்டில் இருந்த குழந்தையின் கடுக்கனை ஒரு திருடன், திருடிக் கொண்டு போய், மார்வாடிக் கடையிலே விற்றுப் பணத்தை மடியிலே வைத்துக் கொண்டு கடைவீதியிலே வருகிறான்.

அப்பொழுது நகையைப் பறிகொடுத்த குழந்தையின் தந்தை எங்கெங்கோ அலைந்து பார்த்துவிட்டு, கடைசியில் போலீஸில் புகார் செய்து விட்டு அந்தக் கடைவீதிப் பக்கமாக வருகிறார்.

அவரைக் கண்ட அத்திருடன் அவரை அணுகி, ''என்ன ஒரே களைப்பாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டு, ''வாருங்கள்! காப்பி சாப்பிடலாம்'' என்று அழைக்கிறான். அவனுக்குத் தெரியும், தான் திருடிய கடுக்கனுக்குச் சொந்தக்காரர் இவர்தான் என்று! ஆனால், அவருக்குத் தெரியாது. 'இவன் தான் தன் குழந்தையின் கடுக்கனைத் திருடியவன்' என்று!

பாவம், அப்பாவியாக இருக்கிறார்; இவர் வீட்டுக் கடுக்கனை நாம் திருடி விற்றுப் பணம் வைத்திருக்கிறோம். அந்தப் பணத்திலேதான் ஒரு கப் காப்பி வாங்கிக் கொடுப்போம்'' என்று எண்ணி, அவரை காப்பி சாப்பிட அழைக்கிறான். திருடனுக்கு அவனையறியாமலேயே அவனுடைய மனம் உறுத்துகிறது.

அதே நேரத்தில் நகை பறி கொடுத்தவர் நினைக்கிறார். 'என்ன அன்பு இந்த ஆளுக்கு! நம்மை முன்பின் தெரியாமலிருந்தும், காப்பி வாங்கிக் கொடுக்



கிறாரே!' என்று. ஓட்டலுக்குள் நுழைந்ததும், திருடன் அவரைப் பார்த்து, "என்ன சாப்பிடுகிறீர்கள்? இனிப்பு சாப்பிடுகிறீர்களா? காரம் சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்கிறான்.

"இல்லை; இல்லை; அதெல்லாம் வேண்டாம். வெறும் காப்பி போதும்" என்கிறார்.

இருந்தாலும் பரவாயில்லை" என்று கூறி, போண்டா வைக்கச் சொல்கிறான்; அதை அவர் சாப்பிட்டு, காப்பி அருந்தி வெளியே வரும்போது, அந்த ஓட்டலுக்குள் சில போலீஸார் நுழைந்து அந்தத் திருடனைக் கைது செய்கிறார்கள். உடனே குழந்தையின் தந்தை திடுக்கிட்டு, "ஏன் இவரைப் பிடிக்கிறீர்கள்? இவர் நல்ல மனிதராக இருக்கிறாரே! நான் களைப்பாக இருப்பதைப் பார்த்து, நான் கேட்காமலேயே காப்பி வாங்கித் தந்தார். இப்படிப்பட்ட நல்ல குணமுடையவர் என்ன குற்றஞ் செய்தார்?" என்று போலீசாரிடம் கேட்கிறார்.

அவர் சொன்னதைக் கேட்டு, போலீசார் சிரித்துவிட்டு, "உங்கள் குழந்தையின் நகையைத் திருடி விற்றவன்தான் இவன். விற்ற பணத்திலிருந்துதான் உங்களுக்குக் காப்பி வாங்கிக் கொடுத்திருக்கிறான்" என்று உண்மையை உணர்த்தினார்கள்

பாட்டியும் பேரனும்

ஒரு வீட்டில் பேரப் பையன் தன் பாட்டியைப் பார்த்து பூசணிக்காய்க் கறி சமைத்துப் போடும்படி கேட்டான்.

பாட்டி, "இப்போதுதான் பூசணிக்காய் விதை போட்டிருக்கிறோம்; அதை நன்றாகத் தண்ணீர் விட்டுப் பயிரிட்டால் நாளாக நாளாக பூசணிக்காய் காய்க்கும்; அதன்பிறகு அதை பறித்துக் கறி சமைத்துப் போடுகிறேன்; அதுவரை பொறுத்திரு" என்றாள்.

பாட்டி பேரனிடம், "தண்ணீர் ஊற்றினால்தான் செடி வாழும்; அதற்கு ஆழமான கிணறு வெட்ட வேண்டும்" என்றாள்.

பேரன் கஷ்டப்பட்டுக் கிணறு வெட்டினான்; தண்ணீர் பாய்ச்சினான். அந்த விதை முளைத்துச் செடியாகி, கொடியாகிப் படர்ந்து, பூப்பூத்துக் காய் காய்க்கும்வரை காத்திருந்து, பாட்டியிடம் காய் காய்த்துவிட்ட செய்தியைச் சொன்னான்.

"இன்னும் கொஞ்சம் பொறுத்திரு; பக்குவமான நேரம் வரட்டும்; பறித்துக் கறி சமைக்கலாம்" என்றான் பாட்டி. பக்குவமான நேரம் வந்ததும், பாட்டியும் பேரனும் பூசணிக் கொடி இருந்த இடத்திற்குச் சென்றார்கள். அப்பொழுது பூசணிக் கொடி இருக்கிறது; காயைக் காணவில்லை! காய் எங்கே மறைந்தது.

அப்பொழுது பையனின் அத்தை இருந்தாள். அவள், "நீ செடி வைத்துப் பயிரிட்டுப் பாடுபட்டதெல்லாம் சரிதான் தம்பி! ஆனால், தோட்டத்துக்கு வேலி இல்லை; பூசணிக்காயை யாரோ பறித்துச் சென்றுவிட்டார்கள். வேலி இருந்தால் காய் பறிபோயிருக்காது" என்று பையனுக்கு விளக்கினாள்.





இசைவாணன்

இனிய குரல் எடுப்பான இசை! ஆனால் பாடியதோ, மன்றத்தில் உள்ளவரை மமதையுடன் கேவலப்படுத்தும் தூற்றலாக இருந்தது. ஏன் இராது?

ஓர் இசைவாணன் சபையினர் முன், "தூ! தூ! போ! நாயே!" என்று பாடினால், இசையின் இனிமைக்காகப் பொறுமையுடன் கேட்போர் எவ்வளவு பேர் இருக்கமுடியும்? சபை விரைத்துப் பார்க்கக் கண்டார் இசைவாணர்.

'சுருதி குலையவில்லையே! தாளமும் தவறவில்லையே! தமிழர் விரும்பும் தமிழ் இசைதானே பாடுகிறோம்? ஏன் முகம் கடுக்கிறது? விழி கோபத்தைக் கக்குகிறது?' என்று விசாரமடைந்தார் அவர்.

ஆணவம் பிடித்தவன் என்று சபையினர் கருதினர். சங்கீத ஞானமற்றவர்கள் என்று இசைவாணர் சபையோரைக் கருதினார். இரண்டாம் அடி பாடும்போதுதான் கோபத்துக்குப் பதில் சபையினர் சிரிக்கலாயினர். விசாரத்துக்குப் பதிலாக வித்வான் வெட்கப்படலானார். இந்த மனமாறுதலைத் தந்த அந்த மகத்தான இரண்டாம் அடி எது?


"ஆதி நாள் சுந்தரர்க்கு அன்புடனே!"

என்ற அடி பாடியபோதுதான் 'தூற்றல் அல்ல இது. இசைவாணர் பாடியது தோத்திரம்தான்' என்பதைச் சபை உணர்ந்தது.

தூது போனாயே! என்ற முதலடியைத்தான் நிறுத்தி, நிதானமாக, நிரவல் செய்து, எழுத்தெழுத்தாக்கி 'தூ! தூ! போ! நாயே!" என்று பாடி பாசுரத்தின் பொருளையே பாழாக்கிவிட்டோமே, அதனாலன்றோ சபையினர்க்கு நம்மிடம் ஆத்திரம் ஏற்பட்டது' என்று இசைவாணர் உணரவும் முடிந்தது!

எங்கே ஐஸ் கட்டி?

ஐரோப்பிய நாட்டிலே, "பிரெட்ரிக் தி கிரேட்" என்ற மன்னன், "ஏழைகளுக்கு எவ்வளவோ செய்கின்றேன். ஆனால் ஏதும் கிடைக்கவில்லை—



வீர விருது பெற்ற சிறுவர்கள்



வீரச்செயல் புரிந்த சிறுவர்களுக்கு இந்த ஆண்டு விருதுகளை வழங்கிப் பாராட்டினார் நம் பிரதமர் ராஜீவ் காந்தி.

கிடைக்கவில்லை' என்று வருத்தப்படுகிறார்களே! அது எப்படி?'' என்று, ஒரு பெரிய விருந்து நடைபெறும்பொழுது தன்னுடைய பிரபுக்களையும், அமைச்சர்களையும் கேட்டானாம்!

அவர்களிலே வயது முதிர்ந்த அமைச்சர் ஒருவர், ''நான் இதற்குப் பதில் சொல்கிறேன்'' என்றாராம். ஆனால் அவர் அதற்கு வார்த்தையாலேயே பதில் சொல்லவில்லையாம்!

தனக்காக விருந்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு ஐஸ் கட்டியை எடுத்து, பக்கத்திலிருக்கிறவர்களிடம், கொடுத்து, ''இதை அடுத்த பிரபுவிடம் கொடு'' என்றார்; அவர் அவரிடத்திலே கொடுத்தார்; அந்தப் பிரபு இன்னொருவரிடத்திலே கொடுத்தார். இன்னொரு பிரபு மற்றொருவரிடம் கொடுத்து இப்படி 50, 60 கைகள் மாறி, கடைசியிலே மன்னர் கையிலே போய்ச் சேரும்போது, இரண்டு சொட்டுத் தண்ணீர்தான் மிச்சமிருந்ததாம்! ஏனென்றால், முதலில் எடுத்ததோ ஐஸ் கட்டி! உடனே, ''எங்கே ஐஸ் கட்டி?'' என்று கேட்டாராம் மன்னன்.

''உங்களுக்குக் கிடைத்தது இரண்டு சொட்டுத் தண்ணீர்தான். அது ஐஸ்கட்டியாகத்தான் புறப்பட்டது; இத்தனை தரகர்கள் நடுவே இருந்ததாலே கடைசியில் உங்களுக்கு இரண்டு சொட்டுத் தண்ணீர்தான் கிடைத்தது'' என்றாராம் அந்த அமைச்சர்.

— பொதுமேடைப் பதிப்பகம் வெளியிட்டுள்ள,
'அறிஞர் அண்ணா சொன்ன குட்டிக் கதைகள்'
என்ற புத்தகத்திலிருந்து.



என் குழந்தைப் பருவம்

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

'குன்றக்குடி' என்றதும் நம் நினைவுக்கு வருபவர் இருவர். ஒருவர் குன்றக்குடி மலையில் கோயில் கொண்டிருக்கும் முருகர்; மற்றொருவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

இவர் நல்ல தமிழ் அறிஞர்; சிறந்த சொற்பொழிவாளர். தமிழ் அறிஞர்களையும், எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் பாராட்டுவதிலும் அவர்களில் மிகச் சிறந்தவர்களுக்குப் பட்டங்கள் வழங்கிப் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்வதிலும் மிகுந்த மகிழ்ச்சி அடைபவர்.

இவர் இலங்கை, தாய்லாந்து, இந்தோசீனா, மலேசியா, சிங்கப்பூர், சோவியத் ரஷ்யா, கொரியா, ஹாங்காங், ஜப்பான், செஞ்சீனா போன்ற நாடுகளுக்குச் சென்று இறையுணர்வைப் பரப்பியவர். கீழ வெண்மணி மண்டைக்காடு, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் கலவரங்கள் ஏற்பட்டபோது அங்கெல்லாம் சென்று, அமைதியை நிலைநாட்டியவர்.

திருக்குறளை இந்தியாவின் தேசிய நூலாக ஆக்க வேண்டுமென 1968—ஆம் ஆண்டு முதலாக வற்புறுத்தி வருபவர். முதல் முதலாகத் தமிழக அரசின் 'திருவள்ளுவர் விருது' பெற்றவர்.


குன்றக்குடியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பல்வேறு தொழில்களைத் தொடங்கி, பல நூறு பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தவர். குன்றக்குடியின் வளர்ச்சியை மத்திய அரசின் திட்ட ஆணைக் குழு பார்வையிட்டுப் பாராட்டியிருக்கிறது.


எனது வாழ்க்கையில் தமிழ் உணர்வும், இறை உணர்வும், மனித நேயமும் ஓரளவு அமைந்திருக்கிறது என்றால் அதற்கு வித்திட்டது என் இளமைக் கால வாழ்க்கையின் சூழல். எனது குழந்தைப் பருவத்தில் என் மூத்த தமையனார் சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் வித்துவான் வகுப்பில் பயின்றுகொண்டிருந்தார். பொருள் நெருக்கடி நிறைந்த வாழ்க்கை. என் தாயார் தமது கடின உழைப்பால் என்னையும் என் தமையனார்களையும் வளர்த்து வந்தார்.

அப்பொழுது எனக்குக் காலையிலும் மாலையிலும் குடும்பத்தில் தந்த வேலை தமிழ்ப் பேரறிஞர்களின் வீடுகளுக்குச் சென்று பால் ஊற்றி வருவது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அப்பொழுது தமிழ் மலைகள் இருந்தன! அருட்திரு விபுலானந்த அடிகள், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், செந்தமிழ்ச் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், சர்க்கரைப் புலவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனைவருடைய வீட்டுக்கும் நான் பால் ஊற்றும் பையன்.

இவர்களுள் செந்தமிழ்ச் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களும் அருட்திரு விபுலானந்த அடிகள் அவர்களும் என்மீது தனிப் பரிவு காட்டினார்கள். செந்தமிழ்ச் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் நல்ல தமிழ்ப் பாடல் ஒன்று ஒப்பித்தால் ஓர் அணா





கொடுப்பார்கள். இது நாள்தோறும் ஆன கட்டளை. நமக்குத் திருக்குறள் பாடமானதெல்லாம் இந்த ஓர் அணுக் கட்டளை வழிதான்! பிள்ளையவர்கள் மட்டுமல்லாமல் அவர்களது வாழ்க்கைத் துணைவியார் அவர்களும் என்னைக்கனிவோடு அழைத்துபழைய சோற்றில்தயிர்போட்டுத்தந்துவடகம் முதலியவற்றோடு உண்பித்தும் அனுப்பியதுண்டு!

அப்போது நான் ஐந்தாம்வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். பள்ளியில் சாரணர் இயக்கத்திற்கு—குருளையர் பகுதிக்கு மாணவர்களைச் சேர்த்தார்கள். எனக்கு அதில் சேர ஆசை. பெயர் கொடுத்துத் தேர்ந்தெடுக்கப் பட்டுவிட்டேன். சாரணர்க்குரிய சீருடை வேண்டுமே! வீட்டில் சென்று கேட்டேன். விடை சாதகமாக இல்லை! ஒரே மனச் சங்கடம்! மற்றவர்களைப் போல் சாரணர் உடை அணிய முடியவில்லையே என்ற வருத்தம் அழுகையாக உருப்பெற்றது! எங்கு அழுதேன்! செந்தமிழ்ச் செல்வர் பிள்ளையவர்கள் முன்னால்தான்! அவர்கள் ஆறுதல் கூறி, சாரணர் உடுப்பு ஓர் இணை தைத்துக் கொடுக்கச் செய்தார்கள். இப்படியாகத் தமிழுணர்வும் ஒப்புரவுத்தன்மையுமுடைய பிள்ளையவர்கள் சூழலில் கிடைத்த படிப்பினைதான் இன்றுவாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறது.

அடுத்தது, அருட்டிரு விபுலானந்த அடிகளோடு இருந்த உறவு. இந்த உறவு ஆழமானது. இந்த உறவுதான் இன்றைய வாழ்க்கையின் அடித்தளமாக அமைந்தது. வெள்ளிக்கிழமைதோறும் மாலை நேரத்தில் அருட்டிரு விபுலானந்த அடிகள் திருவேட்களத்தைச் சுற்றியுள்ள சிற்றூர்களிலுள்ள ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தொண்டு செய்யச் செல்வார்கள். நானும் அவர்களோடு அரிக்கேன் விளக்கைத் தூக்கிக் கொண்டு செல்வேன். அருட்டிரு விபுலானந்த அடிகள், ஆதி திராவிடர் குடியிருப்புக்களில் பிரார்த்தனைக் கூட்டம் நடத்துவார்கள். அவர்களுக்கு அறிவுரை கூறுவார்கள்; குழந்தைகளுக்கு இனிப்பு வழங்குவார்கள். அடிகள் இயற்றிய இந்தப் பணியில் பல ஆண்டுகள் ஏவல்செய்யும்வாய்ப்புக்கிடைத்ததால், எனது உள்ளத்தில் தீண்டாமை பற்றி இயல்பாகவே ஒரு வெறுப்புணர்வு ஏற்பட்டது. இன்று தீண்டாமையை வெறுத்து ஒதுக்குவதிலும் சாதி வேற்றுமைகளை எதிர்த்துப் போராடுவதிலும் நமக்கு இருக்கும் ஆர்வம் அருட்டிரு விபுலானந்த அடிகள் இட்ட பிச்சை! அருட்டிரு விபுலானந்த அடிகளின் கூடவே இருக்கும் ஒரு செல்லப் பிள்ளையாகவே அப்போது இருந்தேன்!

ஒருதடவை சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தா நடத்தி வந்த நந்தனார் பாடசாலை ஆண்டு விழாவுக்கு அருட்டிரு விபுலானந்த அடிகள் சென்றார்கள். வழக்கம்போல நானும் அவர்களுடன் சென்றேன். விழா நீண்ட நேரம் நடந்தது. எனக்கோ தூக்கம் வந்துவிட்டது! மேடையில் இருந்த அருட்டிரு விபுலானந்த அடிகள் தமது மடி மீது என்னைக் கிடத்தித் தூங்க வைத்தார்கள். இவ்வாறு அடிகள் காட்டிய பரிவு

பெரிது! அருட்டிரு அடிகள் இலங்கைக்குச் செல்லும் சூழ்நிலை ஏற்பட்டது. நானும் அடிகளுடன் ''இலங்கைக்கு வருகிறேன்'' என்று அடம் பிடித்தேன். சின்னப் பிள்ளை, தனியே அவ்வளவு தூரம் வந்து இருக்க முடியாது என்பது அடிகளின் கருத்து. அதை என்னிடத்தில் சொல்லவும் அவருடைய அருள் நிறைந்த உள்ளம் ஒருப்படவில்லை. அதனால் நான் தூங்கிய நேரம் பார்த்து, அடிகள் திருவேட்களத்தை விட்டுப் புறப்பட்டுவிட்டார்கள்.

மறுநாள் அவர்கள் இல்லத்தில் இல்லை என்ற விவரம் தெரியவந்தது. பல ஆண்டுகள் அந்தப் பிரிவுத் துயர் எனது நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்தது.

நான் இளைஞனான பிறகு புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராமச்சந்திரபுரம் என்ற கடியாபட்டியில் நான் படித்துக் கொண்டிருந்த பொழுது, அருட்டிரு விபுலானந்த அடிகள் மேலைச் சிவபுரி சன்மார்க்க சங்கத்தின் விழாவுக்கு வருகிறார்கள் என்ற செய்தி கிடைத்தது. அடிகளைக் காணவும் வணங்கி வாழ்த்துப் பெறவும் மேலைச் சிவபுரிக்குச் சென்றேன். சன்மார்க்க சபையில் அருட்டிரு விபுலானந்த அடிகள், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாருடன் இருந்து பேசிக் கொண்டிருந்தார். நான் சென்று நிலமிசை வீழ்ந்து அடிகளை வணங்கினேன்.


ஆண்டுகள் பலவானதாலும் உருவ மாற்றம் ஏற்பட்டிருந்ததனாலும் அவர்கள் என்னை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. 'திருவேட்களத்தைக் கூறி, அடியேன் ரங்கநாதன் (நமது பூர்வாசிரமப் பெயர்) என்று கூறினேன். அடிகள் கன்றினைக் கண்ட தாய்ப் பசு போல மகிழ்ச்சி அடைந்ததை அவர்களின் முகப் பொலிவு காட்டிற்று! திருநீறு வழங்கினார்கள்! முதுகில் தட்டிக் கொடுத்தார்கள்! படிப்பு முதலியன பற்றி விசாரித்தார்கள்! இளைஞர்களிடமுள்ள வழக்கம் போல, 'ஆட்டோகிராஃப்' புத்தகத்தை நீட்டினேன். மகிழ்ச்சியோடு அதனை வாங்கி 'Know What you do and do that'' என்று எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்தார்கள். இந்தச் சொற்றொடர்தான் நமது வாழ்க்கையின் குறிக்கோளாயிற்று. கோட்பாடாக மாறிற்று!

அருட்டிரு விபுலானந்த அடிகளுடைய பசுமையான நினைவுகளுடன் தீண்டாமை ஒழிப்புப் பணி, சமுதாய மேம்பாட்டுப் பணியில் ஈடுபடுவதில் மன நிறைவு இருக்கிறது. அவர்கள் இளமையில் வித்திட்ட கடவுள் நம்பிக்கை வாழ்க்கையில் ஊன்றுகோலாக இருக்கிறது! இத்தகைய இளமைப் பருவம் இனி எப்பொழுது வரும்?









பாலுவின் குறும்பு

பெ.சரவணன் (உ155)

பாலுவின் ட்ரவுசர் பையில் எப்போதும் பல சாமான்கள் இருக்கும். பிளேடு, குண்டூசி, ஆணி, நூல்... இவையெல்லாம் எதற்கு? மற்றக் குழந்தைகளையும், பிராணிகளையும் இம்சை செய்து துன்புறுத்தத்தான்!

இன்றும் அப்படித்தான். காலை ஏழு மணி இருக்கும். பாலு பல் துலக்கி விட்டு, ''இன்று எந்தப் பிராணியை எப்படித் துன்புறுத்தலாம்?'' என யோசித்துக் கொண்டிருந்தான்.

'சர்... சர்.... சொய்ங்.... சொய்ங்!' எனச் சப்தம் கேட்கத் திரும்பிப் பார்த்தான்.

பக்கத்து வீட்டு வசந்தி அக்கா பால் கறக்கத் துவங்கியிருந்தாள். பசு மாடு தன் அழகான கன்றை நாவால் நக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தது.

பாலு மெதுவாகச் சப்தம் இன்றி வைக்கோல்போர் ஓரமாக ஒளிந்து ஒளிந்து போனான். வசந்தி அக்கா இவனைக் கவனிக்கவில்லை. அவள் ஏதோ சிந்தனையுடன் விளக்கெண்ணெயைத்தொட்டுப்பசுவின்காம்பில் தடவிச் சீராகப் பால் கறந்து கொண்டிருந்தாள். அரைக் குவளைப் பால் நிறைந்திருந்தது.

மாட்டுக்கு அருகில் போய்விட்ட பாலு கூரான ஆணியால் பசுவின் முதுகில் ஒருகுத்து குத்திவிட்டு ஓடிவிட்டான். மாடு மிரண்டு குதித்து, வசந்தியின் முகத்திலும், கைகளிலும், உதைத்துப் பால் குவளையைத் தட்டி விட்டுக் கயிற்றையும் அறுத்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடத்துவங்கியது.

'ஐயோ' என்றலறிய வசந்தி தடுமாறிக் கீழே விழுந்துவிட்டாள்.

அவ்வளவு பாலும் கீழே கொட்டிவிட்டது. பாவம், அன்று அவர்கள் குடும்பத்துக்கு வேறு வழியில்லை. இந்தப் பாலை விற்றுத்தான் ஜீவனம் நடத்த வேண்டும். படுபாவி! இப்படிப் பண்ணிட்டானே!' என்று வசந்தி திட்டியது கேட்காத தூரத்தில் ஓடிக் கொண்டிருந்தான் பாலு.

இதுபோலத்தான் அவன் கண்ணில் படும் பிராணிகள் வதை பட்டுக் கொண்டிருந்தன.

மறுநாள் வீதியில் நடந்து கொண்டிருந்த பாலுவின் கண்களில் பட்டது அந்த மாடு. அதுவும் பெரிய திமிலும், கூர்மையான கொம்புகளும் உடைய மூர்க்கமான கோயில் காளை, ராட்சசனைப் போலிருக்கும் அது.

காளை முறைத்துப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தது. மெதுவாக அருகில் போனான்.

'புர்ர்' இவனைப் பார்த்து உறுமியது அது!

சற்று தயங்கியவன், மீண்டும் அருகில் போய் வாலைப் பிடித்து ஒரு முறுக்கு முறுக்கினான். அதோடு ஆணி

யால் ஒரு குத்தை வேறு போனஸாகக் கொடுத்தான்.

'விருட்'டென எழுந்த மாடு அவனை நோக்கிப் பாய்ந்தது.

பாலு திரும்புவதற்குள் அவன் இடுப்பில் ஒரு முட்டு விழுந்தது. விழுந்தடித்து ஓடினான், தடுமாறியபடி. பெரும்பாலும் அவன் மாடுகளை சீண்டி விட்டதும், அவை பயந்து ஓடும். அவை வீட்டு மாடுகள். இது பயங்கரமான கோயில் காளை அல்லவா? அவன் நினைத்தபடி எதிர்த் திசையில் ஓடாமல் அவனை நோக்கிப் பாய்ந்து விரட்டத் துவங்கியது!

கண்மண் தெரியாமல் ஓடியவன் யாரோ ஒரு பெண் மீது மோதி மயக்கம் போட்டுவிழுந்தான். அவன் நிலைமையை உணர்ந்து போட்ட கூச்சலில் தெருவில் போய்க் கொண்டிருந்த பல ஆண்கள் சேர்ந்து கம்பு, கல் இவற்றைக் கொண்டு கோயில் காளையை வேறு திசையில் விரட்டி விட்டனர். முகத்தில் குளிர்ந்த நீர் தெளிக்கப்பட்டதும் கண் விழித்த பாலு, 'யார் மடியில் படுத்திருக்கிறேம்?' என்று தலையை நிமிர்த்திப் பார்த்தான்.

"அக்கா நீங்களா?" என்றவன் கண்களில் நீர் தானாகச் சுரந்தது.

அவனைக் காப்பாற்றி இப்போது சிகிச்சை செய்து கொண்டிருப்பது, பால்கறக்கும்போது மாட்டைச் சீண்டி விட்டு உதைபட வைத்தானே அதே வசந்தி அக்காதான்!

அவள் வீட்டில்தான் படுத்திருந்தான்.

"அக்கா! நேற்று அப்படிச் செஞ்சதுக்கு என்னை மன்னிச்சுடுங்க அக்கா!" என்றவன் மேலும் அழுதான்.

"பரவாயில்லை தம்பி! நீதான் சின்னப்பையன். பின் விளைவு தெரியாமல் குறும்பு பண்ணுறே! அதனாலே எவ்வளவு கஷ்டம் பார்த்தாயா? அதுக்காக நாம் பாதிக்கப்பட்டோமே என்று பழி வாங்க நினைக்கலாமா?" என்றாள்.

"இனிமேல் சத்தியமாக எந்த உயிரினத்தையும் துன்புறுத்த மாட்டேன்" என்று வசந்தி அக்காவின் கைகளில் சத்தியம் செய்தான் பாலு.

இப்பொழுதெல்லாம் வசந்தி பால் கறக்கும்போது பக்கத்தில் கன்றைப் பிடித்துக் கொள்வது, பாத்திரங்களை எடுத்துக் கொடுப்பது, பசுவிற்குத் தீவனம் போடுவது, மாட்டை அசையாமல் பிடித்துக் கொள்வது, இது போன்ற சிறுசிறு உதவிகளைச் செய்வது யார் தெரியுமா? ஆம், பாலுவே தான்!



அறிவுள்ள கோழி

கோ. அன்னபூரணி (11422)

எங்கள் வீட்டில் கோழி ஒன்று இருந்தது. நாய் பூனை ஆகிய அனைவரிடமும் பழகும் சுபாவம் அதற்கு இருந்தது.

வீட்டில் உள்ள சின்னக் குழந்தைகளுக்கு நாய், பூனையைவிடச் சிறந்த நண்பன் இந்தக் கோழிதான். குழந்தைகளை கிச்சு கிச்சு மூட்ட லேசாக கொத்துவதைப் போல் பாவனை செய்வதைப் பார்க்கும்போது அதன் அன்பை மறக்க முடியாது.

அந்தக் கோழி இட்ட முட்டைகள் பதினைந்தையும் அடை காக்க வைத்தோம். பதினைந்து குஞ்சுகளைப் பொரித்தது. அந்தக் குஞ்சுகளைப் பராமரித்த விதம் எல்லோரையும் கவர்ந்தது.

அக்கம்பக்கத்தில் இருப்பவர் வீட்டுக்கோழிகள் அசந்திருந்தபோது, காகம், பருந்து ஏதாவது குஞ்சுகளைத் தூக்கிச் சென்றுவிடும். ஆனல், எங்கள் கோழியிடம் எதுவும் செய்ய முடியாது. அப்படியே தூக்கிச் சென்று

லும் கூடவே பறந்து சென்று, அடித்து திரும்பக் கொண்டு வந்துவிடும். 'எந்தக்கோழியாவது இவ்வளவுதூரம் பறக்குமோ!' என்று வியப்படையச் செய்யும்.

ஒவ்வொரு நாளும் கோழி தனது குஞ்சுகள் உணவு உண்பதைக் கண் காணிப்பதும், அவற்றைத் திரும்ப கூண்டில் அடைப்பதும் பார்க்க மிகவும் அருமையான காட்சியாயிருக்கும்.

ஒருநாள் நல்லமழைபெய்துகொண்டிருந்தது. எல்லோரும் வீட்டிலே அடைந்திருந்தனர். இந்தக் கோழி தனது குஞ்சுகளுடன் எங்காவது ஒதுங்கியிருக்கும் என்ற நினைப்பில் யாரும் அதிகம் கவலைப்படவில்லை.

அப்போது எங்கள் வீட்டினுள் ஓடி வந்தது கோழி. தனியே வந்தபோதும் குஞ்சுகளை எங்காவது மறைத்துவிட்டிருக்கும் என்றுதான் எண்ணினோம். எங்களைச் சுற்றி சுற்றி வந்து அது எழுப்பிய ஒலி சற்று வித்தியாசமாக இருக்கவே நாங்கள் உஷாரானோம். அது வெளியே ஓட நாங்கள் போய்ப் பார்த்தோம். ஓரிடத்தில் நின்று அது குரல் கொடுத்துக் கொண்டேயிருந்தது. குஞ்சுகளைக் காணவில்லை.

கோழியை மட்டும் வீட்டிற்குக் கொண்டு வந்தோம். குஞ்சுகள் ஒட்டு மொத்தமாகக் காணமற் போனது எங்களுக்கும் வருத்தம்தான்.

அன்று முதல் கோழி வெளியே செல்வது இல்லை. சரியாகச் சாப்பிடுவதும் இல்லை. மிகவும் மெலிந்துவிட்டது. அதன் கண்கள் மட்டும் அடிக்கடி வாசலைப் பார்த்துக் கொண்டேயிருந்தது. அது யாரையோ எதிர்பார்க்கிறது என்பது மட்டும் தெரிந்தது. தனது உயிரைப் பிடித்து வைத்துக்கொள்ளத் தேவையான தண்ணீர், சில பருக்கைகள் என்று அது இருந்த விரதத்தின் காரணத்தை எங்களால் யூகிக்க முடியவில்லை.

ஒருநாள் காலை அணில் பிடிக்கும் நீண்ட ஈட்டியுடன் ஒரு நரிக்குறவன் தெரு வழியே போய்க் கொண்டிருந்தான். 'வெளிப்புறத் தாழ்வாரத்தில் படுத்திருந்த கோழியின் கண்களில் திடீர் என்று பளபளப்பு. பறந்து ஓடி, பாய்ந்து அந்தக் குறவன் தோளிலே போய் உட்கார்ந்துகொண்டு இறக்கைகளால் படபடவென்று அடித்து அவன் முகத்தில் தன் கூர்மையான அலகுகளால் கொத்தியது. அவன் 'ஆ! அப்பா!' என்று அலறும் சப்தம் கேட்டு ஊர் மக்கள் கூடிவிட்டார்கள். இத்தனை நாள் அமைதியாகக் கிடந்த கோழிக்கு அவ்வளவு வீரம் எப்படி வந்தது? ஏன் வந்தது? எல்லோரும் ஒருவருக்கொருவர் கேட்டுக் கொள்ள ஆரம்பித்தனர்.


குறவனைப் பிடித்து எல்லோரும் விசாரிக்கவே, அவன் சற்று விழித்தான். பிறகு சரியான விதத்தில் சில அடிகள் கொடுத்ததும் கோழிக் குஞ்சுகளைத் தான் திருடியதாக ஒப்புக் கொண்டான்.

அன்றைக்கு அவன் கோழிக் குஞ்சுகளுக்குத் தீனியைத் தூவியிருக்கிறான். கோழிக் குஞ்சுகள் தின்ன ஆரம்பித்ததும் மயக்கம் போட்டு விழுந்துவிட்டன. இதைக் கண்ட கோழி உடனே எங்களிடம் ஓடிவந்து உதவி கோரியிருக்கிறது. அதன் எச்சரிக்கையைச் சரியான நேரத்தில் கவனிக்காததால் மயங்கிய குஞ்சுகளை அவன் எடுத்துச் சென்றுவிட்டான்.

உண்மையைத் திருடன் ஒப்புக் கொண்டதும் கோழி தன் கண்களை மூடிவிட்டது. குஞ்சுகளைத் தான் காப்பாற்றத்தவறிவிட்டோம்என்றநினைவு வாட்ட, சரியான குற்றவாளியைக் காட்டி கொடுத்துவிட்டு உயிரை விட்ட கோழி எல்லோருடைய நினைவிலும் நிற்கிறது. திருடன்கூட கோழியின் இந்தப் புத்திசாலித்தனத்தால் கூனிக் குறுகினான்.

சித்திரப் புதிர்-11 விடை

1. யாக்.
2. ஜப்பான் — கிமானோ
3. கிவி.
4. ஆப்பிரிக்கா.



5. நீங்களே கண்டுபிடிக்கலாமே!



எது வீரம்?

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

வீரம், தைரியம் ஆகிய நிலைகளை இக்காலத்தில் பலர் உடல் பலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து ஆறுதல் அடைகிறார்கள். வலிமையான உடம்பு சிறந்த உடம்பு ஆகுமே ஒழிய வீரமுள்ள உடம்பு ஆகாது.

ஒரு சிலர்; அடியாட்களின் உதவியுடன் முரட்டுத்தனமாக நடப்பதைக் கண்டு, அவர்களை வீரம் உடையவர்கள் என்று தப்புக் கணக்கு போடக் கூடாது. அது முரட்டுத்தனமே ஒழிய வீரமாகாது. இராவணன், இரணியன், போன்றோர்களின் வீரம் முரட்டுத்தனமே!

சிலர் முட்டாள்தனமாக அப்பாவிகளை மிரட்டுவார்கள். தங்களைவிட வலிமையானவர்களையும், போலிகளையும் கண்டு பயப்படுவார்கள். அவர்கள் வீரர்கள் அல்லர்.

வீரம் அல்லது தைரியம் என்பது மனத்திலிருந்து வருவது. அது உடலைப் பொறுத்தது அன்று. தனக்கு 'வரக்கூடிய துன்பங்களைப் பயமின்றித் தாங்கும் நற்குணமே வீரம் அல்லது தைரியம் எனப்படும். அது ஆன்ம சக்தியாக விளங்குகிறது.

மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்தபொழுது அவருக்குக் குடல் நோய் வந்துவிட்டது. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அறுவைச் சிகிச்சை செய்வதற்கு முன் மயக்க மருந்து கொடுக்க முன்வந்தார்கள். உடனே காந்தியடிகள், தமக்கு மயக்க மருந்து வேண்டாம் என்றும் தமது கையில் பகவத் கீதையை வைத்துப் படிக்க அனுமதித்தால் போதும் என்றும் கூறிவிட்டார். அதுபோலவே டாக்டர்கள் செய்தார்கள். அறுவை சிகிச்சை இரண்டு மணிநேரம் நடந்தது. காந்தியடிகள் சிறிதும் அசங்காமல் கட்டிலில் படுத்துக்கொண்டே பகவத் கீதை படித்தார். இதைக் கண்டு டாக்டர்கள் வியந்து போனார்கள். இந்த மனவலிமைதான் சிறந்த வீரம்!

இலங்கையில் இராம—இராவணப் போர் நடந்தது. முதல் நாள் போரில் இராவணன் எல்லாவற்றையும் இழந்து தனியாளாக நின்றான். அக்கொடியவனை இராமபிரான் கொன்றிருக்கலாம். அதற்கு நியாயமும் இருந்தது. ஆனால் ஆயுதம் இல்லாதவனைக் கொல்லக் கூடாது என்ற கருத்தில் அவனை நோக்கி, "நீ இப்பொழுது ஆயுதங்களை இழந்து நிற்கின்றாய். உனக்கு ஒரு வாய்ப்புத் தருகிறேன். என் மனைவியைத் திருப்பித் தந்து பிழைத்துக் கொள் அல்லது நாளைக் காலை தகுந்த படைகளுடன் வா. இன்று போய் நாளை வா" என்றார். மன்னிக்கும் மனப்பான்மை உள்ளவன்தான் தண்டிக்கவும் உரிமை உடையவன் என்பது பழமொழி. இராமபிரானுடைய இச்செயல்தான் மிகச் சிறந்த வீரச் செயல்.

ஆகவே வீரம் என்பது மனவலிமைதான் என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

குறள் :

உள்ளம் உடைமை உடைமை;
பொருள் உடைமை
நில்லாது நீங்கி விடும்.


(வி)சித்திரச் செய்திகள்

பீரோவுக்குள் புலி!



அசாம் மாநிலத்தில் ராஜகாரி என்ற இடத்தில் உள்ள மோட்டார் தொழிற்சாலைக்குள், காட்டிலிருந்து வந்த ஒரு சிறுத்தை நுழைந்துவிட்டது. தொழிலாளர்கள் 'காச்மூச்' என்று சத்தம் போட்டார்கள். கடைசியாக ஒரு பீரோவுக்குள் அந்தச் சிறுத்தை புகுந்தது. அவ்வளவு தான்! தொழிலாளர்கள் சட்டென்று பீரோவைப் பூட்டி விட்டார்கள். உள்ளே சிக்கிக் கொண்டது சிறுத்தை! பிறகு, காட்டு இலாகா அதிகாரியிடம் அது ஒப்படைக்கப்பட்டது.

ராட்சத காளான்!



சில காளான்கள் உணவாகவும் பயன்படுகின்றன. சமீபத்தில், ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் ஒரு காட்டுப் பக்கத்தில் உணவுக்காகப் பயன்படும் ராட்சத காளான் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வளவு பெரிய காளானை அதற்கு முன் யாரும் பார்த்ததில்லை. 55 கிலோ எடையுள்ள அந்தக் காளான் பல குடும்பங்களுக்கு உணவாகப் பயன்படுமாம்!

சிங்கப்பூரில் பறவைப் பஞ்சம்!



சிங்கப்பூரில் ஏராளமான பலமாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுவிட்டதால், அங்கே அதற்கு முன் இருந்த எல்லாப் பறவைகளும் அங்கிருந்து வெளியேறிவிட்டன. சுமார் 300 வகைப் பறவைகள் முன்பு அங்கே இருந்தன. பறவைகள் இல்லாததால் சிங்கப்பூர் வெறிச்சோடி விட்டதாக நினைக்கிறார்கள். எனவே, இப்போது சிங்கப்பூர் அரசாங்கம் மறுபடியும் அந்தப் பறவைகளைக் குடியேற்ற வேண்டும் என்று முயற்சி செய்கிறது. இதற்காக கிறிஸ்டோபர் ஹெயில்ஸ் என்ற பிரிட்டிஷ் பறவையியல் அறிஞர் சிங்கப்பூருக்கு வந்திருக்கிறார்.

ஒல்லியாவதற்கு மருந்து



மிகவும் குண்டாக இருப்பவர்கள் இளைக்க, புதிய மருந்து ஒன்றை, சீனாவில் ஜியான் மருத்துவப் பல்கலைக் கழகத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள். மாத்திரை வடிவில் தயாரித்திருக்கிறார்கள். சீன மருந்து, மேல் நாட்டு மருந்து, பச்சிலைகள் முதலியவற்றைக் கொண்டு இந்த மாத்திரைகளைத் தயாரித்திருக்கிறார்கள். இதைப் பயன்படுத்திய குண்டர்களில் 100க்கு 90 பேர்கள் ஒல்லியாகி விட்டார்களாம்!



புலியைக் கொன்ற இளைஞன்!

தனது நண்பனின் உயிரைக் காப்பாற்றுவதற்காக ரேணிகான்சா என்னும் 18 வயது இளைஞன் ஒரு புலியைக் கல்லாலேயே அடித்துக் கொன்றான்!

அவன் தன் நண்பன் ராம்பிரசாத்துடன் வயலுக்குச் சென்றபோது புலி தாக்கியது. நல்லவேளை அருகே கற்கள் கிடந்தன. கொஞ்சம்கூடச் சளைக்காமல் அந்தப் புலி சாகும்வரை கற்களை வீசி அதைக் கொன்றான். புலியின் நீளம் 8 அடி!

107 வயது பாட்டி!



100 ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்தவர்களைச் சந்தித்து லெனின் கிராடில் சமீபத்தில் ஒரு கணக்கெடுத்தார்கள். அப்போது கிடைத்த தகவல் இது: 107 வயது நிறைந்த பாட்டி, 'அபனாசியா அப்ரமோங்னா.' அவள் இத்தனை ஆண்டுகளாக முழுக்க முழுக்கப் பழங்களையும் பாலையும் மட்டுமே உண்டு நோய் இன்றி வாழ்கிறாளாம். தன் 99 வயதில் மட்டும் ஒரே ஒரு தடவை பல் வைத்தியத்திற்காக டாக்டரை அணுகினாளாம்!



அமெரிக்கரை மிஞ்சிய இந்தியர்!

ஓமன் நாட்டில் மஸ்கட் நகரில் இந்தியன் சென்ட்ரல் ஸ்கூல் கட்டடத்தில் கலைவிழா ஒன்று சமீபத்தில் நடந்தது. அதில் சாப்பாட்டுப் போட்டி! மங்களூரைச் சேர்ந்த பாலகிருஷ்ண ஷெட்டி 24 மிகப் பெரிய வாழைப்பழங்களை ஒரே நேரத்தில் சாப்பிட்டுச் சாதனை புரிந்தார். 15 நிமிடங்களில் அவர் அதைச் சாப்பிட்டார். இதற்கு முன்பு உலக சாதனைப் பட்டியல் அடங்கிய கின்னஸ் புத்தகத்தில் அமெரிக்க டாக்டர் ரொனல்டு அல்கானு என்பவர் 17 வாழைப்பழங்களைச் சாப்பிட்டதாக இருக்கிறது. அமெரிக்கரை மிஞ்சிவிட்டார் இந்தியர்.



'பாப்பாதான் போப் ஆனது!

* லத்தீன் மொழியில் பாப்பா; தமிழில் தந்தை — கண்காணிப்பவர். பாப்பா என்பதுதான் போப்பாக மாறிவிட்டது!
* சென்னைக்கு வந்த போப், உலகிலுள்ள கோடிக்கணக்கான கத்தோலிக்க மக்களின் தனிப் பெரும் தலைவர்.
* முதல் முதலாகப் போப்பாக இருந்தவர் பெயர் இராயப்பர். (கி. பி. 33 முதல் 67). இவர் 264 வது வாரிசு.
* போலந்து நாட்டில் பிறந்த இவர், இளம் வயதிலேயே தாய் தந்தையரை இழந்தார். வறுமையுடன் வாடினாலும், நன்கு படித்து பி. ஏ. பட்டம் பெற்றார்.
* கல்லூரியில் படிக்கும்போது, ஓட்டப் பந்தயம், பனிச் சறுக்கு, நீச்சல் விளையாட்டு முதலிய விளையாட்டுகளில் நிகரில்லாதவராகத் திகழ்ந்தார்.
* இரண்டாம் உலகப்போரில் ஹிட்லரின் படைகள் இவரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். சிறையில் கல்லுடைத்தும், சமையல் வேலை செய்தும் துன்பப்பட்டார். அப்போது இவருக்கு வயது 19.
* போரில் ஹிட்லர் தோற்றதும் இவர் விடுதலை பெற்றார். சிறந்த கவிஞராகவும், எழுத்தாளராகவும் விளங்கினார். போலந்து நாட்டின் வீர வரலாற்றை நாடகமாக எழுதி, தன் உணர்ச்சிமிக்க நடிப்பினால் மக்களுக்கு விழிப்பு ஏற்படுத்தினார்.
* இவர் இருமுறை சாலை விபத்துக்கு ஆளானார். இரண்டாம் தடவை விபத்தில், கட்டுடன் படுத்திருந்த போது, இவருக்கு மனமாற்றம் ஏற்பட்டது. மதகுருவாக வரவேண்டும் என நினைத்தார்.
* குரு மடத்தில் சேர்ந்து படித்து குருவானார். தத்துவ ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றார். படிப்படியாக உயர்ந்து, போப் முதலாம் ஜான் பால் மறைந்ததும் 1978 இல் இவர் போப் ஆனார்.
* இவர் பொறுப்பேற்கும்போது, கண்டு களித்த மக்களின் தொகை 4 லட்சம்!
* இவர் உலக மக்களின் அன்பைப் பெறும் நோக்கத்துடன் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் என்று 25-நாடுகளில் பயணம் செய்து, பிறகு நம் நாட்டுக்கு வருகை தந்தார்.
* 'வேலை செய்வதற்காகவே மனிதன். மனிதனுக்காக வேலை இல்லை' என்பது இவரது குறிக்கோள்.
* முகமது அலி அக்சா என்பவன் ஒருமுறை இவரைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டான். ஆண்டவன் அருளால் உயிர் தப்பினார்! இரத்தம் கொட்டும் நேரத்திலும், இவர் ஆத்திரப்படவில்லை; கோபப்படவில்லை. 'அவனை மன்னிக்கிறேன்' என்று கூறினார். அத்துடன், சிறையில் இருந்த அவனை நேரிலே சென்றும் சந்தித்து நட்புடன் உரையாடினார்.
* ஒவ்வொரு நாட்டுக்கும் இவர் விமானத்தில் சென்று இறங்கியதும், முதல் வேலையாக, அங்கே மண்டியிட்டுத் தரையை முத்தமிடுவார்.
* ரோமில் டைபர் நதிக்கு அருகிலுள்ள 'வாடிகன்' நாட்டுக்கு இவரே தலைவர். அது ஒரு தனி நாடு. முழுச் சுதந்திரம் உடையது. தனி ரேடியோ, தனி தபால்; போலீஸ் இலாகா, ஸ்டாம்பு, நாணயங்கள், உலகப் புகழ்பெற்ற காட்சியகம், புராதன அரண்மனைகள் எல்லாம் அங்கு உண்டு. பலமொழிகளில் அங்கிருந்து பத்திரிகைகள் வெளிவருகின்றன.

— "தினமணி கதிர்"ல் பி.ஏ. தாஸ் எழுதிய கட்டுரையிலிருந்து
திரட்டியவர்: வாணு.

விளையும் பயிர்

கராத்தே உலகில் ஒரு புதிய வீரன்! பெயர் எஸ்.வி. கார்த்திக். பத்திரிகை, ரேடியோ, டீ.வி. ஆகியவற்றில் அவனுடைய பெயர் இப்போது அடிபட்டு வருகிறது. அவனுக்கு என்ன வயது தெரியுமா? ஆறேதான்! பள்ளியில் இரண்டாம்வகுப்புப் படிக்கிறான்! ஆனால் கராத்தே ஆட்டங்களை அனாயாசமாக ஆடிக்காட்டுகிறான்! மூன்று வயது முதலே அவன் மேடை ஏறி, நிகழ்ச்சிகளைக் காட்டியுள்ளான்! சென்னையிலும், வெளியூர்களிலும், டீ.வி.யிலும் பல பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளான். இந்தத் திறமை அவனுக்கு எப்படி வந்தது?

இயல்பாகவே வந்துள்ளது என்று சொல்லுகிறார் அவனுடைய அப்பா திரு விஸ்வா. அவர் ஒரு கராத்தே ஆசிரியர். ஜப்பானில் கராத்தே பயிற்சி பெற்று பட்டம் பெற்றவர். பல்கலைக்கழக மாணவ மாணவியருக்குக் கராத்தே கற்பிப்பவர். அவருடைய பயிற்சிகளைக் கூர்ந்து கவனித்து வந்த



சிறுவன் கார்த்திக்குக்கு இளமையிலிருந்தே கராத்தே ஆட்டம் எளிமையாக வந்துவிட்டது.

சென்னை வண்ணாரப்பேட்டையில் சமீபத்தில் கராத்தே பள்ளி ஒன்று திறக்கப்பட்டது. அந்த விழாவில் சிறுவன் கார்த்திக்கின் நிகழ்ச்சி எல்லோரையும் கவர்ந்தது. சமீபத்தில் திரு விஸ்வாவின் கராத்தே பேட்டி டி.வி.யில் ஒளிபரப்பானது. அப்பொழுது சிறுவன் கார்த்திக்கும் அப்பாவுடன் கராத்தே டெமான்ஸ்டிரேஷன் செய்து காட்டினான்.

"ஜப்பானியச்சிறுவர்கள் கராத்தே பயிற்சியில் அதிகமாக ஈடுபட்டுள்ளனர். அவர்கள் அதிகாலை 5 மணி முதல் 7 மணிவரை கராத்தே பயில்கின்றனர். பிறகு பள்ளிக் கூடம். மாலையில் மற்ற விளையாட்டுக்கள். எதிர்காலத்தில் ஒரு நல்ல குடிமகனாக வருவதற்கு இளமையிலேயே ஒழுங்கும் உழைப்பும் போதிக்கப்படுகிறது" என்று திரு விஸ்வா கூறுகிறார்.

கேளுங்கள்; சொல்லுகிறோம்

* நம் தமிழ்மொழியில் சிறுகதைகள் எப்போது தோன்றின?

— ஆர். பிரபாகர், மயிலம்.

முன்பே கதைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனாலும், தமிழ் மொழியில் வீரமாமுனிவர் எழுதிய 'பரமார்த்த குரு கதைகள்' தான் முதல் முதலாக நாம் காணும் தமிழ்க் கதை என்று கூறலாம்.

* கணித மேதை இராமானுஜம் இளம் வயதிலேயே இறந்துவிட்டாரே. அவர் எவ்வாறு இறந்தார்? திருமணம் ஆனவரா?

— வி. எம். பாரதி, விலாங்குளம்.



காச நோயால் இறந்தார். அக்காலத்தில் (1920 ல்) காச நோய்க்கு நல்ல மருந்துகள் இல்லாததால், 32 வது வயதிலேயே அவரை இழக்க நேரிட்டது. அவருக்கு 1909 ல் திருமணம் நடந்தது.

* அன்னாசிப் பழத்தில் விதையே இல்லையே! எப்படிச் செடி உண்டாகும்?

— சி. கமலம், திருச்செந்தூர்.

அன்னாசிப் பழத்திற்கு விதை கிடையாதுதான். ஆனாலும், அதன் பல பாகங்களும் செடி வளர்க்க உதவும். அதன் உச்சியில் முடியைப் போல் இருக்கிறதே, அதை நட்டுப் பயிர் செய்யலாம்; பழத்தின் அடியிலுள்ள காம்பைத் துண்டுகளாக வெட்டி வைத்துப் பயிர் செய்யலாம். வேர்களிலிருந்து உண்டாகும் குருத்துக்களிலிருந்தும் பயிர் செய்யலாம்.

* இப்பொழுது இந்தியாவில் ஆரியபட்டா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் உள்ளதே. ஆரியபட்டர் கணித மேதையா? வானவியல் அறிஞரா?

— சு. தணிகைவேல், சிறுகரும்பூர்.

இரண்டும்தான். அவர் எழுதிய 'ஆரியபட்டீயம்' என்ற நூலில் நான்கு பகுதிகள் உள்ளன. காலத்தைக்கண்டுபிடிப்பது, அளவு முறைகளைக் கண்டுபிடிப்பது, வானவியலைத் தெரிந்துகொள்வது, எண் கணித முறையை அறிவது ஆகியவற்றை அந்த நூலிலே காணலாம்.

* சில பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் கதைப் புத்தகங்களையும், குழந்தைப் பத்திரிகைகளையும் படிப்பதால், படிப்பு கெடுகிறது என்று தடுக்கிறார்களே, சிலர் குழந்தைகளை அடிப்பதைக்கூடப் பார்த்திருக்கிறேன். இது பற்றித் தங்கள் கருத்து...?

— மின் சிவா, நாகர்கோவில்.

பள்ளிப் பாடங்களுக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும். ஓய்வு நேரத்தில் வம்பு பேசாமல், ஊர் சுற்றாமல், குறும்பு செய்யாமல் உபயோகமான புத்தகமோ, பத்திரிகையோ படித்தால், எந்தப் பெற்றோரும் தடுக்க மாட்டார்கள்; அடிக்க மாட்டார்கள்.

* மாயவரம் என்பதை மயிலாடுதுறை என்று ஏன் மாற்றினார்கள்?

— எஸ். ரகுராமன், சென்னை—33.



மாய்வதற்கு யாராவது வரம் கேட்பார்களா? மயூரம் என்பதுதான் மாயவரம் ஆகிவிட்டது. மயூரம் என்றால் மயில்,. உமை

யம்மையார் மயில் வடிவம் எடுத்து வந்து, சிவபெருமானை வழிபட்டதால் மயிலாடுதுறை என்று பெயர் பெற்றது.

*** காவிரி என்ற பெயர் காகம் விரித்ததால் தான் வந்ததா? விளக்கிக் கூறுவீர்களா?**

— இரா. நைனுமலைராஜ், குன்றக்குடி.

'காவிரி' என்ற பெயர் எப்படி வந்தது என்பதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. சூரபத்மன் என்ற அசுரனின் கொடுமைக்குப் பயந்து இந்திரன் சீர்காழியில் ஒரு சமயம் மறைந்து வாழ்ந்து வந்தானும். அப்போது, அவன் இறைவனை வழிபடுவதற்காக ஒரு நந்தவனம் அமைத்தானும். அந்த நந்தவனத்திலிருந்த செடிகள் தண்ணீரில்லாமல் வாடினவாம். அதனால், இந்திரன் விநாயகரை வேண்டினனும். உடனே, விநாயகர் காக்கை வடிவம் எடுத்து மேற்குத்தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியான சைய மலைக்குப் பறந்து சென்று, அங்கு தவம் செய்து கொண்டிருந்த அகத்திய முனிவரின் அருகிலிருந்த கமண்டலத்தைக் கவிழ்த்துவிட்டாராம். அந்தக் கமண்டலத்திலிருந்து நீர் ஆறாகப் பெருகி, இந்திரனின் நந்தவனம் செழிக்கச் செய்ததாம். காகத்தால் கவிழ்க்கப்பட்டு விரிந்து பெருகியதால், இந்த ஆற்றை 'காகவிரி' என்று அழைத்தார்களாம். அதுவே பிறகு, 'காவிரி' ஆனதாம். இப்படிக் கூறுகிறது கந்தபுராணம்!



*** குழந்தை எழுத்தாளர். சங்கம் நடத்திய போட்டிகளில் அதிகமான தடவை பரிசு பெற்றவர் யார்?**

— வள்ளிதாசன், இராஜபாளையம்.

உங்களுக்கு மிகவும் பிடித்தமானவர் தான் மூன்று முறை ஏ. வி. எம். தங்கப் பதக்கங்களைப் பெற்றார். கதைகள், (வி)சித்திரச் செய்திகள் எழுதுவதோடு, சித்திரப் புதிரும் போடுகிறரே. 'ஆழி' என்ற ஆழி வே. ராமசாமிதான் அவர்!

*** அரசாங்கத் தேர்வில் கால்குலேட்டர் பயன்படுத்தலாமா?**

— டி. தயாநிதி, திண்டுக்கல்.

தேர்வு எழுதும் மாணவர்கள் எல்லாருக்கும் கால்குலேட்டரைப் பயன்படுத்தும் வசதி இருக்குமானுல் பயன்படுத்தலாம். இல்லாவிடில், வசதி படைத்தவர்கள் மட்டுமே கால்குலேட்டரைப் பயன்படுத்தி, சுலபமாகவும், விரைவாகவும் தேர்வு எழுதிவிடுவார்கள்.

*** ஒருவரின் தலையின் அளவை வைத்து, உடம்பின் உயரத்தைக் கூற முடியும் என்கிறார்களே. அது சரியாக இருக்குமா?**

— கே. நீலாவதி, குன்னத்தூர்.

வளர்ந்தவர்களுக்கு இது சரியாக இருக்கும். தலையின் அளவைப் போல், அவர்களின் உயரம் ஏழரை மடங்கு என்கிறார்கள். ஆனால், வளர்கின்ற குழந்தைகளுக்கு இது சரியாக இராது. குழந்தையின் தலையின் அளவு பெரிதாக அல்லவா இருக்கும்?

*** அரிச்சந்திரன் போல் உண்மையே பேசுபவர்கள் இப்போதும் இருக்கிறார்களா?**

— அ. சரவணராசன், திட்டக்குடி.

ஏன் இருக்க மாட்டார்கள்? எங்கேயாவது இருப்பார்கள். நான் எப்போதும் உண்மையே பேசுவேன் என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆகையால், அவர்களைக் கண்டுபிடிப்பது சுலபமல்ல.

*** 'மண்ணின் நல்ல வண்ணம் வாழலாம்' என்று பாடியவர் யார்?**

— என். சீதாபதி, திருவிடைமருதூர்.

திருஞான சம்பந்தர்.

*** ஹெலிகாப்டர் எந்தெந்த வகையில் உதவுகிறது?**

— ப. ஏழுமலை, சென்னை—33.

வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்க, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொட்டலங்களைக் கொண்டு செல்ல, பயிர்கள் மீது பூச்சி மருந்து தெளிக்க, தபால்களைக் கொண்டு செல்ல, போர்க்காலங்களில் காயம் அடைந்தவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல, படைகளுக்கு உணவுப் பொருள்களை வழங்க ஹெலிகாப்டர்கள் மிகவும் உதவுகின்றன.

ஜீப், டாங்குகளையும் பாலம் கட்டும்போது பாலத்தின் பல பாகங்களையும் ஹெலிகாப்டர்கள் தூக்கிச் செல்லுகின்றன.

*** திரு. வி. க. பிறந்த ஊர் 'துள்ளம்' என்ற சிற்றூர் என்று படித்தேன். அது எங்கு இருக்கிறது?**


— கே. நரசிம்மன், ஒசூர்.



செங்கற்பட்டு மாவட்டத்தில்.

* புலி — காட்டெருமை இரண்டும் சண்டை போட்டால் எது ஜெயிக்கும்?

— பி. பரமேஸ்வரன், சிங்கம்புணரி.



சில சமயங்களில் புலி; சில சமயங்களில் காட்டெருமை.

* தனுஷ்கோடிக்குப் போயிருக்கிறீர்களா?

— தே. கமலா, செந்துறை.

முன்பே போயிருந்தால், அங்கு நீராடியிருக்கலாம். இப்போது அந்த நீராடு துறை இருக்கும் இடமே தெரியவில்லையாம்! 1964 ல் வீசிய பெரும் புயலில் மூழ்கிவிட்டதாம்!

* சிலப்பதிகாரத்தில் தங்களைக் கவர்ந்த பாத்திரம் எது?

— மூ. தொல்காப்பியன், சுந்தரப்பெருமாள் கோயில்.

'தீர விசாரியாமல் கோவலனைக் கொலை செய்து விட்டோமே!' என்று வேதனைப் பட்ட பாண்டிய மன்னனாகிய நெடுஞ்செழியன் சிம்மாசனத்திலே உயிரை விடுகிறாரே, அவரைப் போல் உள்ளத்தைக் கவரக் கூடிய ஒரு பாத்திரத்தைக் காண முடியுமா?

* 'மெக்காலே கல்வித் திட்டம்' என்கிறார்களே, அப்படியானால் என்ன?

— சி. குமாரசாமி, மதுரை — 20.

ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்டபோது, மெக்காலே என்ற ஆங்கிலேயர் இந்திய அரசின் சட்ட மந்திரியாகவும், பிறகு இங்கிலாந்தின் யுத்த மந்திரியாகவும் இருந்தார். அவர் ஓர் எழுத்தாளர்; கவிஞர்; அரசியல் வாதி.. அவர் காலத்தில் இந்தியர்களுக்கு ஆங்கிலக் கல்வி கற்றுத்தர வேண்டுமென்று வற்புறுத்தினார். அவர் விரும்பியபடி ஆங்கிலக் கல்வி பள்ளிகளில் சொல்லிக் கொடுக்கப்பட்டது. ஆங்கில அரசாங்கத்தில் குமாஸ்தாக்களாக வேலை பார்ப்பதற்கு மட்டுமே அந்தக் கல்வி உதவியது. ஆனால் சுயமாகச் சிந்தனை செய்யவும், உயர்வு பெறவும் உதவும் கல்வியாக அது இருக்கவில்லை. இதைத்தான் 'மெக்காலே கல்வித் திட்டம்' என்கிறார்கள்.

* ரசாயன உரம் என்கிறார்களே, அது எங்கு கிடைக்கிறது?

— கு. மதுரை முத்து, மேலூர்.

இது ஒரு செயற்கை உரம். பயிர்களுக்குத் தேவையான நைட்ரஜன், பாஸ்வரம், பொட்டாசியம், முதலிய ரசாயனப் பொருள்களிலிருந்து உற்பத்தி செய்கிறார்கள்.

* கொரில்லாப் போர் என்கிறார்களே? அது என்ன 'போர்?

— ஆர். ஜவஹர், கோவை — 15.

யுத்தம் செய்வதில் அது ஒரு முறை. கும்பல் கும்பலாகச் சிலர் சேர்ந்து கொள்வார்கள். நேருக்கு நேராகச் சண்டை போடாமல், மறைந்திருந்து திடீர் திடீரென்று தாக்குவார்கள். இந்தக் கொரில்லாப் போரில் எந்தவிதமான ஒழுங்கோ, கட்டுப்பாடோ இருக்காது. இந்தப் போர் முறையை ஒழுங்குபடுத்த 1874 ல் நடந்த சர்வதேச மாநாட்டில் சில விதிகளை வகுத்தார்கள். ஆனால், அந்த விதிகளை எந்த நாட்டினரும் பின்பற்றவில்லை.

* சென்னை நகரிலுள்ள மாணவர் மன்றத்தை ஆரம்பித்தவர் யார்? இன்றைய தலைவர் யார்?

— மு. சிவக்கொழுந்து, திருக்கோவிலூர்.

1931 ல் தொடங்கப் பெற்றது இந்த மன்றம். இது தோன்றக் காரணமாயிருந்தவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்: சிறுவை மோகனசுந்தரம், தண்டை பார்த்தன் சம்பந்தன். இம்மன்றம் வளரப் பெரிதும் உதவியவர்கள்; டாக்டர் தருமாம்பாள் அம்மையார், தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து.

இப்போது இதன் தலைவர்: புலவர் கோ. வில்வபதி.

* நம் தமிழ்நாட்டில் எங்கெங்கு குகைக் கோயில்கள் இருக்கின்றன?

— ஆர். வேதவல்லி, ஸ்ரீரங்கம்.

திருச்சி, கழுகுமலை, சித்தன்னவாயில் முதலிய இடங்களில் இருக்கின்றன.

* 'பார்சிகள்' என்று சொல்லுகிறோமே, அவர்கள் யார்?

— ச. கோமேதகவேலு, சென்னை — 28.

இவர்கள் ஈரான் நாட்டிலிருந்து வந்தவர்கள். பாரசீகம் என்பது அதன் பழைய பெயர். அந்த நாட்டில் சாரதூஷ்டிரர் என்பவர் ஒரு மதத்தை ஏற்படுத்தினார். அந்த மதத்திற்கு சாரதூஷ்டிர மதம் என்று பெயர். பாரசீகத்தின் மீது அராபியர்கள் படையெடுத்த போது, அந்த மதம் அழிந்து, இஸ்லாம் மதம் பரவியது. அப்போது இஸ்லாம் மதத்தில் சேர விரும்பாதவர்கள், நம் நாட்டுக்கு வந்து குடியேறினார்கள். பாரசீகத்திலிருந்து வந்ததால், 'பார்சிகள்' என்று அழைக்கப்படுகிறார்கள்.



இருளப்பன் ஒரு பாம்புப் பிடாரன் — பக்கத்துக் கிராமங்களில் வீடு, வயல்களில் — தோட்டம் தோப்புகளில் எங்காவது விஷப் பாம்புகளைக் கண்டால் போதும் — இருளப்பனுக்குச் சொல்லி அனுப்பிவிடுவார்கள். இது தவிர, அவன் ஒரு மலைப்பாம்பை எப்போதும் வைத்திருப்பான். அதைக் கழுத்தில் மாலை போலப் போட்டுக் கொண்டு கிராமம் கிராமமாகப் போய்ப் பிச்சை எடுத்து வருவான். அதில் அவனுக்கு ஒருரூபாய்—ரெண்டு ரூபாய் கிடைக்கும்.

இருளப்பனுக்கும்— அவன் பிழைப்புக்கும் ஒரு சோதனை வந்தது.

இருளப்பன் தன் பாம்பை ஒருகூடையில் போட்டு அழுக்குத் துணி ஒன்றால் மூட்டை கட்டி அதைக் காலடியில் போட்டுக் கொண்டு படுத்து விடுவான். மலையடி ஓரமாய்க் கிடந்த பாழடைந்த மண்டபத்தில் அவன் வாசம். சின்னனுக்கும் அவனை நன்றாகத் தெரியும்.

பங்காரு என்பவன் மாம்பட்டியில் வசித்து வருபவன். அவன் கொஞ்சம் திருட்டுப் பேர்வழி. அவனுக்குப் பக்கத்து வீடு குப்பனின் வீடு. குப்பன் ஆசையோடு தன் மைத்துனனின் வீட்டிலிருந்து ஒரு வெள்ளைக் கோழியைப் பிடித்து வந்திருந்தான். அந்தக் கிராமத்தில் யாரிடமும் வெள்ளைக் கோழி கிடையாது. எனவே, இது அவனுக்கு ரொம்பவும் பெருமையாக இருந்தது.

குப்பன் அன்றைக்கு நெருங்கிய உறவினரின் வீட்டுக் கல்யாணத்துக்கு அடுத்த ஊருக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஆசையான கோழியை ஒரு பெரிய கூடைக்குள் போட்டு மூடி, பங்காருவிடம் கோழியைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு மனைவியுடன் கல்யாணத்துக்குப் போனான். பங்கார்ருவுக்கு ரொம்ப நாளாய் அந்தக் கோழியின் மீது ஒரு கண். இப்போது நல்ல சமயம் கிடைத்தது. குப்பன் நகர்ந்ததும் கோழியைப் பிடித்துக் கறி சமைத்துச் சாப்பிட்டுவிட்டான்.

அன்றைக்குப் பார்த்தா பாம்புப் பிடாரன் இருளப்பன் பிச்சைக்கு அவன் வீட்டுக்குப் போக வேண்டும்?

சட்டென்று பங்காருவுக்கு ஒரு யோசனை —

மாலையில் குப்பன் வீட்டுக்கு வந்ததும் வராததுமாய் அவனிடம் ஓடினான் —

"அப்பா — குப்பா — நான் எவ்வளவோ ஜாக்கிரதையாத்தான் பார்த்

தூக்கிட்டிருந்தேன் உன் கோழியை. ஆனா பாரு. சித்தே நேரம் உள்ளே போனேன். அந்த நேரம் பார்த்து இங்கே ஒரு பாம்பாட்டி வர, அவன் தோளிலே போட்டிருந்த மலைப் பாம்பு கோழி வாசனையைப் பிடிச்சுக்கிட்டு இறங்கிப் போய்க் கோழியைக் கவ்வ — அதைக் கவனிக்காம பாம்பாட்டி சில்லறையை எண்ணிக்கிட்டு இருக்க, நான் வந்து பார்க்கிறேன். கோழி முழுக்க பாம்பு வாயிலே கெடந்துச்சு! அப்புறம் அந்தப் பாம்பாட்டியை என்ன செய்து என்ன பிரயோசனம்? அவன் பாவம், பிச்சைக்காரன். கையைப்பிடிச்சுக்கிட்டுக்கெஞ்சினான் போய்த் தொலைன்னு விட்டுட்டேன்.''

மெய் போலவே நாடகமாடினான் பங்காரு.

இதில்ஏதோ சூது இருக்கிறதுஎன்று புரிந்து கொண்டான் குப்பன். மலையடி வாரத்துக்குப் போனான். பாம்பாட்டியைக் கண்டான், பேசினான். பாவம், இருளன் அதிர்ந்து போனான். இருந்தாலும் உண்மையை வெளியே கொண்டு வர வேண்டாமா? அவனுக்கு வழி புலப்படவில்லை.

குப்பன் வழக்குத் தொடர்ந்தான்.

வழக்கும் வழக்கம்போல் சின்னானிடம் வந்தது.

சின்னான் விசாரித்தான்.

''என்னய்யா... பாம்புக்காரரே — உன் மலைப்பாம்புதான் குப்பன் வீட்டு வெள்ளைக் கோழியை முழுங்கிச்சாம். நான் கண்ணாலே பார்த்தேன்னு பங்காரு சொல்றாரு... நீ என்ன சொல்றே...?''

''இது ரொம்ப அடாவடிங்க...நான் பிச்சை கேட்க பங்காரு வீட்டுக்குப் போனதுதான் உண்மை. பக்கத்து வீடு பூட்டிக் கிடந்துச்சு. பூட்டிக் கிடக்கிற வீட்டிலே போய் எப்படிப் பிச்சை கேட்பேன்? நான் அந்த வீட்டுக்குப் போகவுமில்லே; என் மலைப்பாம்பு கோழியை முழுங்கவுமில்லே... இதுலே ஏதோ சூது இருக்குதுங்க..''

''என்னப்பா பங்காரு... இருளப்பன் எல்லாமே பொய்யினு சொல்றாரு. நீ என்னடான்னா கண்ணாலே பார்த்தேன். குப்பனோட வெள்ளைக் கோழியை அவனோட மலைப்பாம்பு தான் முழுங்கிச்சுங்கிறே...''

''உண்மைதாங்க... நான் என் கண்ணாலே பார்த்தேங்க. நான் ஏனுங்க பொய் சொல்லப் போறேன்...?''

''ஏம்பா குப்பா, உன் கோழியைப் பற்றி ஏதாவது சொல்ல இருக்குதா?''

''இதோ பாருங்க... இந்த வெள்ளை இறக்கைங்க என் கோழியோட இறக்கைங்க...''

''ஏம்பா பங்காரு... நீ பார்த்த கோழியோட இறக்கையா இது?''

''ஆமாம், ஆமாம்... இதேதான்... அதே வெள்ளைக் கோழியோட இறக்கைதான்.''

''ஆமாம் குப்பா... இந்த இறக்கையை எங்கேயிருந்து எடுத்து வந்தே?''

''பங்காரு வீட்டுக் கொல்லையிலே கிடந்து எடுத்தேங்க. குப்பையிலே கெடந்துச்சு...''

பங்காருவுக்கு என்னவோ செய்தது....

''ஏம்பா, மனுஷன்தான் தனக்கு வேண்டியதை எடுத்துக்கிட்டு வேண்டாததைத் தூக்கி எறிஞ்சுடுவான். மலைப்பாம்பு கோழியை அப்படியே முழுங்கிடுச்சுன்னா, இந்த இறக்கைங்க எங்கேயிருந்து பங்காரு வீட்டு வாசல்லேவந்தது? கோழியைத்திருடிக் கறி சமைச்சுச் சாப்பிட்டியே... அந்த இறக்கையை அப்புறப்படுத்த மறந்துட்டியே...! கோழி திருடின கள்ளனை இறக்கையே காட்டிக் கொடுத்துடுச்சு. கோழியைத் திருடியதுமில்லாம, கொன்னுட்டு ஒரு அப்பாவி மனுஷன் மேல் பொய்யும் பழியும் சுமத்தியதற்காக — சரியான தண்டனையை பங்காருவுக்கு விதிக்க நாட்டாண்மைக் காரரே தீர்மானிக்கட்டும்...'' என்று சொல்லி இருளப்பனை,சின்னான் விடுவித்தான்.

நாட்டாண்மைக்காரர் பங்காருவுக்கு இருநூறு ரூபாய் அபராதம் விதித்தார்.

இருநூறுரூபாயைவாங்கி இருளப்பனுக்கும், குப்பனுக்கும் கொடுத்து விட்டார்.

கிடைத்த பணத்தில் குப்பன் வேறு ஒரு வெள்ளைக் கோழி வாங்கினான். இருளப்பன், மலையடிவாரத்தில் ஒரு சின்ன கீற்றுக் கொட்டகை போட்டுக் கொண்டு நிம்மதியாய் வாழ்ந்தான்.

தீரர் சத்தியமூர்த்தி



நம் நாடு விடுதலை பெறப் பாடு பட்ட முக்கியமானவர்களில் இவர் ஒருவர். தாய்மொழியான தமிழிலும் அன்னிய மொழியான ஆங்கிலத்தி லும்மிகச்சிறப்பாகப்பேசக்கூடியவர்.

புதுக்கோட்டை மாவட்டம் திரு மயம் என்ற ஊரில், சுந்தர சாஸ்திரி என்னும் பெரிய சமஸ்கிருத பண்டித ரின் மகனாய்ப் பிறந்த இவர், வக்கீ லுக்குப் படித்துப் பட்டம் பெற்றார். ஆயினும், இவருக்கு வக்கீல் தொழிலில் ஈடுபாடு ஏற்படவில்லை. அரசியலிலே ஈடுபட்டு நான்கு முறை சிறை சென்றார்.

இவர் சென்னை மாநிலச் சட்டசபை யிலும், இந்தியச் சட்டசபையிலும் உறுப்பினராயிருந்து ஆங்கில அரசாங் கத்தைத் திணற வைக்கும் வகையில் கேள்விகள் கேட்பார். வெள்ளைய ருக்கு இவரைக் கண்டாலே ஒரு பயம்!

இவர் சென்னை நகர மேயராயிருந் தார். அப்போதுதான் பூண்டி நீர்த் தேக்கத் திட்டம் நிறைவேற்றப்பட் டது.

கல்வியிலும், இசையிலும், மிகுந்த பற்றுதல் உடையவர்.

இவருடைய வாழ்க்கை வரலாறு கிட்டத்தட்ட அரசியல் வரலாறாகவே இருக்கும்.

பிருந்தாவனக் கவியரங்கம்

இயற்கை அழகு



வண்ண வண்ணக் கோலத்தில்,
வான வில்லின் அழகைப் பார்.
எண்ண எண்ண மனத்திலே
இன்பம் பொங்கி வருது பார்!

குயில்கள் கூவும் சோலையில்,
குரங்கும் கூட மரத்திலே
உறங்க மறுத்துக் கனிகளை,
உண்ணு கின்ற அழகைப் பார்!

மயில்கள் தங்கள் தோகையை,
மகிழ்ந்து விரித்து அழகுடன்,
ஒயிலாய் ஆடும் காட்சியை
உற்று நீயும் நன்கு பார்!

முயலும் துள்ளித் துள்ளியே
மிகவும் மகிழ்ச்சி கொண்டுமே
பயமில் லாமல் திரிவதைப்
பார்பார், இதுதான் இயற்கையே!
— ப. அம்பிகா (11,325), கோவை.


அம்மா அம்மா ஓடிவா...

அம்மா, அம்மா, ஓடிவா
அவச ரமாய் ஓடிவா.
அடுத்த அறைக்கு ஓடிவா
அநியா யத்தைக் காணவா!

நெல்லு மூட்டை அருகிலே
நிறைய எலிகள் கூடியே
பல்லால் ஓட்டை போட்டுமே
பரப ரப்பாய்த் தின்னுதே!

ஆறு எலிக் குஞ்சுகள்
அரிசி நெல்லைத் தின்னுதே
ஆறு எலிக் குஞ்சுக்கும்
ஆதரவாய் பெரிய எலி

அருகி லேயே இருப்பதால்
அடிக்கப் பயமாய் இருக்குதே!
விரைந்து நீயும் வரணுமே!
விரட்டி அடிக்க வேணுமே!
— வி. ரமேஷ் (2586), சென்னை—18.



இந்தியத் தாய்

எழுபது கோடி முகமுடையாள் — எனினும்
இந்தியத் தாய்க்கு ஓர் இதயம்
அழுவதும் சிரிப்பதும் நம்மாலே — இதை
அறிந்தே நடப்போம் இனிமேலே



ஒருமன துடனே பழகிடுவோம் — என்றும்
உத்தமர் காந்தியின் வழிசெல்வோம் —
பாரதத்
திருத்தாய் புதல்வர் நாமென்றே — நித்தம்
திடமுடன் புதுமை புரிந்திடுவோம்!

இமயம் முதலாய்க் குமரிவரை-யாவும்
இந்தியத் தாயின் உடமைகளாம் — நல்ல
சமயம் பார்த்துக் கெடுப்பவரைச்
சாய்த்துச் சரித்திரம் படைத்திடுவோம்!

— முருகு. தெய்வநாயகம்.
10726 தூத்துக்குடி

ஒன்றும் ஒன்றும்



ஒன்றும் ஒன்றும் இரண்டாகும்
ஒற்றுமை உணர்வே உயர்வாகும்
இரண்டும் ஒன்றும் மூன்றாகும்
இனிய பேச்சே உரமாகும்
மூன்றும் ஒன்றும் நான்காகும்
முத்துத் தமிழே மூச்சாகும்
நான்கும் ஒன்றும் ஐந்தாகும்
நாளும் கற்பது வளமாகும்
ஐந்தும் ஒன்றும் ஆறாகும்
அறிவை வளர்ப்பது நூலாகும்
ஆறும் ஒன்றும் ஏழாகும்
ஆத்திரம் அடைவது பாழாகும்
ஏழும் ஒன்றும் எட்டாகும்
ஏழைக்கு இரங்குதல் நன்றாகும்,
எட்டும் ஒன்றும் ஒன்பதாகும்
எளிமை வாழ்வே இன்பமாகும்
ஒன்பதும் ஒன்றும் பத்தாகும்
உண்மை உரைத்தல் சொத்தாகும்
பத்தும் ஒன்றும் பதினொன்றே
பகைவருக்கிரங்குதல் மிக நன்றே!

— கு.வெ. பாலசுப்ரமணியம், (11175),
பவானி.

மைசூர்ப் பாகு.



அக்கறையாய்ச் சர்க்கரையில்
செய்து வைத்த பாகு
அக்கா அதற்கு வைத்தபெயர்
அசல் மைசூர்ப் பாகு
பக்குவமாய்க் கடலை மாவும்
பாதி யளவு நெய்யும்
முக்கால் பங்கு சீனியிலே
முருகலாகச் செய்தாள்.
சொக்கத் தங்கம் போலவே
ஜொலிக்கும் வண்ணம் இருக்குமே.
பொக்கை வாயில் போட்டாலும்
பூவைப் போலக் கரையுமே
வைக்க வாயில் இனிக்குமே
வந்து சுவைத்துப் பாருமே.
அக்கம் பக்கம் எங்குமே
அதட்ட யாரும் இல்லையே!

— ஆர். ஜெ. ஜெய்குமார், (11384),
மதுரை — 2.

விவேகானந்தர்



புவனேஸ்வரியம் மாளின்
புனித மகனாய்ப் பிறந்தார்
நவமணி யாக ஒளிரும்
நற்குணம் பலவும் பெற்றார்.

இறைவைக் காணும் நோக்கில்
எங்கும் துணிந்து சென்றார்
குறையிலா இராமகிருஷ்ணர்
குருவாய்க் கண்டு மகிழ்ந்தார்.

மேலை நாடுகள் நமது
மேன்மை உணரச் செய்தார்.
சீலம் மிகுந்த அவரே
சிறந்த விவேகானந்தர்.

— இரா. மாரியப்பன் (1043),
இராஜபாளையம்.



டாக்டர் பக்கம்

சில மாதங்களுக்கு முன்பு திண்டிவனம் அருகே செங்கேணிக் குப்பம் என்ற கிராமத்தில் 'தட்டம்மை' என்ற நோய் பரவியதால், இருபத்து மூன்று குழந்தைகள் மிகவும் பரிதாபமான முறையில் உயிர் நீத்தார்களே, உங்களுக்கு நினைவு இருக்கிறதா?

தட்டம்மை எனப்படும் அந்நோய் குழந்தைகளுக்கு மட்டுமே வரக் கூடியது. நம் அறியாமையினாலும், அலட்சியத்தினாலும் அந்நோயை ஆரம்பத்திலேயே கவனிக்காவிட்டால், உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடியது. அதற்கு உதாரணம்தான் செங்கேணிக் குப்பத்தில் உயிர் நீத்த இருபத்து மூன்று இளம் தளிர்கள்!

தட்டம்மை 'மீஸல்ஸ்' என்ற வைரஸ் கிருமிகளால் உண்டாவதால் இதை 'மீஸல்ஸ்' (Measles) என்றே ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள். தமிழில் இதற்கு 'மணல் வாரி அம்மை' என்ற காரணப் பெயரும் உண்டு.

இந்நோய்க் கிருமிகளின் இருப்பிடம் வழக்கம்போல அசுத்தமான காற்றும், சுகாதாரமற்ற சூழலும்தான்.

இந்நோய் எல்லாக் குழந்தைகளுக்கும் வருமா? இல்லை. ஒன்று முதல் ஐந்து வயது வரையிலான குழந்தைகளுக்கே பெரும்பாலும் வரும். அதிலும் சத்துக் குறைவான குழந்தைகள், நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாத குழந்தைகள் என்றால் இந்நோய்க் கிருமிகளுக்கு ஒரே கொண்டாட்டம்! உடனே அவர்களிடத்தில்போய்ஒட்டிக்கொள்ளும்!

பிறகு, காற்றின் மூலமும் நோயாளிகளுடன் நேரடித் தொடர்பு கொள்வதன் மூலமும் மற்றவர்களுக்குப் பரவிவிடும்.

இந்நோய்க் கிருமிகள் உடலுக்குள் புகுந்தவுடன் நோய் ஆரம்பமாவதில்லை; சுமார் பத்து நாட்களுக்குப் பிறகுதான் நோயின் அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கும்.

முதலில் சாதாரண ஜலதோஷம் போல்தான் நோய் ஆரம்பிக்கும். காய்ச்சல், உடல்வலி, கண் வலி, தொண்டைவலி, இருமல் என்று தொந்தரவுகள் தொடரும். நான்காம் நாளில் வாயின் உட்புறத்தில் சிவப்பாய்ப் புள்ளி புள்ளியாய்ச் சில கொப்புளங்கள் உண்டாகும்.

ஐந்தாவது நாளில் முகம், கழுத்தின் பின்புறம், உடல், கை, கால், ஆகிய இடங்களில் மணல்வாரி தெளித்தது போல, கருஞ்சிவப்பு நிறத்தில் சிறிய கொப்புளங்கள் வெளிப்படும். இதனால்தான் இந்நோயை 'மணல்வாரி அம்மை' என்றும் அழைக்கிறார்கள்.

தகுந்த சிகிச்சை முறைகளை மேற்கொண்டால் எட்டாவது நாளில் இக்கொப்புளங்கள் தானாகவே மறைய ஆரம்பிக்கும். காய்ச்சல், உடல்வலி, இருமல் ஆகியவை குறைந்து, நோயின் தீவிரமும் மட்டுப்படும்.

'தட்டம்மைதானே, என்ன செய்யும்?' என்று நோயை அலட்சியப்படுத்துபவர்களுக்குத்தான், மோசமான 'பின் விளைவு நோய்கள்' தோன்றி, குழந்தைகளை ஆபத்தின் எல்லைக்கே அழைத்துச் சென்று விடும்!

என்ன 'அந்தப் பின்விளைவு நோய்கள்' என்றுதானே கேட்கிறீர்கள்? சொல்கிறேன்:

தட்டம்மை கண்ட குழந்தைகளுக்குக் காதுக்குள் புண் ஏற்பட்டு, சீழ் வடிந்து, காது கேட்காமல் போக வாய்ப்பிருக்கிறது. தொண்டைப்புண், நிமோனியாக் காய்ச்சல், மூளைக் காய்ச்சல் வந்து குழந்தைகளின் உயிருக்கும் ஆபத்து வரலாம். கண்ணின் கிருஷ்ணப் படலத்தில் புண் ஏற்பட்டுப் பார்வையையே இழக்கக்கூடும். வாந்தி பேதி, வயிற்றலரிச்சல் ஆகியவற்றால் உடல்நலனுக்குக் கேடு விளைவிக்கும்.

இத்தனை துன்பங்கள் படவேண்டுமா, என்ன? நோய் கண்ட முதல் மூன்று நாட்களுக்குள் குழந்தைகளை மருத்துவரிடமோ அல்லது ஆரம்ப சுகாதார நிலையத்திலோ காண்பித்துத் தகுந்த ஆலோசனையைப் பெறலாம், இல்லையா?

— தட்டம்மைக்குத் தனிப்பட்ட முறையில் எந்தவித மருந்தும் கிடையாது. ஆனால் காய்ச்சல், இருமல், உடல்வலி, கண்வலி ஆகியவற்றைக் குறிப்பிட்ட சில மருந்துகளால் குணப்படுத்தி, நோயின் தீவிரத்தைக் குறைப்பார் மருத்துவர். இதன் மூலம் ஆபத்து தரக் கூடிய பின் விளைவு நோய்களைத் தவிர்க்கிறார் அல்லவா?

— தட்டம்மைக்குத் தடுப்பு ஊசி இருக்கிறது. குழந்தைகளுக்கு ஒன்பதாவது மாதத்தில் இதைப் போட வேண்டும். ஒரே ஒரு தடவை போட்டால் போதும்; வாழ்நாள் முழுவதும் தட்டம்மை வராது.

— அதேமாதிரி ஒரு முறை தட்டம்மை வந்துவிட்டால் மறுமுறை அந்தக் குழந்தைகளுக்குத் தட்டம்மை வராது என நம்பலாம்.

— நோய் கண்ட குழந்தைகளைப் பிறருடன் சேராவண்ணம் பிரித்து வைப்பது நல்லது. குறைந்தது இரண்டு வாரங்களுக்காவது குழந்தைகளைப் பள்ளிக்கோ அல்லது பொது இடங்களுக்கோ அனுப்பாமல் இருப்பதும் நல்லது. இதன் மூலம் மற்ற குழந்தைகளுக்கு நோய் பரவுவதைத் தவிர்க்கலாம்.

— கிணற்று நீரை குளோரின் போட்டுச் சுத்தம் செய்தபின் உபயோகிக்க வேண்டும்.

— குடிநீரைக் கொதிக்க வைத்து வடிகட்டிக் குடிக்க வேண்டும்.

— நோயாளி உபயோகித்த துணிகளையும், மற்ற பொருட்களையும் மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது.

இனிமேல், தட்டம்மை வராமல் தடுத்து விடலாமல்லவா?

அரசன் செய்தது சரி. ஆனால் நீங்கள் செய்தது?

* ஹாலி வால் நட்சத்திரத்தைப் பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் சகோதரி என். ராதிகா எழுதிய கட்டுரை, படிக்க, பாதுகாக்கப்பட வேண்டியது. பாராட்டுக்கள்.

— என். சந்திரன், (4785), பாவட்டக்குடி.

* சி. சுப்பிரமணியம் அவர்களின் 'குழந்தைப் பருவம்' விந்தையாகவும் விறுவிறுப்பாகவும் எங்கள் சிந்தனைக்கு விருந்தாகவும் அமைந்திருந்தது.

— ஆர். எஸ். இராஜ், சீர்காழி.

* 'கழைக் கூத்தாடி' கதையல்ல; நிஜம். எங்கள் ஊரில் இதுமாதிரி ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளது.

— திருமதி எம். சித்தாமணி, சிதம்பரம்.

* பிருந்தாவனக் கதையரங்கத்தில் 'அச்சாணி' என்ற கதையில் திடீரென்று வேலன் சங்கராக மாறியது ஏன்?

— எஸ். ஸ்ரீராம் (9206), கடையம்.

* 16 பக்க வண்ணப் படக்கதையின் மூலம் மகாராஜா பிரதாப சிம்மனின் வீரத்தைத் தெரிந்து கொண்டோம்.

— எம். விஜயா, சேலம்—2.

* வீர பிரதாபசிம்மனின் வண்ணப் படக்கதையை நான்கைந்து முறை படித்துவிட்டேன். ஆனந்தி—வினுவுக்குஇரட்டை சபாஷ்.

— தேரழுந்தூர் மு. ஜானகிராமன், மயிலாடுதுறை.

* 'கேளுங்கள் சொல்கிறோம்' அறிவை வளர்க்கும் பகுதி. அதற்குப் பக்கங்களை அதிகப்படுத்துங்கள்.

— இடவை இராஜன், திருவிடைமருதூர்.

* 'கேளுங்கள்; சொல்கிறோம்' பகுதி பொது அறிவு, அறிவியல், மருத்துவம், இலக்கியம், போன்ற பல துறைச் செய்திகளைப் பசுமரத்தாணிபோல் பிஞ்சு உள்ளங்களில் பதிய வைக்கும் வகையில் இருக்கிறது. ஆசிரியர்களும்கூடப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய அருமையான பொக்கிஷம்.

— எஸ். கண்ணன், வடலூர்.

* 'என் கதையைக் கேளுங்கள்' பகுதியில் படங்கள் வரைபவரின் பெயர் 'ஸாகர்' தானே? இது என் ஊகம். சரியா?

— என். கனகராஜன் (8070), சமத்தூர்.

(சமத்தூர்க் கனகராஜன் உண்மையிலேயே சமர்த்தர் தான் என்பது தெரிகிறது! — ஆசிரியர்.)

* (வி)சித்திரச் செய்திகள் ஒவ்வொன்றும் எங்களை ஆச்சரியத்தின் எல்லைக்கே அழைத்துச் சென்றுவிடுகின்றன. பாராட்டாமல் எப்படி இருப்பது?

— பா. கிருஷ்ணதாஸ், கும்பகோணம்—1.

* 'உண்மைக்கும் பொய்க்கும் எவ்வளவு தூரம்?' என்ற புதிர்க்கதை என் மனத்தைக் கவர்ந்தது.

— இரா. தமிழ்வாணன் (11929), சென்னை—4.

* 'புதைத்து வைத்த செம்பு' திகைக்க வைத்த கதையைக் குழந்தைக் கவிஞர் மிக அழகாகக் கூறியிருக்கிறார்.

— சேது பிரபாகரன், மேலூர்.

* அடுத்த மாதக் கோகுலம் எப்பொழுது வரும்! — ஏங்க வைக்கிறது 'அக்கினி பூதம்!'

— தொ. மீனாட்சிசுந்தரம் (11788), சிங்கம்புணரி.

* பிருந்தாவனம் பகுதியில் 'அரசர் செய்தது சரியா?' என்ற புதிர்க்கதையில் அந்த வீரன் வலது கையை இழந்ததாகக் கூறுகிறான். ஆனால், படத்தில் இடது கையை இழந்திருக்கிறானே! இப்படி நீங்கள் செய்தது சரியா?

— அ. சேஷசாயி, மேட்டூர் அணை—1.

* 'பிரெஞ்சு நாட்டு நகைச்சுவைகள்' ஒவ்வொன்றும் கற்கண்டுச் சுவை போலத் தித்தித்தன.

— அ. சரவணராஜன், திட்டக்குடி.

* அன்பு மலர்களால் அகமகிழ்ந்து அக்கினி பூதத்தால் பயம் நீங்கி, விண்வெளியில் விந்தையைக் கண்டு வியந்து மகிழ்ந்தோம். அன்புக் கோகுலமே, உனது நான்காவது ஆண்டு சிறப்படைய எமது வாழ்த்து.

— பா. ரமாபிரபா (3492),
பா. சுகந்தி (6894)
பா. ராஜேஷ்குமார் (5344), மதுரை.

* சின்னுவைப் போல் ஒவ்வொருவரும் புத்திசாலியாய் இருந்தால், எந்த இடத்திலும் மோசடி ஏற்படாது.

— கி. ரெங்கேஸ்வரி (4480), திண்டுக்கல்.

சார், தபால்!...

கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர் பட்டியல்

3263 ச. சத்யா, D/o. துகிலி பா. சம்பந்தம், அரசினர் மேல்நிலைப்பள்ளி, இலப்பைக் குடிகாடு—621 108.

3264 மு. நவி, 5, தெற்கு வேளாளர் வீதி, சிங்காநல்லூர், கோவை—641 005.

3265 பா. சத்திய நாராயணன் No. 1181, 3வது குறுக்குத் தெரு, தா.பி. சத்திரம், சென்னை—10.

3266 G. சம்பத்குமார் No. 65, ஸ்ரீரங்கம்மாள் தெரு, சென்னை—21.

3267 சி. கோவிந்தராஜ், 17, தம்பைய ரெட்டி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை—33.

3268 V. ஜெயந்தி, 6, விஜயபாரா செட்டி தெரு, மயூரம்.

3269 அ. லதா, ஆனந்த பவன், பழைய தபால் தெரு, கும்மிடிப்பூண்டி—601 201.

3270 M.S. ரவிச்சந்திரன், 4B, 2வது தெரு, லத்தீப் காலனி, சென்னை—43.

3271 ஆ. ரம்யா, 17 S.B.I. காலனி, மாதவரம் நெடுஞ்சாலை, பெரம்பூர், சென்னை—11.

3272 ராஜீ நவி, 8, காமாட்சி அம்மன் கோயில் வீதி, பாண்டிச்சேரி — 605 001.

3273 ஆ. ப்ரியா, 17, S. B. I. காலனி, மாதவரம் நெடுஞ்சாலை, பெரம்பூர், சென்னை—11.

3274 சு. சங்கர், 2/34, பாபு ராஜேந்திர் பிரசாத் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை—33.

3275 வெ. இராசகோபாலன், D — 19, இராகிருஷ்ணா நகர், M. I. G. Flat, இராஜா அண்ணா மலைபுரம், சென்னை—8.

3276 S. செந்தில் குமார், 17, தர்மராய ரெட்டி தெரு, சுவால்பேட்டை, அரக்கோணம், N.A. Dist.,

3277 C.K. ரவி ராஜு, 19, உலகளந்தார் கோவில் தெரு, பெரிய காஞ்சிபுரம்—631 502.

3278 வி. ராஜேஷ், நெ.3, 17வது தெரு, நங்கைநல்லூர், சென்னை—61.

3279 V. உமா, No. 27, துக்காராம் முதல் தெரு, தி. நகர், சென்னை—17.

3280 S. ராமசுவாமி, 39, நடேச ஐயர் தெரு, தி. நகர், சென்னை—17.

3281 K. சங்கரன், 153, G.N.T. ரோடு, கும்மிடிப்பூண்டி.

3282 மு. இளங்கோ, 39, சுப்பிரமணி தெரு, புரசைவாக்கம், சென்னை—7.

3283 தா. பொற்கொடி, D/o. C. தாமோதரன், Professional Asst. Meteorological Office, Airport, Meenambakkam, Madras-27.

3284 வி. குமணன், 29, ஆயர்பாடி திருக்கழுக்குன்றம்—603 109.

3285 க. கனகதிலீபன், 25—B, கிருஷ்ணாராவ் தெரு, திண்டுக்கல்—624 007.

3286 பி. ரா. ஜெய்சங்கர், S/o. ராமசந்திரன், No. 4, செல்லியம்மன் கோவில் தெரு, காவேரிப்பாக்கம்—632 508. N.A.

3287 B.R. ரவிசங்கர், S/o. B.K. ராமசந்திரன், No. 4, செல்லியம்மன் கோவில் தெரு, காவேரிப்பாக்கம்—632 508.

3288 கு. உமா பார்வதி, 113, கிழக்கு ரத வீதி, திண்டுக்கல்.

3289 N. கோகுல் குமார் C/o. R. நாராயணசாமி, 17, பொன்னகர் விஸ்தரிப்பு, திருச்சி—620 001.

3290 R. பாலசுப்பிரமணியன், S/o. V. இராமமூர்த்தி, 19, வாய்க்கால்கரைத் தெரு, பேரளம்—609 405.

3291 வெ. கணேஷ், த/பெ. ல. வெசு. மணியன், இளநிலை மின்பொறியாளர், மின்சார வாரியம், ஒட்டன்சத்திரம்—624 619.

3292 மு. பாலசுப்ரமணியன், D-56, 8வது குறுக்கு சாலை, தில்லை நகர், திருச்சி.

3293 S. ஹரிகிருஷ்ணன், 237, கொன்னூர் நெடுஞ்சாலை, அயனாவரம், சென்னை—23.

3294 பா. ஜகந்நாதன், த/பெ. ஆர். பி. சாரதி, சேளம்பாக்கம்—603 103.

3295 து. திருமுருகன், S/o. டாக்டர் செ. துரைசாமி, 1, வெஸ்ட்பரி ரோடு, உதக மண்டலம்—643 001.

3296 இரா. முருகன், S/o. இரா. இராசாராம், 34, நடேசர் சன்னதி, பழனி—624 601.

3297 சீனிவாச நாராயணன், C/o. சண்முகம் ஆசிரியர், பெரிய கரகப்பட்டி, பள்ளத் தூர் — 635 901.

3298 R. ஹரி, S/o. R. ராமசந்திரராவ், A.O. Union Engineer, Ithalar- 643 256, ஊட்டி.

3299 ஆ. ரமேஷ் பாபு, S/o. தீ. ஆனந்தன் செட்டியார், 33, காந்தி தெரு, கீழ்பென்னாத் தூர்—604 601.

3300 P.U. சிவகுமார், S/o. P.A. உமாபதி, வாணியர் தெரு, பென்னகரம்—636 810.


3301 பா. ஹரிஹரன், 15, பூக்கார வீதி, பாண்டிச்சேரி—1.


3302 து. கார்த்திகேயன், S/o. டாக்டர் செ. துரைசாமி, 1 வெஸ்ட்பெரி ரோடு, உதக மண்டலம்—643 001.

3303 S. அருன், 54, வடமாத்தாதி தெரு, திருவண்ணாமலை—606 601.

3304 K. ராமச்சந்திரன், S/o. R. கிருஷ்ணன், 210, சேலம் மெயின் ரோடு, காவேரிப் பட்டினம்—635 112.
3305 மு.க. மோகனச்செல்வி, D/o. முத்து கண்ணப்பன், அறிவகம், பச்சூர் (அஞ்சல்), 635 854.
3306 M. யோகேந்திரன், 19, பாலாஜி நகர், வேலூர்—632 002.
3307 பெ. செங்கோட்டுவேல், 121, வடக்கு வீதி, கொடுமுடி—638 151.
3308 பேராவி த. விஜயகுமார், வடக்கே வீடு, கிள்ளியூர்—629 157.
3309 கி. வெங்கடேசன், S/o. B. கிட்டு ஆச்சாரி, நல்லாத்தூர்—605 121.
3310 V. சுரேஷ், 26, தர்மராஜா கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை—15.
3311 V. புவனேஸ்வரி, 26, தர்மராஜா கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை—15.
3312 B. சுப்புலெக்ஷ்மி, 37, ராகவேந்திர மடம் தெரு, ஸ்ரீரங்கம், திருச்சி—620 006.
3313 K.P. ராஜ்குமார், S/o. S.P. குப்பா, 51, Dr. C.P. ராமஸ்வாமி ஐயர் ரோடு, அபிராம புரம், சென்னை—18.
3314 P. சுந்தரராஜன், S/o. A. பொன்னுச்சாமி, A.C.S. நிலையம், சக்தி ரோடு, கவுந்தப் பாடி—638 455.
3315 M. ஜெயந்தி, 38, அடஞ்சான் முதலி தெரு, மந்தவெளி, சென்னை—28.
3316 இரா. சுந்தரம், அரசு உயர்நிலைப் பள்ளி, 9ம் வகுப்பு, 'ஆ' பிரிவு, நத்தக்கடை யூர்—638 108.
3317 இரா. குமரேசன், S/o. B. இராஜு ஆசிரியர், 3/134, மாரியம்மன் கோவில் தெரு, நல்லாத்தூர், கடலூர் தாலுகா.
3318 S. சிவக்குமார், 118, ஹாஜி அப்பா தைக்காத் தெரு, காயல்பட்டணம்.
3319 ச. ஸ்ரீராம், C-177, 10 வது குறுக்கு, தில்லை நகர், திருச்சி—620 018.
3320 N. சந்திரகாசன், 20, சோமசுந்தரம் 3 வதீ தெரு, அயன்புரம், சென்னை—23.
3321 ப. தினேஷ்குமார், 10, வெங்கடாசல முதலி வீதி, புரசை, சென்னை—7.
3322 S. மகேஸ்வரன், S/o. V.M. சங்கரன், பாலூர், கொத்தூர்—635 818.
3323 G. பாலசுப்பிரமணியன், 320, ராஜ வீதி, கோவை—1.
3324 S. கிருஷ்ணமூர்த்தி, 192A, கார்மல் கார்டன் பள்ளி எதிரில், புலியகுளம் ரோடு, கோயமுத்தூர்—641 045.
3325 M. சந்தர், 9, ராஜேஸ்வரி தெரு, பெரம்பூர், சென்னை—11.
3326 R. சியாம் சுந்தர், 8/17, கிருஷ்ணம நாயுடு வீதி, உப்பிலிபாளையம், சிங்கநல்லூர், கோவை—641 015.
3327 V. ராஜேந்திரன், C/o. K.P. விவேகானந்தன், L-213, 9th கிராஸ் ரோடு, பெரியார் நகர், ஈரோடு.
3328 K.S. முரளி, 433, முனியப்பன் கோவில் தெரு, செவ்வாய்பேட்டை, சேலம்—2.
3329 மு.மா.ப. காந்தி, S/o. பழனிவேலு, 4/1/31, சுந்திரம் செட்டியார் தெரு, ஜலகண்ட புரம்—636 501.
3330 ஸ்ரீவித்யா, 12/52, ஹவுசிங் யூனிட், ரேஸ்கோர்ஸ், கோயமுத்தூர்—18.
3331 A. George Patrik, Benedictus, ஆசீர் அகம், அலங்காபுரம், மேற்கு நெய்யூர், குமரிமாவட்டம்
3332 A. Babitha Rajini, ஆசீர் அகம், அலங்காரபுரம், மேற்கு நெய்யூர், குமரி மாவட்டம்.
3333 S.V. தியாகராஜன், D/2, ஜவஹர் மெயின் ரோடு, N.R.T. நகர், தேனி.
3334 இல. ரமேஷ், 33, பி. டி. இராசன் சாலை, மதுரை—625 002.
3335 G.K. கோலப்பன், S/o. K. கணேசன், 7/18 D, தெப்பக்குளத் தெரு, திருச்செந்தூர்.15.
3336 D. அரசு, 102, தர்ம நகர், சூரமங்கலம், சேலம்—5.
3337 ரா. கமலேஷ், 45, லக்ஷ்மிபுரம், 8 வது தெரு, மதுரை.
3338 J. துரைராஜ், C/o. R. ஜோன் அந்தோணி, S.V.V.E. ஸ்கூல், கல்லூர் சந்தை—626053.
3339 T. ராஜ்குமார், S/o. P. தியாகராஜன், மச்சர்ஸ் காலனி, கல்லூர் சந்தை—626 053.
3340 துரை. ஆராவமுதன் மே/பா. துரை. இரா. துரையரசன், பரிபூரணத் தங்கம், 38, சாயாக்காரர் தெரு, விருதுநகர்—626 001.
3341 B. விஜய்குமார், 86, தெற்கு அக்ரஹாரம், தென்கரை, பெரியகுளம்—626 501.
3342 இ. சுஜாதா, 5A, சாலை முதலி தெரு, நரிமேடு, மதுரை—2.
3343 வே. கணேஷ் குமார், 66, பெரியார் தெரு, கோவில்பட்டி—627 701.
3344 நி. இலட்சுமி, 4—I, எல்டாம்ஸ் சாலை, ஏ.ஆர்.கே. காலனி, சென்னை—18.
3345 M.V. மணிவண்ணன், 26, துளசிங்க தெரு, பெரம்பூர், சென்னை—11.
3346 K. ஹரிஹரன், 9, தெற்கு மடவிளாகம், பாபநாசம்—614 205, தஞ்சாவூர் மாவட்டம்.
3347 இரா. சங்கரநாராயணன், 19, பெருமாள் கோவில் தெரு, கிருஷ்ணாபுரம்—627 759.
3348 இ. செல்வகுமார், S/o. K. இசக்கி (R.I.) 2/33, நீர்த் தெக்கத் தெரு, விளாத்தி குளம்—627 907.
3349 P. இராஜ்குமார், S/o. பாலகண்ணன், பில்டிங் சொஸைட்டி, குமார் இல்லம், சின்னமனூர்.
3350 ந. பாலாஜி, 4/6, வாஞ்சிநாதன் தெரு, மடிப்பாக்கம், சென்னை—91.

(இன்னும் வரும்)







கடலைக் கடைந்த கதை

கதை: ஆனந்தி
படம்: வினு




அவகாசம் வேண்டும். முதலில் மகாபலியுடன் சமாதானம் செய்து கொள்ளுங்கள்.
சமாதானமாய்ப் போவதா? அந்த அசுரனுடனா?
காரணம் இருக்கிறது. இந்தப் பாற்கடலைக் கடைந்தால் அமுதம் பெறலாம். ஆனால் அதைப் பெற அசுரர்களின் உதவியும் தேவை... அமுதம் அருந்திவிட்டால் உங்களுக்கு அழிவே இல்லை. பிறகு மகா பலிக்குப் பயப்பட வேண்டாம்!
ஒன்று மட்டும் நினைவில் வையுங்கள்! பாற்கடலிலிருந்து தோன்றும் எந்தப் பொருளுக்கும் ஆசைப்படக் கூடாது!
அமுதத்தை அடைய அசுரர்களும் போட்டி யிடுவார்களே..?
அதை நான் கவனித்துக் கொள்கிறேன்! நானே தேவர்களுக்கு அமுதத்தை வழங்குவேன்!
அப்படியானால் சரி!
தேவர்கள் பகவான் கட்டளைப் படி மகாபலியைக் காணச் சென்றார்கள்.
அரசே! தேவர்கள் சமாதானம் நாடி வருகிறார்கள்...
மரியாதை காட்டி அழைத்து வா!



மகாபலியின் அரசவையில் தேவர்கள் வந்தமர....
என்ன... யுத்தம் செய்து களைத்துப் போய் விட்டீர்கள் போலிருக்கிறதே...? ஹ... ஹா...
இந்திரன் கோபத்தை அடக்கிக் கொண்டு...
மகாபலி! பிணக்கை ஒதுக்கி வையும்! நாராயணன் அருளால் பாற்கடலைக் கடைந்து அமரத்துவம் அளிக்கும் அமுதம் எடுக்கப் போகிறோம். அதற்கு உங்கள் உதவி தேவை!
ஒரு கணம் யோசித்தான் மகாபலி.
அமுதம் பெற தேவர்களுக்கு உதவினால் அதை அசுரர் அடைவதற்கான வாய்ப்பும் இருக்கிறதே!
மகாபலி எழுந்து வந்து இந்திரனை ஆலிங்கனம் செய்தான்.
அமுதம் பெறும்வரை நமது பகையை மறந்து விடுவோம்!
பாற்கடலை தேவாசுரர்கள் அடைந்தனர்.
இந்திரா! எதை மத்தாகக் கொண்டு பாற்கடலைக் கடைவது?
மகாபலி! முதலில் மூலிகைகளைப் பறித்துப் போடுவோம்; பின்னர் மந்தரமலையைப் பெயர்த்து....


அசுரர்கள் அடியோடு மந்தர மலையைப் பெயர்த்தார்கள்.
தேவர்களே! பார்த்துக் கொள்ளுங்கள் எங்கள் பலத்தை!
தேவர்களும் அசுரர்களுமாய் மலையைத் தூக்கி வந்தார்கள்.
இதைப் பாற்கடலில் போட்டு மத்தாக்கிக் கொள்ளலாம்!
ஆனால் பாற்கடலை நெருங்கும் போது கனத்தைத் தாங்க முடியாமல் நழுவ விட....
ஐயோ! செத்தோம்!
நாராயணன் தோன்றினார். மலையை இலகுவாகத் தூக்கிக் கொண்டு போய்க் கடலில் போட்டார்.
மத்து தயார்! கயிறு கொண்டு வாருங்கள்!
தேவர்கள் வாஸுகியை அணுகி...
வாஸுகி! பாற்கடலிலிருந்து அமிர்தம் கடைந்தெடுக்க நீதான் உதவ வேண்டும்.
பகவான் சித்தம் அதுவானால் இதோ நான் தயார்!


வாஸுகி கயிறாகி மத்தான மந்தர மலையைச் சுற்றிக் கொள்ள நாராயணன் அதன் தலைப் பக்கம் சென்று...
தேவர்களே! என்னோடு சேர்ந்து கைகொடுங்கள்!
அரிஷ்டநேமி என்ற அசுரன் மகாபலியிடம் புகார் செய்தான்.
தேவர்கள் வாஸுகியின் தலையைப் பிடிக்க நாம் வால் பிடிப்பதா!
மகாபலி கோபமுற்றான்...
இந்திரனே! நாங்கள் வால் பிடிக்க மாட்டோம்! நாங்கள் போகிறோம்!
எதிர்ப்பை எதிர்பார்த்தே முதலில் தலைப்பக்கம் சென்ற பகவான் தம் யுக்தி பலித்ததில் உள்ளூர மகிழ்ந்து...
சரி நாங்கள் விட்டுக் கொடுக்கிறோம்; வால் பிடிக்கிறோம்!
வெற்றிக் களிப்போடு அசுரர்கள் தலைப்பக்கம் பிடிக்க...
ம்... விடாதீர்கள்!
வேகமாகக் கடையுங்கள்!


திடீரென்று மலை பாற்கடலில் அமிழ்ந்து போயிற்று!
ஐயோ! இப்போ என்ன செய்வது?
நாராயணா! நீயே துணை!
நாராயணன் மந்தர மலையையே தாங்கும் வலிமை கொண்ட ஓட்டுடன் ஆமை உருவம் எடுத்தார்...
அஞ்ச வேண்டாம்!
ஆமை, மலையை முதுகில் தாங்கி மேலே உயர்த்தியது.
நமோ நாராயணா!
ஆகா! உயர்ந்து விட்டது!
கடைகின்ற வேகம் அதிகரிக்க வாஸுகி வேதனை தாங்காமல் விஷாக்கினியைக் கக்கிற்று!
ஐயோ! தகிக்கிறதே!
மஹாவிஷ்ணு வாசுகிக்குப் பொறுமையை அருளினார். தேவாசுரர்களின் மனங்களிலும் புகுந்து ஊக்கமளித்தார்.


அப்படியும் அமிர்தம் வரவில்லை. மகாவிஷ்ணு தேவர்களோடு சேர்ந்து கடைய கடல் ஜந்துக்கள் சிதறின.
கடலிலிருந்து திடீரென்று கன்னங்கரிய ஆலகால விஷம் பொங்கிற்று!
ஐயோ! ஓடுங்கள்!
ஓடுங்கள்!
நாராயணன் உபதேசித்தார்:
மகாதேவனைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள்!
கைலாயத்தில்...
தேவி! ஆலகால விஷத்துக்கு அஞ்சி தேவர்கள் என்னிடம் சரணடைய வருகிறார்கள். உங்கள் கருணை அவர்களைக் காக்கும்!
சிவபெருமான் ஆலகாலத்தைத் தம் உள்ளங்கையில் ஏந்தி விழுங்கி விட்டார்!
விஷம் ஈசனின் வெண்ணிறக் கழுத்தில் தங்கி விட...
நீலகண்டா! மகாதேவா! ஹரஹர மகாதேவா!



ஆலகாலத்தை மகாதேவன் விழுங்கிய போது சில துளிகள் பூமியில் சிந்த, அதிலிருந்து விஷ ஜந்துக்கள் தோன்றின.
இதை வேதம் ஓதும் ரிஷிகளுக்குக் கொடுப்போம்.
மறுபடியும் கடைந்தார்கள். பாற்கடலிலிருந்து காமதேனு தோன்றியது.
சரி.
உச்சை சிரவஸ் என்ற வெள்ளை நிற குதிரை கம்பீரமாகத் தோன்றியதும் மகாபலி...
ஆகா! இது எனக்குத்தான்! எனக்கே தான்!
எடுத்துக் கொள்ளுங்கள்.
நான்கு கொம்புகளுடன் வெண்மையான ஐராவதம் உதித்தது.
உச்சைசிரவஸ் மகாபலிக்குச் சென்றதால் இதை இந்திரனுக்கு அளிப்போமே!
சரி!
தாமரை நிறத்தில் கௌஸ்துப மணி தோன்றவும்...
பிரபோ! நாராயணா! இதை அணியக் கூடிய தகுதி உங்களுக்கே.
ஆமாம் ஆமாம்.


மேலும் கடைய பாரிஜாத மரமும் அப்ஸரஸ்களும் உதிக்க...
மரமும் அழகிகளும் எங்களுக்கு வேண்டாம். இந்திரனே எடுத்துக் கொள்ளட்டும்!
எங்களுக்கு வேண்டியது அமிர்தம்! உம் கடையுங்கள்! வேகமாகக் கடையுங்கள்!
திடீரென்று ஒரு பொன்னிற ஒளி பரவ அழகே உருவான மகாலக்ஷ்மி தோன்றினாள்.
இந்திரன் ரத்னகசித சிம்மாசனம் அளிக்க அதில் அமர்ந்தாள்.
ஆ! என்ன தேஜஸ்!
நதிகள் புனித நீர் கொண்டு வர ரிஷிகள் அபிஷேகம் செய்தார்கள்.
ஹிரண்ய வர்ணாம் ஹரிணீம் ஸுவர்ண ரஜத ஸ்ரஜாம்!


சமுத்திர ராஜன், வருணன், விசுவகர்மா, சரஸ்வதி முதலியோர் பரிசுகளை வழங்கினர்.
பட்டாடைகளை ஏற்க வேணும்!
வைஜயந்தி கொண்டு வந்தேன்.
இதோ அணி கலன்கள்.
இந்த முத்து மாலையை அணிந்து கொள்!
பிரும்மா அளித்த தாமரை மலர் மாலையுடன் அனைவரையும் பார்த்தாள் லக்ஷ்மி.
இங்கு புருஷோத்தமன் என்று கூறக் கூடியவர் ஒருவர்தான்...
தாமரை மாலையை நாராயணன் கழுத்தில் போட்டுவிட்டு வணங்கினள் லக்ஷ்மி.
என்னை ஏற்க வேணும்.
மகாவிஷ்ணு லக்ஷ்மியைத் தம் மார்பில் தரித்துக் கொண்டார்.
இனி நான் ஸ்ரீநிவாஸனாகவே காட்சி தருவேன்.
மறுபடி பாற்கடலைக் கடைய...
ஆ! அதோ தன்வந்தரி!
அமுத கலசத்துடன் தன்வந்தரி!


தன்வந்தரி கரைக்கு வந்ததும் அசுரர்கள் ஓடிச் சென்று...
கொடு இங்கே!
பிடுங்கு! விடாதே!
அசுரர்கள் அமுத கலசத்தைப் பிடுங்கிக் கொள்ள, திகைத்துப் போன தேவர்கள்....
நாராயணா! என் செய்வோம்? நீயே கதி!
பயப்படாதீர்கள்! அமுதம் உங்களுக்கே!
சம்பரன் என்ற அசுரன் நியாயம் பேசினான்.
பாற்கடலைக் கடைய யோசனை கூறியது தேவர்கள்; அவர்கள் ஒத்துழைப்பையும் பெற்றோம். அவர்களுக்கு அமுதம் இல்லை என மறுப்பது அழகல்ல.
அசுரர்கள் கேட்கவில்லை.
நீ யார் உபதேசிப்பதற்கு? எத்தனை கஷ்டப்பட்டு கடைந்தோம்! நமக்குத்தான் அமுதம்!
தேவர்களுக்குக் கொடுக்க முடியாது!


ஆசை அதிகரிக்க அசுரர்கள் தங்களுக்குள்ளே சண்டை போட்டுக் கொண்டார்கள்...
எனக்குத்தான்! முதலில் நான்தான் அமுதம் அருந்துவேன்!
தொண்டா! இங்கே!
அப்போது அற்புதமான அழகுடைய பெண்ணொருத்தி தோன்றினள்.
அசுரர்கள் அவளைக் கண்டதும் அமுதத்தை மறந்தனர்...
ஆகா! என்ன அழகு!
சந்திரனின் குளுமை!
பூவின் மென்மை!
மதி மயங்கிய அசுரர்கள்.....
பெண்ணே நீ யார்? உன் பெயர் என்ன?
அமுதம் கிடைத்த உடனே வந்தாய்; அமுதத்தின் பயனே நீதான்!
என் பெயர் மோகினி அமுதத்தைக் கடைந்தெடுத்த பலசாலிகளான அசுரர்களைக் காண வந்தேன்!
ஆகா! மோகினி! என்ன பொருத்தமான பெயர்!



ஒற்றுமை குலைந்து இப்படி அமுதத்துக்காக உங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்கிறீர்களே!
தவறுதான்! இந்தா அமுதகலசம்! நீயே பங்கிட்டுக் கொடு!
மோகினி உருவில் வந்த நாராயணன் அசுரர்களை ஏமாற்ற விருப்பமின்றி...
மாவீரர்களே! மயக்கும் அழகு வாய்ந்த பெண்களைக் கண்டு மதியிழக்கக் கூடாதென்று தெரியாதா? என்னை எப்படி நம்புகிறீர்கள்!
அப்படியும் அசுரர்களுக்கு புத்தி வரவில்லை.
உன்னை நம்பாமல் வேறு யாரை நம்புவது? உன்கையால் தரப் படும் தண்ணீர் அமுதத்தைவிட உயர்வானது!
அப்படியானால் சரி, ஆனால் நான் எப்படி கொடுத்தாலும் ஏற்க வேண்டும். குறை கூறக் கூடாது!
ஊ ஹூம் வாய் திறக்க மாட்டோம்!
அசுரர்களே! தேவர்களே! மங்களஸ்நானம் செய்து விட்டு வந்து வரிசையாய் உட்காருங்கள்!
குளித்து, புத்தாடை புனைந்து தேவர்களும் அசுரர்களும் வந்து அமர, மோகினி அமுத கலசம் தாங்கிய வாறே நடனமாடினாள்.
உனக்கு நாட்டியம் கூடத் தெரியுமா? எங்கள் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!


அசுரர்கள் மெய் மறந்து போக மோகினி அவர்கள் அறியாமல் அமுதத்தைத் தேவர்களின் கரங்களில் வார்த்து வந்தாள்.
ஆஹா! என்ன அழகு! என்ன ஆட்டம்! சொக்குதே!
அசுரனான ராகு மட்டும் மயங்கவில்லை...
முட்டாள்கள்! மோகினியால் ஏமாற்றப் படுவதை அறியாமல் உட்கார்ந்திருக்கிறார்கள்!
மோகினி வேறு பக்கம் திரும்பி இருக்கும் போது 'சடக்'கென்று எழுந்து....
இப்படி சூரிய சந்திரர்களுக்கு இடையில் உட்கார்ந்து கொள்கிறேன்!
ராகு கரத்தில் மோகினி அமுதம் வார்த்தபோது அவன் வரிசை மாறி உட்கார்ந்திருப்பதை மோகினிக்கு உணர்த்த சூரிய சந்திரர்கள் ஜாடை காட்டினார்கள்.
உடனே மோகினி சுயரூபத்தில் நாராயணனாகக் காட்சியளித்தாள். சக்கரத்தைப் பிரயோகித்தார் விஷ்ணு.
என்னையா ஏமாற்ற நினைத்தாய்...!


அதற்குள் ராகு அமுதத்தை ருசித்து விட்டான். ஆனால் விழுங்கு முன் அவன் சிரம் துண்டிக்கப் பட்டதும் பிரும்மா தோன்றி...
ராகு! அமுதத்தை ருசித்ததால் உன் சிரம் மட்டும் சிரஞ்சீவித் தன்மை பெற்றுவிட்டது. நீ ஒன்பது கோள்களில் ஒன்றாக விளங்குவாய்!
பிரும்மதேவா! என்னைக்காட்டிக் கொடுத்த சூரிய சந்திரர்களை நான் விழுங்கும்படி வரம் அருள வேண்டும்.
அமுதம் உண்ட அவர்களை நீ அழிக்க முடியாது; ஆனால் சில சமயம் கிரகணமாக அவர்களைப் பிடிப்பாய்!
பிரும்மாவும் மகாவிஷ்ணுவும் மறைந்தனர். வஞ்சிக்கப்பட்ட அசுரர்களுக்கு ஆத்திரம்...
தாக்குங்கள் தேவர்களை! யார் பலசாலி பார்த்து விடுவோம்!
மகாபலியும் இந்திரனும் உக்கிரமாகப் போரிட்டனர்...
நாங்கள் அமுதமுண்டவர்கள். எங்களைக் கொல்ல முடியாது மகாபலி!
வஞ்சிக்கப்பட்ட நாங்கள் உங்களை இம்சிக்காமல் விட மாட்டோம்!
இந்திரன் வஜ்ராயுதத்தை எடுத்தான்...
கடைசி ஆயுதமாக இதைப் பிரயோகிக்க வேண்டியதுதான்.


மகாபலி கீழே சாய்ந்தான்.
ஐயோ!
ஆ!
மகாபலிக்கு சிகிச்சை அளித்து இளைப்பாறச் செய்து அசுரர்கள் காப்பாற்றினார்கள்.
வஜ்ராயுதம் கூடத் தங்களிடம் தோல்வி கண்டது. உங்களை வெல்ல யாரால் முடியும்?
அசுரகுரு சுக்ராச்சாரியார் அசுரர்களின் கர்வத்தைக் கண்டு எச்சரித்தார்.
நமது சக்கரவர்த்தியை அடக்க ஒருவரால் மட்டும் முடியும்! அவர் மகாவிஷ்ணு தான்!
தேவாசுரப் போர் அப்போதைக்கு ஓய்ந்தது. தேவர்கள் நாராயணனைத் துதித்து நன்றி தெரிவித்தனர்.
நமோ நாராயணா!
தேவர்கள் அமராவதியில் சுகமாக வாழ்ந்து வந்தனர்.

அற்புத உலகம் ஆரோவில்!



* மாத்ரு மந்திர் — ஆரோவில்லின் மையப் புள்ளி இதுதான். கோள வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

மீனாட்சி வான்மோகன் - அவிரசி முருகேசன்

''முருகா,... இன்னிக்கு என்ன தேதி தெரியுமா உனக்கு?'' என்று கேட்டாள், வள்ளி.

''இதுதெரியாதா எனக்கு? ஆகஸ்ட் பதினைந்து. மறக்க முடியாத நாள்,... இந்திய நாடு சுதந்திரம் பெற்ற தின மாச்சே அது...''

''அது மட்டுமல்ல, மகான் அரவிந்தர் பிறந்த நாளும் அதுதான். வங்காளத்தில் பிறந்து, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, பின்னர் புதுச்சேரிக்கு வந்து ஆன்மீகத்தில் தன் முழு வாழ்நாளையும் அர்ப்பணித்துக் கொண்டவர்...' அங்கே தம் பெயரால் ஓர் ஆசிரமத்தை ஏற்படுத்தினர்... அரவிந்தரின் பெருமையை அறிந்த பிரான்சு நாட்டுப் பெண்ணாகிய மீரா என்பவர் பாண்டிச்சேரிக்கு வந்து அரவிந்தரின் சிஷ்யையாகி, பின்னர் எல்லோருக்கும் அன்னையாக விளங்கினர்...''


''இப்ப அதைப் பற்றி ஏன் சொல்லறே வள்ளி...?''

''இரு, அவசரப்படாதே, அன்னையின் மனத்தில் ஓர் உயர்ந்த லட்சியம் உருவாயிற்று. உன்னதமான கனவு என்று கூடச் சொல்லலாம். மதம், இனம், மொழி, ஏன்... நாடுகள், அதன் எல்லைகள் என்ற வேறுபாடின்றி மனித சமூகம் அனைத்தும் ஒரே இடத்தில் ஒரே லட்சியத்தை நோக்கி வாழுவதென்று முடிவு செய்துவிட்டால் எப்படி இருக்கும்...?''


''அடேயப்பா... பிரமாதமாக இருக்கும்...''



* அன்னை.



* மகான் அரவிந்தர்.



* ஆம்பி தியேட்டர் நடுவே இருக்கும் ஸ்தூபி. இது பளிங்குக் கல்லால் ஆனது. இதற்குள்ளேதான் பல நாடுகளின் மண் துகள்கள் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

''அப்படிப்பட்ட லட்சியத்திற்குச் செயல் வடிவம் கொடுக்க விரும்பினார் ஸ்ரீ அன்னை. அம்மக்கள் கூட ஒன்று சேர்ந்து வாழுமிடமாக ஓர் இடத்தைத் தேர்ந்தும் எடுத்தார்...''

''அப்படியா, அந்த இடம் எந்த நாட்டில் இருக்கிறது.....?''

''அதுவா, அந்த இடம் வேறு எந்த நாட்டிலும் இல்லை, நம் இந்தியாவில், அதுவும் தமிழ்நாட்டில் தென்னாற்காடு மாவட்டத்தில், அமைந்துள்ளது... இந்தப் பாண்டிச்சேரியிலிருந்து சுமார் 11 கிலோ மீட்டர் தூரத்தில்தான்! 'ஆரோவில்' என்ற அந்த அற்புதமான நகரத்திற்கு 15 வருடங்களுக்கு முன்னால் சகல தேசங்களின் பிரதிநிதிகளின் முன்னர் கால்கோள் விழா நடந்தது.

ஆரோவில் ஒரு பரிசோதனைக் களம்! முடிவே இல்லாத கல்வி,மூப்பே இல்லாத இளமை, என்ற நோக்கில் செல்லுகிறது. அங்கு வசிக்கும் எல்லாரும் சராசரி 35 வயதிற்குட்பட்டவர்களே...''

''ஆரோவில்லில் என்னென்ன பார்க்கலாம்?''

''அதையெல்லாம் இப்போ சொல்ல மாட்டேன். நாளைக் காலையில் இருவரும் சைக்கிளில் செல்லுவோம். நேரிலே பார்ப்போம்.''

''அதுதான் சரி.''

''நீ விடுமுறைக்குச் சென்னையிலிருந்து வரப் போகிறாய் என்று தெரிந்ததுமே, உன்னை, 'ஆரோவில்'லுக்கு அழைத்துச் செல்வதென்று முடிவு செய்து விட்டேன்.''

\+ \+ \+

''முருகா, இதுதான் 'மாத்ரு மந்திர்' என்று சொல்லப்படக் கூடிய இந்த நகரத்தின் நடுமையம். உருண்டையாகப் பந்து வடிவில் தெரியும் பிரும்மாண்டமான கட்டடத்தின் நடுவே தியான மண்டபம் இருக்கிறது. உள்ளே எந்த ஒரு மத சம்பந்தமான உருவமும் இருக்காது. அவரவர் விருப்பத்திற்கேற்றபடி மௌனமாகக் கடவுளைத் தியானிக்கலாம்...''

''அடேயப்பா, எவ்வளவு உயரமாக இருக்கிறது...?''

''இதை யார் கட்டினார்கள்...?''

''இதை, இங்கு வாழ்கின்றவர்களே கட்டி வருகிறார்கள். யார் வேண்டுமானாலும் இந்தக் கட்டுமானப் பணியில் பங்கு கொள்ளலாம். அதோ, பார் ஆண்களும், பெண்களுமாக உயரத்தில் நின்று பணிபுரிகிறார்கள்... மாத்ரு மந்திர் என்றால், 'அன்னை ஆலயம்' என்று பெயர். இதன் நடுவில் உள்ள தியான மண்டபத்துக்குச் செல்வதற்கு நாலாபுறமும் படிகளால் ஆன வாயில்கள் உள்ளன.''

''அதோ அருகிலே வட்டவடிவமாக ஒரு திறந்தவெளி அரங்கம் தெரிகிறதே, அது என்ன வள்ளி?''

''அதற்குப் பெயர் ஆம்பி தியேட்டர்... இது வட்டமாக இருக்கிறதல்லவா? இந்த அரங்கின் மையத்தில் மலர்மொட்டு வடிவில் சலவைக் கல்

லால் ஆன ஒரு ஸ்தூபி தெரிகிறதே அதில் இந்த உலகத்தின் பல தேசங்களி லிருந்தும் கொண்டு வரப்பட்ட ஒவ் வொரு நாட்டின் மண் துகள்கள் போட்டுப் பத்திரப்படுத்தியுள் ளனர்...''

''யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்ற தத்துவம் இங்கேதான் நிஜ மாக்கப் படுகிறதோ, என்னவோ...?''

''அதோ மாத்ரு மந்திரின் வலப் புறத்தில் மரங்கள் நடுவே தெரிகிற கட்டடம்தான் சென்டர் கிச்சன். அதாவது, மைய சமையல் கூடம். இங்கு வாழும் மக்கள் அனைவரும் அங்கு சென்று தேவையான உண வைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். சமையல்காரர்கள் என்று இங்கு யாரும் கிடையாது. முறை வைத்துக் கொண்டு எல்லோரும் சமையலில் ஈடுபடுகின் றனர்...''

''ரொம்ப ஆச்சரியமாத்தான் இருக்கு... இங்கே எத்தனை பேர் இருக் கிறார்கள்? எல்லோரும் வெள்ளைக் காரர்கள் போலத் தோணுதே...?''

''இந்த இடத்தில் சுமார் 500 பேர் உள்ளனர். ஆரோவில் பரப்பு சுமார் 100 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது. பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா, ஹாலந்து, கானடா, போன்ற நாட்டு மக்களோடு சில இந்திய மக்களும், குறிப்பாகத் தமிழ் நாட்டவரும் இங்கு வாழ்கின்றனர்... இவர்கள் எல்லாம் ஒரே இடத்தில் வசிப்பதில்லை. பல குடியிருப்புக்களாகப் பிரிந்து, பிரிந்து வாழ்கின்றனர். அவற்றை செட்டில் மென்ட்ஸ் என்பர். இப்படிச் சுமார் 40 செட்டில்மென்ட்ஸ் இங்கே உள் ளன. இவர்கள் தனியே உணவு சமைத் துக் கொள்ள விரும்பினால் தானிய வகைகளைக் கொடுத்து விடுகின்றனர்.''

''இங்கு வேலை செய்கிறவர்கள் எவ் வளவு சம்பளம் பெறுகிறார்கள்...?''

''சம்பளமா? இவர்கள் ஒன்றும் வெறும் காசுக்காகத் தங்களது குபேர புரிகளை விட்டு வரவில்லை. மனிதர்களி லேயே மகோன்னதமான மனிதனாக மாற வேண்டும் என்பதுதான் இவர் களின் லட்சியம். இங்கே வசிப்பவர் கள் அனைவருமே 'ஆரோவிலி'யர் கள் என்று அழைக்கப்படுவர். தாங்கள் விரும்பிச் செய்யும் உழைப்பைத் தரு கின்றனர். அவரவர்களுக்கு எந்தெந் தப் பணிகளில் ஈடுபாடு உண்டோ, அவற்றில் மனமுவந்து செயல்படு கின்றனர்...''

''ஆச்சரியமான செய்திகள்தாம் இவை... அடடே... இது என்ன வள்ளி, நிறைய மரங்களும், செடிகளுமாய்க் காணப்படுகின்றனவே...?''

''ஓ... இதுவா? இதற்குப் பெயர் நர்சரி, இங்கே உலகில் உள்ள பல மரவகைகள், செடி வகைகள் எல்லாம் பயிராகின்றன... அடுப்புக்கரியிலி ருந்து செடிகளை வளரச் செய்யும் பரி சோதனை முறைகளும் நடைபெறுகின் றன. நீ, வழிநெடுக நிறைய செம்

• மாத்ரு மந்திர் அருகில் உள்ள ஆலமரம். இதன் அடியில்தான் ஆரோவில் சம்பந்தப்பட்ட பல தீர்மா னங்கள் முடிவெடுக்கப்பட்டன.



பருத்திப் பூக்களைப் பார்த்திருக்கலாமே...!''

''ஆமாம், ஆனால், அந்தச் செம்பருத்திப் பூக்கள் எல்லாம் மஞ்சள், இளம் சிவப்பு, வெள்ளை, ஊதா போன்ற பல வண்ணங்களில் உள்ளனவே.....?''

''ஆம்... செம்பருத்திப் பூக்களில் மட்டும் இங்கு சுமார் 100 வகைப் பூக்கள் உள்ளன. ஆரோவில்லின் பூவும் இதுதான்...''

''முருகா... இரட்டைக் கட்டடங்களாகத் தெரிகிறதே அது என்ன தெரியுமா...? இதுதான் 'பாரத் நிவாஸ்' எனப்படும் கலாசாரக் கூடம். இங்கே நவீன தியேட்டர் ஒன்று சுழலும் மேடையுடன் உள்ளது.''

''பார்க்க வேண்டியவை இவ்வளவு தானா அல்லது இன்னும் இருக்கிறதா...? வள்ளி...?''

''இன்னும் நிறையப் பார்க்க வேண்டிய இடங்கள் உள்ளன... வா... குயிலாப்பாளையம் சாலையில் செல்வோம்...''

இருவருடைய சைக்கிளும் அடர்ந்த மரங்கள் சூழ்ந்த இடத்தை அடைகின்றன...

''முருகா... இதுக்குப் பெயர் நியூ கிரியேஷன்.... இங்கே குழந்தைகளுக்கான அழகான பள்ளிக்கூடம் ஒன்றுள்ளது. அது தவிர மரத்தால் ஆன பொம்மை மற்றும் வெண்கலச் சிலைகள் வடிக்கும் கைவினை வேலைப் பாடுகளும் நடைபெறுகின்றன...''

''அதோ... அந்த இடம் என்ன வள்ளி...?''

''அதுவா... அதற்குப் பெயர் பிரட்டர்னிட்டி. இங்கேயும் பலவிதமான கைத்தொழில்கள், பின்னல் வேலைப்பாடுகள், மரவேலைப்பாடுகள் முதலியன நடைபெறுகின்றன. இன்னும் தள்ளிப் போனால் 'அஸ்பிரேஷன்' என்ற இடம் தெரியும். அங்கே போகலாமா...?''

''ஓ... போகலாமே...?''

''ம்... இதுதான் அஸ்பிரேஷன். இங்கே சரஸ்வதி என்ற அச்சகம் உள்ளது. அதோ தெரிகிறதே அது மருத்துவமனை. அங்கே அலோபதி, ஹோமியோபதி, ஆயுர்வேதம், அக்குபங்க்சர் போன்ற முறைகளில் சிகிச்சை கொடுக்கவல்ல நிபுணர்கள் உள்ளனர்...''

''வள்ளி.... இந்த இடத்தைப் பாரேன்....''

''இரு வர்றேன்.... இந்த இடத்திற்குப் பெயர் 'ஜெய்மா' எனப்படும். பெரும்பாலும் ஆரோவில்லில் இரண்டு பணிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ஒன்று காடு, மரம் வளர்ப்பது. அடுத்தபடியாக மாற்றுச் சக்தியைப் பயன்படுத்துவது. அதாவது, சோலார் எனர்ஜி (சூரிய சக்தி) மூலமாகப் பலவிதமான கருவிகளை இயக்கி வெற்றியும் கண்டுள்ளனர்.... முருகா... இன்னொன்றையும் நான் குறிப்பிட்டாக வேண்டும்... படிப்பறிவில்லாத சாதாரணக் கிராம மக்கள் வசிக்கும் இடமான குயிலாப்பாளையத்தில் கம்ப்யூட்டர் தயாரிக்கும் தொழிற்கூடமான 'ஆரோவில்' உள்ளது...''

''வள்ளி..... நிறைய விஷயங்களை நான் தெரிந்து கொண்டேன்....''

''இன்னும் தெரிந்து கொள்ளலாம். அதற்கு ஒருநாள் போதாது.''


முழுப்பெயர்!

உலகப் புகழ் பெற்ற ஓவியர் பிக்காஸோவின் முழுப் பெயர் என்ன தெரியுமா?


பாப்லோ டீ கோ ஜோசே ஃபிரான்ஸிஸ்கோ பௌலா ஜோன் நெபோமியூசெனோ கிறிஸ்பின் கிறிஸ்பினியானோ டி லா சான்டிஸிமா டிரினிடாட் ரைஜ் பிக்காஸோ.

முழுப் பெயரா அல்லது முழப் பெயரா என்ற சந்தேகம் வருகிறதல்லவா?

—என். செந்தில்குமார் (131)
கோவை—10.



பாரதி புதிர்-9



இந்தப் படம் பாரதியாரின் பாடலில் 4 வரிகளை நினைவூட்டுகின்றன அல்லவா? அவை எந்த வரிகள்? எந்தப் பாடலில் அவை காணப்படுகின்றன?

விடை 80-ஆம் பக்கம்.



தலைவலித் தைலம்

வி. ர. வசந்தன்

முரளிக்கு அவசரமாகப் பதினைந்து ரூபாய் தேவைப்பட்டது. அது மாதக்கடைசியாக இருந்ததால் அப்பாவிடம் பணம் இருக்காது. அம்மாவிடம் கேட்கலாமென்றால், அவள் 'என்ன, எதற்கு?' என்று கேள்விகளால் துளைத்துவிடுவாள். வேறு என்ன செய்வது?

அவனுடைய நண்பனான ராம்குமார் சற்று வசதியானவன். அவனது அண்ணன்மார் வெளியூரில் வேலைகளில் இருந்ததால் அவனுக்குப் பணம் அனுப்புவார்கள். எப்போதும் அவன் கையில் பணம் இருக்கும். அவன் முரளியை அடிக்கடி ஓட்டல்களுக்கு அழைத்துப் போய் இனிப்புகள் வாங்கிக் கொடுப்பான்; ஐஸ்கிரீம் வாங்கித் தருவான்; சில வேளைகளில் திரைப்படங்களுக்குக்கூட அழைத்துப் போவான். முரளியின் அம்மா காசை அவன் கண்ணில்கூட காட்டமாட்டாள். ஒரு ரூபாய் தருவதாய் இருந்தால்கூட அவன் நான்கு முறை கேட்ட பின்தான், முதல் தடவையாக அதைக் குறித்து யோசனை செய்வாள். ராம்குமார் அவனுக்காகச் செலவு செய்வதைப் பார்த்து முரளியிடம் ஒரு தாழ்வு மனப்பான்மைகூட வளர்ந்துவிட்டிருந்தது.

சென்ற வாரம் ஒருநாள் ராம்குமார் முரளியிடம், ''ஏண்டா முரளி, உங்க அப்பா உனக்கு 'பாக்கெட் மணி'யெல்லாம் கொடுக்க மாட்டாங்களா?'' என்று கேட்டான்.

முரளிக்கு ஒரே அவமானமாக இருந்தது. ''ஓ கொடுப்பாரே! நான்தான் கேட்பதில்லை'' என்று சமாளித்தான்.

''அப்படீன்னா, அடுத்த சனிக்கிழமை, நீதான் சினிமாவுக்கு அழைத்துப் போக வேண்டும்'' என்றான் ராம்குமார் உரிமையுடன்.

''அதனாலென்ன?, நிச்சயம் அழைத்துப் போகிறேன்..... கண்டிப்பாக நாம் போகலாம்'' என்றான் முரளி.

இன்று சனிக்கிழமை. முரளி அன்று சொன்னதை நம்பி ராம்குமார் அவனுக்காக நிச்சயம் காத்திருப்பான். இவன் போகாவிட்டால்.....சை, பிறகு அவன் முகத்தில் எப்படி விழிப்பது!

பணத்திற்கு இப்போது என்ன செய்வது? யோசித்து யோசித்துப் பார்த்தும், வழி தெரியாமல் குழம்பினான் முரளி.

திடீரென்று அவன் மனத்தில் ஒரு யோசனை பளிச்சிட்டது. உற்சாகத்தோடு குதித்து எழுந்தான் அவன்.

''அம்மா'' என்று அழைத்துக்

கொண்டு பின்கட்டை நோக்கி விரைந்தான். அவன் அன்பொழுக அழைத்துக் கொண்டு வந்தாலே ஏதாவது காரணம் இருக்கும் என்று ஜாக்கிரதையாகிவிடுவாள் அவன் அம்மா.

''என்ன விஷயம் முரளீ?'' என்று கேட்டாள் அம்மா.

''வந்தும்மா..... நம்ம பரண் மேலே கிடக்கிற குப்பை கூளமெல்லாம் ஒழிச்சு சுத்தம் பண்ணணும்னு சொல்லிட்டிருந்தியே, இன்னிக்கு எனக்கு லீவுதானே? பரண் மீது ஏறிச் சுத்தம் பண்ணலாமென்று பார்க்கிறேன்'' என்றான் முரளி.

ஏதேது தன் பிள்ளைக்கு இவ்வளவு அக்கறை என்று புரியாமல் அவள் விழிக்க, முரளி, ''...... ஆனா, அந்தப் பழைய தகர டப்பா, பாட்டிலையெல்லாம் கடையிலே போட்டு, காசை நான் எடுத்துக்குவேன்'' என்று முடித்தான்.

அவளுக்குப் புரிந்துவிட்டது. பிள்ளையின் கரிசனத்துக்குக் காரணம். பெருமூச்செறிந்தவளாக 'சரி' யென்று தலையசைத்தாள்.

பெரும் மகிழ்ச்சியுடன் குதித்தோடிப் பரண் மீது ஏறினான் முரளி. பல வருடங்களாகச் சுத்தம் செய்யாத தால் தகரங்கள், டப்பாக்கள், பாட்டில்கள் நிறையச் சேர்ந்து கிடந்தன.

கச்சா முச்சாவென்று பரண் மீது எழும் சத்தத்தைக் கேட்டு மனத்துக்குள் சிரித்துக் கொண்டாள் முரளியின் அம்மா.

சில மணி நேரத்தில் பரண் துடைத்துக் கழுவியதுபோல் சுத்தமாகிவிட்டது. வேண்டாத சாமான்கள் ஒரு கோணி மூட்டையில் கட்டப்பட்டு கீழே இறக்கி வைக்கப்பட்டிருந்தது.

உடனே அவசரமாகவெளியேபுறப்பட்டுப் போனான் முரளி. சிறிது நேரத்தில் பழைய சாமான்கள் வாங்கும் ஒரு வியாபாரியை அழைத்துவந்தான். பதினேழு ரூபாய்க்கு அந்தப் பழைய சாமான்கள் விலை போயின. ராம்குமாருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றிவிடலாம் என்று மகிழ்ச்சியில் மிதந்தான் அவன்.

அன்று மாலை ராம்குமாரைச் சந்திப்பதற்காக வெளியே கிளம்பிக்



கொண்டிருந்தான் முரளி. பக்கத்து அறையில் யாரோ முனகுவது கேட்டது.

அவன் உள்ளே எட்டிப் பார்க்க அவன் அம்மாதான் படுக்கையில் படுத்திருந்தாள். திடுக்கிட்டவனாக அவளருகில் போய், "என்னம்மா, உடம்பு சரியில்லையா?" என்று பதறினான் அவன்.

"ஒண்ணுமில்லேடா, ஒரே தலைவலி....." என்றாள் அம்மா.

"தைலம் பூசி விடட்டுமா?" என்றான் முரளி. அவன் நோக்கமெல்லாம் எங்கே தன் திட்டம் பாழாகி விடுமோ என்பதிலேயே இருந்தது.

"தைலம் தீர்ந்து போச்சுப்பா.... மாசக் கடைசியாச்சே! வாங்கணும்னா இப்போ பத்துப் பன்னிரெண்டு ரூபாய் வேணும்..... அதனாலே பரவாயில்லை. சுக்கை அரைத்து பற்று போட்டுக்கறேன். நீ எங்கேயோ வெளியே கிளம்பிகிட்டிருந்தியே, போயிட்டு சீக்கிரமா வந்திடு" என்றாள் முரளியின் அம்மா.

"சரிம்மா" என்று தலையசைத்துவிட்டு ராம்குமாரைப் பார்ப்பதற்காக விரைந்தான் முரளி. அங்கே அம்மா தலைவலிக்கு மருந்து வாங்கக் காசில்லாமல் இருக்கும்போது, ராம்குமாரோடு ஆனந்தமாகச் செலவு செய்யக் கிளம்பிவிட்டாயே என்று அவன் மனம் இடித்துக் காட்டியது. பேசாமல் கையிலிருக்கும் பணத்திற்கு மருந்து வாங்கிக் கொண்டு போய்விடலாமா என்று யோசித்தான். எத்தனையோ முறை ராம்குமார் தனக்காகச் செலவு செய்திருக்க அவனை ஏமாற்றுவது சரியல்ல என்று இன்னொரு மனம் கூறியது. அம்மா ஏதாவது பற்றுப் போட்டுத் தலைவலியைச் சரி செய்து கொள்வாள் என்று தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டான் முரளி.

தொலைவில் ராம்குமார் சைக்கிளில் வேகமாக வருவது தெரிந்தது.

ராம்குமாரின் முகம் வாடிப் போயிருந்தது. முரளியின் அருகில் வந்தவன், "முரளி, மன்னிச்சுக்கடா. நான் சொன்னபடி இன்னிக்கு வர முடியாது" என்றான்.

"ஏன்? என்ன காரணம் ராம்குமார்?" என்று கேட்டான் முரளி.



* இன்று கட்டிடத் தொழிலுக்கு மிக அவசியமான பொருளான செங்கற்களை எகிப்தியர்கள் கி.மு.4000 ஆம் ஆண்டில் கண்டு பிடித்தனர்.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.

ராம்குமார் தலையைக் குனிந்து கொண்டான். "இல்லை, இன்னைக்கு வேண்டாம் முரளி. காலையிலே என் தங்கச்சிப் பாப்பா திண்ணையிலிருந்து தடுமாறி விழுந்துட்டுது. தலையிலே நல்ல காயம்..... டாக்டருக்கிட்டே நான் கூட்டிகிட்டுப் போனேன். வர முடியாதுங்கறதை உன்கிட்டே சொல்லிட்டுப் போகத்தான் அவசரமாக வந்தேன். அப்படியே மருந்தும் வாங்கிகிட்டுப் போகணும்" என்றான்.

முரளிக்குச் 'சுரீர்' என்று உறுத்தியது. 'அம்மா தலைவலியாகப் படுத்திருந்தும், அதைப் பொருட்படுத்தாமல் வந்துவிட்டேனே!' என்ற குற்ற உணர்ச்சி அவன் மனத்தைத் துன்புறுத்தியது. 'ராம்குமாரிடம் உள்ள இந்தப் பொறுப்புணர்ச்சி என்னிடம் மட்டும் ஏன் இல்லை?" என்று நினைத்து அவன் வருந்தினான்.

தலை குனிந்து நின்ற முரளியைப் பார்த்து ராம்குமார், "ரொம்ப கோபமாடா என் மேலே?" என்றான்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. மருந்து வாங்கப் போகணும்னியே, எனக்குக்கூட தலைவலித் தைலம் வாங்க வேண்டும். வா போகலாம்" என்று அவனை அழைத்துக்கொண்டு நடந்தான் முரளி.

தன் முன்னால் தலைவலி மருந்தோடு வந்து நின்ற, பிள்ளையைப் பார்த்து மகிழ்ந்து போனாள் முரளியின் அம்மா. பொறுப்புணர்ச்சியுடன் வந்து நிற்கும் மகனை அன்புடன் அணைத்துக் கொண்டாள். வெளியில் நடந்தது அவளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

தன் தாயின் அந்த மகிழ்ச்சிதான் முரளிக்கு எவ்வளவு பெரிய சந்தோஷத்தைக் கொடுத்தது! சிந்தித்துப் பொறுப்புடன் எதிலும் நடக்க வேண்டும் என்று அவன் ராம்குமாரிடம் கற்றுக்கொண்ட பாடம், அன்னையின் அந்தப் பூரிப்பில் அவனிடம் உறுதியடைந்தது!

சிறுவன் அளித்த தீர்ப்பு!

மூலம்: அராபிய இரவுகள்
தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி



பாக்தாத் நகரில் அலி கோகியா என்று ஒரு வியாபாரி இருந்தான். அவன் புனிதத்தலமான மெக்காவுக்குப் போகத் தீர்மானித்தான். அதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். திரும்பி வந்த பிறகு வியாபாரத்தைத் தொடருவதற்குப் பணம் வேண்டுமல்லவா? அதற்கு ஆயிரம் தங்கக் காசுகளை ஒதுக்கி வைத்தான்.

ஒரு பெரிய ஜாடியை எடுத்து அதில் அந்தத் தங்கக்காசுகளைப் போட்டான். பாதி உயரம் வந்தது. மறு பாதிக்குப் புத்தம் புதிய ஆலிவ் பழங்களை வாங்கி வந்தான். அவற்றை ஜாடியில் போட்டு மூடினான். ஜாடியை எடுத்துக் கொண்டு தன் நண்பனான இன்னொரு வியாபாரியின் வீட்டுக்குப் போனான்.

"நண்பா! நான் மெக்காவுக்குப் போகிறேன். திரும்பி வர நாள் ஆகும். அதுவரையில் இந்த ஆலிவ் பழ ஜாடியை நீ பார்த்துக் கொள்வாயா?" என்று கேட்டான்.

"இந்த உதவி கூடச் செய்யமாட்டேனா என்ன? இதோ பண்டக சாலையின் சாவி! நீயே உள்ளே போய் ஜாடியை வை. திரும்பி வந்த பிறகு எடுத்துக் கொள்" என்று அவன் சாவியை நீட்டினான்.

அலி கோகியா உள்ளே போய் ஜாடியை ஒரு மூலையில் வைத்துவிட்டு வந்தான். நிம்மதியாக மெக்காவுக்குப் புறப்பட்டான்.

ஒட்டகத்தின் மேல் வெகு தூரம் பயணம்செய்தான். நபி நாயகம்பிறந்த இடமான மெக்காவைத் தரிசித்தான். பிறகு கெய்ரோவில் நல்ல வர்த்தகம் நடப்பதைக் கேள்விப்பட்டு அந்த நகரத்திற்குச் சென்று கொஞ்ச காலம் வியாபாரம் செய்தான். நல்ல லாபம் கிடைத்தது. அங்கிருந்து புறப்பட்டு டமஸ்கஸ், எருசலம் முதலிய ஊர்களைச் சுற்றிப் பார்த்தான்.

அதற்குள் ஏழு ஆண்டுகள் கழிந்தன. அலி கோகியா தன் சொந்த ஊரான பாக்தாத்தை நோக்கிப் புறப்பட்டான். "ஆயிரம் பவுனை ஜாடிக்குள் ஒளித்து வைத்தேனே, அது பத்திரமாக இருக்குமா?" என்ற நினைவிலேயே அவன் ஒட்டகத்தின் மேல் பயணம் செய்தான். ஊர் திரும்பிய பிறகு அந்தப் பணத்தைக் கொண்டு எப்படி எப்படி வியாபாரம் செய்ய

வேண்டும் என்று திட்டமிட்டான்.

அலி கோகியாவின் ஜாடியைப் பாதுகாக்கும் நண்பனும், அவனுடைய மனைவியும் ஒருநாள் இரவு வழக்கம் போலச் சாப்பிட உட்கார்ந்தனர்.

"கொஞ்சம் ஆலிவ் பழம் இருந்தால் தேவலை. சாப்பிட வேண்டும் போல் இருக்கிறது" என்றாள் மனைவி.

"இப்போதுதான் ஞாபகத்திற்கு வருகிறது. அலி கோகியா ஒரு ஜாடி நிறைய ஆலிவ் பழங்களைப் பண்டக சாலையில் வைத்திருக்கிறான். அவன் உயிரோடு இருக்கிறானா, இல்லையா என்றே தெரியவில்லை. அதிலிருந்து கொஞ்சம் எடுத்து வருகிறேன். அதைச் சாப்பிட்டால் என்ன?" என்று கணவன் கேட்டான்.


"ஐயையோ! நம்மை நம்பி வைத்த பொருளை நாம் தொடக்கூடாது. என்றைக்காவது ஒரு நாள் அலி கோகியா திரும்பி வரலாம். அப்போது நம் திருட்டுத்தனம் வெளிப்பட்டுவிடும். நீங்கள் இப்போது கொண்டு வந்தாலும், நான் அதைச் சாப்பிடமாட்டேன். இத்தனை நாட்களுக்குப் பின் அவை கெட்டுப் போயிருக்காதா என்ன? அந்த ஜாடியைத் திறக்கவேவேண்டாம்" என்றாள் மனைவி.

நான் எல்.கே.ஜி

தாத்தா: உனக்கு காந்திஜி, நேத்தாஜி, ராஜாஜியெல்லாம் தெரியுமா, பாப்பா?

பாப்பா: தெரியாது தாத்தா! நான் எல்.கே.ஜி.!!

— பால. கோவிந்தராஜ்.



ஆனால் வியாபாரி ஒரு தீர்மானத்திற்கு வந்து செயலில் இறங்கினான். ஒரு விளக்கையும், தட்டையும் எடுத்துக் கொண்டு பண்டகசாலைக்குச் சென்றான். ஏழு வருஷத்திற்குமுன் அலி கோகியா வைத்த ஜாடி அப்படியே இருந்தது.

வியாபாரி ஜாடியைத் திறந்தான். மனைவி சொன்னது சரிதான். ஆலிவ் பழங்கள் கெட்டுப் போயிருந்தன. நல்ல பழங்கள் ஒருவேளை ஜாடியின் அடியில் இருக்கலாம் என்று எண்ணி அவற்றைத் தட்டில் கொட்டினான். ஆனால் என்ன ஆச்சரியம்!


பளபளவென்று தங்கக் காசுகள் தட்டில் விழுந்தன. அலி கோகியா தன் பணத்தை மறைத்து வைப்பதற்காக அப்படி ஒரு தந்திரம் பண்ணியிருக்கிறான் என்று வியாபாரிக்குப் புரிந்துவிட்டது. பழையபடி அவற்றை ஜாடியிலேயே அள்ளிப் போட்டு அவன் வீடு திரும்பினான்.

"நீ சொன்னது போலவே ஆலிவ் பழங்கள் அழுகியிருக்கின்றன. ஜாடியைப் பழையபடியே மூடிவைத்துவிட்டேன். நான் திறந்து பார்த்தது அலி கோகியாவுக்குத் தெரியப் போவதில்லை. நீ வீணாகக் கவலைப்பட வேண்டாம்" என்று மனைவியை அமைதிப்படுத்தினான்.

அன்று இரவெல்லாம் வியாபாரி புரண்டு புரண்டு படுத்தான். தூக்கமே வரவில்லை. ஒருவருக்கும் தெரியாமல் எப்படியாவது ஜாடிக்குள் இருக்கும் தங்கக் காசுகளைத் திருடிவிட வேண்டும் என்ற எண்ணம் கொஞ்சங் கொஞ்சமாக அவனை ஆக்ரமித்தது.

மறுநாள் காலை கடைத் தெருவுக்குப் போய் ஆலிவ் பழங்களை வாங்கினான். பண்டக சாலைக்கு விரைந்தான். அலி கோகியாவின் ஜாடியைத் திறந்தான். கெட்டுப் போன பழங்களையும், பவுன் காசுகளையும் வெளியே எடுத்துவிட்டு, புதிய ஆலிவ் பழங்களை ஜாடியில் நிரப்பினான். ஜாடியை இறுக மூடி அதே இடத்தில் வைத்தான். பவுன் காசுகளை எடுத்து ஓர் இடத்தில் ரகசியமாகப் புதைத்தான்.

அலிகோகியா நலமாக ஊர் திரும்பினான். முதல் வேலையாகத் தன் நண்ப



னான வியாபாரியைப் பார்க்கப் போனான். அவனுக்கு வணக்கம் சொல்லிவிட்டு, ''என்னப்பா, என்னுடைய ஜாடி பத்திரமாக இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''நீ வைத்த இடத்தில் அது அப்படியே இருக்கிறது. இதோ சாவி தருகிறேன். நீயே எடுத்துக்கொள். அதைப் பாதுகாப்பதில் ஏதோ என்னாலான சிறு உதவியைச் செய்ய முடிந்ததே என்று நான் சந்தோஷப்படுகிறேன்'' என்றான் வியாபாரி. அலி கோகியா பண்டக சாலையிலிருந்து ஜாடியை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு விரைந்தான்.

அலி கோகியா ஜாடியைத் திறந்து சரித்தான். அதில் ஆலிவ் பழங்களைத் தவிர வேறொன்றையும் காணவில்லை! அவனுடைய ஆயிரம் தங்கக் காசுகளும் எங்கே? நண்பன் திருடிவிட்டானா என்ன? அவனைத் தவிர அந்த ஜாடியைப் பற்றி வேறு யாருக்கும் தெரியாதே!

அலி கோகியா நண்பனின் வீட்டுக்கு ஓடினான். ''நண்பா! ஆலிவ் பழங்களோடு ஜாடியில் கொஞ்சம் பவுனும் இருந்தது. நான் ஊரில் இல்லாதபோது அதைக் கடனாக எடுத்துக் கொண்டாயா என்ன?'' என்று கேட்டான்.


எப்படியெல்லாம் நடிக்க வேண்டும் என்று வியாபாரி ஏற்கெனவே தீர்மானித்து வைத்திருந்தான். ஆகவே, ''ஜாடி நிறைய ஆலிவ் பழங்கள் என்று அப்போது நீ சொன்னாய். அதை நம்பினேன். கையால்கூட நான் அதைத் தொடவில்லை. இப்போது வந்து பவுன் காசுகள் என்கிறாய். உனக்கு வேறு வேலை இல்லை, போ, போ!'' என்று சிடுசிடுத்தான்.

வேறு வழியின்றி அலி கோகியா நீதிமன்றம் போனான். வழக்குத் தொடுத்தான். விசாரணை தொடங்கியது.

வியாபாரி தன் தங்கக் காசுகளைத் திருடிவிட்டான் என்று அலி கோகியா குற்றம் சாட்டினான். நீதிபதி கவனமாகக் கேட்டார். பிறகு, ''சாட்சிகள் உண்டா?'' என்றார். அலி கோகியா ''இல்லை'' என்றான்.

வியாபாரியின் வாக்குமூலத்தையும் நீதிபதி கேட்டார். அவன் குற்றமற்றவன் என்று தீர்ப்பளித்தார்.

வியாபாரி சந்தோஷமடைந்தான். அலி கோகியாவுக்கு ஒரே வருத்தம். தனக்கு நியாயம் வழங்குமாறு அலி



கோகியா அந்த நாட்டை ஆளும் காலிப்புக்கு ஒரு விண்ணப்பம் எழுதினான். காலிப் விசாரணைக்கு நாள் குறிப்பிட்டார்.

காலிப்குடிமக்களின் நலனில் அதிக நாட்டம் உள்ளவர். மக்களின் குறைகளை நேரில் கண்டறிய விரும்பினார். மாறுவேடம் பூண்டு மாலை வேளைகளில் அதிகாரிகளுடன் நகர்வலம் வந்தார்.

காலிப்பும், அதிகாரிகளும் வழக்கம் போல அன்று மாலை நகர சோதனைக்குப் புறப்பட்டனர்..ஒரு வீட்டு வாசலில் சிறுவர்களின் கூட்டம். அவர்கள் ஏதோ விளையாடிக் கொண்டிருந்தனர். அது என்ன விளையாட்டு என்று அறிவதற்காகக் காலிப் சற்று விலகி நின்று கவனித்தார்.

"நான்தான் நீதிபதி. இந்த வழக்கை நான் விசாரிப்பேன்" என்றான் ஒரு சிறுவன். மற்ற சிறுவர்கள் ஒப்புக்கொண்டனர். அந்தக் குட்டி நீதிபதி ஒரு கூடையைக் கவிழ்த்துவிட்டு அதன் மேல் கம்பீரமாக உட்கார்ந்தான்.

"அலி கோகியாவை அழைத்து வாருங்கள். பணம் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள அந்த வியாபாரியையும் கொண்டு வாருங்கள்" என்று அவர் கட்டளையிட்டார்.

அந்தப் பெயர்களைக் கேட்டதும் காலிப்புக்குத் தன்னிடம் வந்துள்ள ஒரு விண்ணப்பத்தின் ஞாபகம் வந்தது. ஆகவே, அந்த விளையாட்டை அவர் கூர்ந்து கவனித்தார். சிறுவர்களின் உரையாடலைக் கவனமாகக் கேட்டார்.

ஒருசிறுவன் குட்டி நீதிபதிக்கு வணக்கம் சொன்னான். 'அலி கோகியா, 'வியாபாரி' என்று வேறு இரண்டு சிறுவர்களை அவருக்கு அறிமுகம் செய்தான்.

"அலி கோகியா, இந்த வியாபாரியின் மீது உன் வழக்கு என்ன?" நீதிபதி கேட்டார்.

ஜாடியின் அடியில் தங்கக் காசுகளை வைத்ததையும், பிறகு அவை காணாமல் போனதையும் அலி கோகியா விளக்கினான்.

"ஜாடியில் வைத்த காசு அதிலேயே தானே இருக்க வேண்டும்? எப்படிக்

காணாமல் போக முடியும்?'' நீதிபதி கடுமையாகக் கேட்டார்.

''ஜாடிக்குள் என்ன இருந்ததென்று எனக்கு ஒன்றுமே தெரியாது, ஐயா!'' வியாபாரி சாதித்தான்.

''அலி கோகியா, அந்த ஜாடியைக் கொண்டு வா, நான் பார்க்க வேண்டும்'' என்றார் நீதிபதி.

அந்த மன்றத்தின் முன்பு ஒரு ஜாடியை வைப்பது போல அலி கோகியா நடித்தான்.

''வியாபாரியின் பண்டகசாலையில் நீ வைத்தது இந்த ஜாடிதானா?'' நீதிபதி கேட்டார்.

அலி கோகியா ''ஆம்'' என்றான். வியாபாரியும் அதை ஒப்புக் கொண்டான்.

''ஜாடியைத் திறவுங்கள்'' — நீதிபதி கட்டளையிட்டார். வேறொரு சிறுவன் அதைத் திறப்பது போல பாவனை செய்தான். நீதிபதி ஜாடியின் உள்ளே பார்த்தார். ஒரு ஆலிவ் பழத்தை எடுத்து வாயில் போட்டுச் சுவைப்பது போல நடித்தார்.

''அருமையான பழம். ருசியாக இருக்கிறது. ஏழு வருஷம் ஜாடியில் அடைத்து வைத்த பிறகும், அது இப்படி இருக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. அனுபவமுள்ள பழ வியாபாரிகள் இருவரைக் கூப்பிடுங்கள். அவர்களுடைய அபிப்பிராயத்தையும் கேட்போம்'' என்றார் நீதிபதி.

ஆலிவ் மரங்களை வளர்த்துப் பழங்களை விற்கும் அனுபவசாலிகளாக இரண்டு சிறுவர்கள் அறிமுகம் செய்யப்பட்டனர்.

''ஆலிவ் பழங்களைச் சாப்பிடுவதற்கு ஏற்ற வகையில் எத்தனை வருஷங்களுக்கு வைத்திருக்கலாம்?'' நீதிபதி கேட்டார்.

''மூன்று வருஷங்கள்வரை வைத்திருக்கலாம். அப்புறம் அவை கெட்டு விடும்.''

''இதோ, இந்த ஜாடியில் உள்ள பழங்களைப் பாருங்கள். இவை எத்தனை வருஷங்களாக இதில் இருக்கின்றன என்று சொல்ல முடியுமா?''

இருவரும் பழங்களைப் பார்ப்பது போலவும், சுவைப்பது போலவும் நடித்தனர்.


''நல்ல ருசி. நல்ல மணம். இவை புத்தம் புதியவை'' என்றனர்.

''இல்லையே! ஏழு வருஷங்களுக்கு முன்பு அடைத்தது என்று இதன் சொந்தக்காரர் சொல்லுகிறாரே?''

''அது பொய் ஐயா! இவை இந்த வருஷம் பறித்தவைதான். அதில் சந்தேகமே இல்லை!''

வியாபாரியாக நடித்த சிறுவன் தான் குற்றமற்றவன் என்று வெகு நேரம் வாதாடினான். அவனுடைய பேச்சை நீதிபதி ஒப்புக் கொள்ளவில்லை.

''வீணைப் பேசாதே. நீ ஒரு திருடன். உன் நண்பனை ஏமாற்றிவிட்டாய். ஏழாண்டுகளுக்கு முன்பு அலி





அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கன் பிறந்த ஊரில் அவருக்கு நினைவுச் சிலையொன்றை ஓர் உயரமான பீடத்தின் மீது அமைத்திருக்கிறார்கள். அந்தச் சிலையை 56 படிகள் ஏறித்தான் நெருங்க முடியும். 56 படிகளைக் கட்டியதற்கு ஒரு காரணம் உண்டு. ஆபிரகாம் லிங்கன் 56 ஆண்டுகள் வாழ்ந்தார். அதை நினைவு கூறும் வகையில் இவ்வாறு 56 படிகளை அமைத்திருக்கிறார்கள்.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.

கோகியா ஜாடியின் உள்ளே வைத்த பழங்கள் இவை அல்ல. நீ ஜாடியைத் திறந்து பொன் காசுகளை எடுத்துக் கொண்டிருக்கிறாய். பிறகு புதிய பழங்களை நிரப்பியிருக்கிறாய். இந்தக் குற்றத்திற்காக உனக்குத் தூக்குத் தண்டனை விதிக்கிறேன்'' என்று நீதிபதி தீர்ப்பளித்தார். சிறுவர்கள் எல்லோரும் கையைத் தட்டிப் பாராட்டினர். குட்டி நீதிபதிக்கு வணக்கம் சொல்லிவிட்டு அவர்கள் கலைந்தனர்.

மாறுவேடமணிந்து அந்த விளையாட்டைக் கவனித்து வந்த காலிப்புக்கு ஒரே அதிசயம்! சிறுவனின் நுண்ணறிவைக் கண்டு அவர் வியந்தார்.

''நாளைக்கு இதே வழக்கை நான் விசாரிக்க வேண்டும். இந்தச் சிறுவன் சொன்னதைவிட ஒரு மேலான தீர்ப்பை என்னால் அளிக்க முடியாது. ஆகவே, இந்தச் சிறுவனை நாளைச் சபைக்கு அழைத்து வாருங்கள். நம் முன்னால் அவன் தீர்ப்புச் சொல்லட்டும். அந்த நீதிபதியும் வரட்டும். சிறுவனிடமிருந்து அவரும் கொஞ்சம் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது'' என்று காலிப் தன் அதிகாரியிடம் கூறினார்.

அடுத்த நாள் சபை கூடியது. அதிகாரிகளும், பொது மக்களும் குழுமினர். அலி கோகியாவும் அவனுடைய நண்பனும் காணப்பட்டனர். உயர்ந்த ஆசனத்தில் காலிப்பும், அவருக்கு அருகில் நீதிபதியாக நடித்த சிறுவனும் அமர்ந்திருந்தனர்.

''விசாரணை தொடங்கட்டும். இன்றைக்கு இந்தச் சிறுவன் தீர்ப்புச் சொல்லுவான். நியாயம் கிடைக்குமாறு நான் பார்த்துக் கொள்கிறேன்.'' என்றார் காலிப்.

விசாரணையைத் திறமையாக நடத்தினான் சிறுவன். சபையின் முன்னால் ஜாடி வைக்கப்பட்டது. நிபுணர்கள் அதிலிருந்த பழத்தைச் சுவைத்தனர். பழங்கள் புத்தம் புதியவை என்றும், ஏழாண்டுக்கு முன்னால் வைக்கப்பட்டவை அல்ல என்றும் அபிப்பிராயம் கூறினர். நேர்மையில்லாத அந்த வியாபாரி தன் நிலைமையைச் சமாளிக்க முயன்றான். ஆனால் முடியவில்லை.

''ஐயா! நேற்று மாலை எங்களுடைய விளையாட்டில் குற்றவாளிக்கு நான் தூக்குத் தண்டனை கொடுத்தேன். ஆனால் இது உங்களுடைய சபை. ஆகவே, இவனுக்கு என்ன தண்டனை என்று நீங்களே தீர்மானியுங்கள்'' என்று குட்டி நீதிபதி விண்ணப்பித்தான்.

வியாபாரி குற்றவாளிதான் என்று காலிப்புக்கு விளங்கிற்று. ஆயிரம் பவுனைத் திருடிய குற்றத்திற்காக அவர் அவனுக்கு ஆயிரம் நாட்கள் சிறைத் தண்டனை விதித்தார். சிறைக்குச் செல்லுமுன் வியாபாரி தன் குற்றத்தை ஒப்புக் கொண்டான். தங்கக் காசுகளை மறைத்து வைத்துள்ள இடத்தைச் சொன்னான். அதிகாரிகள் அதை எடுத்து அலி கோகியாவிடம் ஒப்படைத்தனர்.

''சிறுவனின் தீர்ப்பு உங்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கட்டும்'' என்று பழைய நீதிபதியிடம் காலிப் கூறினார்.

காலிப் சிறுவனுக்கு நூறு பொற்காசுகளைப் பரிசாக அளித்தார். அவனைப் பத்திரமாக அவனுடைய அம்மாவிடம் சேர்ப்பிக்கும்படி அவர் உத்தரவிட்டார்.



இமய மலையின் உச்சியிலிருந்து, அடிவாரத்தை நோக்கிச் சரிந்து புரண்டு உருண்டு பாய்ந்தோடும்,

பனிக் கட்டிகள் மாதிரி —

நீர் அருவிகள் மாதிரி —

வால்மீகி,

ஆதி,

வீராயி,

பீமன்,

நாகன்.

எல்லோரும் அனலும் கனலுமாய்க் குமுறியெரியும் கோரைப் புல் தீக்குள்ளே தாவிக் குதித்துப் பாய்ந்து, படு வேகமாக ஓடினார்கள். தீயைக் கடந்து ஓடினார்கள்..... ஓடினார்கள்.... வெகு தூரத்தைக் கடந்து ஓடி, நின்றார்கள். பார்த்தார்கள். இன்னமும் இன்னமும் வெகு தூரத்துக் காட்சியாகவே தோன்றும் அக்கினி மலையைப் பார்த்துக் களைப்பும் இளைப்புமாக நெட்டுயிர்த்தார்கள்....!

"ஏண்டா.... நாம் நெருங்கி வர, நெருங்கி வர..... இந்த அக்கினி மலை தூர தூரப் போய்க் கொண்டிருக்கிற மாதிரி....." மூசுமூசென்று மேலும் கீழும் மூச்சிரைக்க, அலுப்பும் ஆயாசமுமாகத் தவித்தான் பீமன்.

"ரொம்ப அற்புதமாயிருக்கிறது!" உள்ளம் நெகிழ்ந்து ரசனைப் பெருக்குடன் சொல்லிய வீராயி, புறங்கையால் நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைத்தாள்.

"எது அற்புதமாயிருக்கிறது?" என்றான் ஆதி.

"அதோ.... அந்த அக்கினி மலைச் சிகரத்தின் மீது, சூரிய பகவானே வந்து உட்கார்ந்திருக்கிற மாதிரி, செக்கச் செவேலெனக் காணுகிற சூரிய வட்டம்...." மாலைச் சூரியனின் கோலத்தைக் கண்டு, மெத்தவும் மயங்கிய வீராயி, மலையை நோக்கி, மலையில் காணும் சூரியனைப் பார்த்து — இரு கரங்களையும் குவித்துப் பரவசத்துடன் கும்பிட்டாள்.

"அடேயப்பா.....! இந்தச் சாயுங்காலச் சூரியன், பெரிய்ய்...ய்யவண்டிச் சக்கரம் மாதிரி தெரிகிறதே....!" என்று ஆச்சரியத்தில் மூழ்கினான் நாகன்.

பேசிக் கொண்டிருக்கும்போதே —

மெல்ல மெல்ல நழுவி நழுவி, மலைக்கு அப்பாலே மறைந்து போயிற்று, சூரியன். அதனுடைய மஞ்சள் வெய்யிலில் நிழல் படர்ந்தது. செம்பு கலந்த தங்கம் போல, பகலின் வெளிச்சம் மங்கியது.

"சரிசரி.... இன்னும் சற்று நேரத்திற்குள், காடெல்லாம் காரிருளாய்ப் போவதற்குள்.... தங்குவதற்குப் பாதுகாப்பாக ஒரு இடத்தைப் பாருங்கள்" என்றான், பீமன்.

எல்லோரும் —

சுற்றும் முற்றும் கவனித்தார்கள்.

பார்வையில் பட்டதெல்லாம் மரங்கள்! மரங்கள்! மரங்கள்! பூமியெல்

லாம் முழங்கால் அளவு உயரத்திற்குச் செழித்துச் செருமிக் கிடக்கும் கோரைப் புற்களுக்கு நடுவில், அங்கும் இங்குமாய்க் கொத்துக் கொத்தாய்க் காணும் பாறைகள்....!

''ஏதாவது ஒருமரத்தில் ஏறிப் பரண் கட்டிக் கொண்டு இரவைக் கழித்து விடலாமா?'' என்றான் வால்மீகி.

''அதோ..... அங்கே பாருங்கள்'' எனக் கூவினான் பீமன்.

அவன் காட்டிய இடத்தில் —

நாலைந்து தென்னை மரக்கிடை தூரத்திலே —

கோரைப் புல் செருமலுக்கு நடுவிலே —

பத்துப் பதினைந்து அடி நீள, அகலத்தில், பத்துப் பதினாறு அடி உயரத்தில், ஒரு பிரும்மாண்டமான மரப் பெட்டி மாதிரி கிடந்தது, ஒரு கல். சந்தனப் பலகையின் நிறத்தில் காணும் சிக்கிமுக்கிப் பாறை....!

அதைப் பார்த்ததும் —

''வாருங்கள், போய்ப் பார்க்கலாம்'' முன்னே விரைந்து நடக்கும் ஆதியை, மற்றவர்கள் தொடர்ந்து சென்றார்கள்.

சிக்கிமுக்கிப் பாறையை அணுகியதும், எல்லோரும் அதை ஒரு சுற்று வலம் வந்தபடியே, மேலும் கீழுமாகக் கவனித்தார்கள்.

''இந்தப் பாறையின் மீது, இன்றைய இர்வைப் பயமில்லாமல் கழிக்கலாம்'' என்றான் ஆதி.


''அது சரி, பாதுகாப்பான இடம் தான். ஆனால், இந்தப் 'பாறையின் மீது எப்படி ஏறுவது.....?'' என்று குறும்புச் சிரிப்புடன் கேட்டான் நாகன்.

''விழி இருந்தால், வழி கிடைக்கும்!'' குத்தலாகச் சொன்னான் ஆதி.

''அப்படியென்றால், நாமெல்லாம் விழியில்லாதவர்களா?'' என்று எரிச்சலுடன் கேட்டான், நாகன்.

''வழி காண்பதற்குள் முழி உருளத் தவிக்கிறாயே....!'' என்றாள் வீராயி.

''டேய் டேய்.....! கோபம், தாபம் எல்லாம் நமக்குள் வேண்டாம்....! இப்போது நான் வழி கண்டுபிடிக்கிறேன், பாருங்கள்.....!'' என்றவாறே பாறையை விட்டுச் சற்றுத் தூரம் பின் வாங்கி ஓடினான். ஒரு நொடி நேரம் தயங்கிக் குபீரெனப் பாய்ந்தோடி வந்து, பாறையின் மீது தாவியேறி, பிடி கிடைக்காமல் நழுவிப் புல் தரையில் முதுகுப்புறமாகப் பொத்தெனச் சுருண்டு விழுந்தான், பீமன்!



தேனுக்காக மரமேறிக் கிளை முறிந்து மல்லார்ந்து விழுகிற கரடி மாதிரி விழுந்த பீமனைப் பார்த்ததும்—

திடீர்ச் சிரிப்பு குபீரிட்டது....!

மறுநொடியே —

சிரிப்பை அடக்கிக் கொண்ட வீராயி, ''என்னடா, விழுந்துவிட்டாயே...!'' என்று ஆறுதலும் பரிவுமாகக் கேட்டவாறே ஓடினாள். விழுந்து, மெல்ல எழுந்து கொண்டிருக்கிற பீமனைக் கைத்தாங்கலாகத் தூக்கி நிறுத்தினாள்.

''இல்லை... வந்து... இந்தச் சிக்கி முக்கிக் கல் பாறை, தேய்த்து வைத்தது போல் வழவழவென்று இருக்கிறதல்லவா? அதனால்... பிடிக்கு அகப்படாமல் வழுக்கிவிட்டது!'' என்று அசட்டுச் சிரிப்புடன் சொல்லியவாறே மெல்ல நடந்தான் பீமன்.


சட்டென்று —

''ஒரு யோசனை'' என்றான் ஆதி.

''என்ன யோசனை?'' என்றான் வால்மீகி.

''கயிற்றின் உதவியினால் பாறையின் மீது ஏறிவிட முயற்சி செய்வோமா?'' என்று என்னவோ தயக்கத்துடன் கேட்டான் ஆதி.

வெய்யில் மங்கிய வானவெளியில், தம்தம் இருப்பிடங்களை நோக்கிப் பறந்து போகும் பட்சிகளைப் பார்த்தவாறே, நாலைந்து நொடி நேரம் வரையில், என்னவோ யோசித்த வால்மீகி, பரபரப்படைந்தான். ''கயிறாவது, கியிறாவது....! எல்லோரும் இப்படி வாருங்கள்.....'' என்றபடியே





மரத்தவளை

மரத்தில் வசிக்கும் தவளைகளும் இருக்கின்றன. அவை இலைகளுடன் கூடிய கிளைகளில் நுரை போன்ற பொருளை உமிழ்ந்துவிட்டு, அதில் முட்டைகளை இடுகின்றன. வெய்யிலில் முட்டைகள் காய்ந்துவிடாமல், ஈரப் பசையுடன் இருக்கவே இந்த ஏற்பாடு. முட்டைகள் காய்ந்து போனால் குஞ்சுகள் உருவாவதில்லை. புத்திசாலித் தவளைகள்!

— தில்லை தமிழரசன்.

பாறையை அணுகி, ஒட்டினாற்போல் நின்றான் வால்மீகி. அப்புறம், ''பீமா, வா.... என் மீது ஏறு. என் தோள்களில் கால்களை ஊன்றி நில். அதற்கப்புறம் ஆதி வந்து.... நம் மீது ஏறி, உன்னுடைய தோள்களில் ஏறிப் பாறை மீது தாவியேறிக் கொள்ளட்டும்.....!'' என்றான்.

''அருமையான யோசனை....!'' என்றான் வீராயி.

உடனே —

வால்மீகியின் யோசனைப்படியே —

பீமன் வந்தான். வால்மீகியின் மீது ஏறினான். அவனது தோள்களில் கால்களை ஊன்றி நின்றான். அப்புறம், ஆதி வந்தான். வால்மீகியின் மீதும், பீமனின் மீதும் லாகவமாக ஏறிப் பாறையின் மீது தாவினான்.

''சப்ப்....ப்பாஷ்.....!'' எனக் கை தட்டி ஆரவாரித்தாள் வீராயி.

''இந்தப் பாறை என்ன, இங்கிதமான அறிவும் ஆற்றலும் இருந்தால், இமய மலையின் சிகரத்தில்கூட ஏறிக் கொடி நாட்டிவிடலாம்.....!'' எனப் பெருமையும் பூரிப்புமாகச் சொன்னான் நாகன்.

அடுத்த நொடி —

''பீமா! நீ என்னை விட்டுக் குதித்து விடாதே! ஆதியின் கையைப் பற்றிக் கொண்டு, நீயும் பாறைக்கு ஏறிவிடு!'' ஒரு கொழுத்த செம்மறி ஆட்டுக் கடாவைப் போல் கனக்கிற பீமனின் சுமையைத்தாங்கமாட்டாமல்சகித்துக் கொண்டு திணறலுடன் சொன்னான் வால்மீகி.

அவன் சொல்லிய நொடியே —

பாறையின் மேலிருந்து கையை நீட்டினான் ஆதி. அவன் கையைப் பிடித்துக் கொண்டு, கால்களால் பாறையைத் தாங்கித் தவ்வியேறிப் பாறையின் மீது கவிழ்ந்து நகர்ந்து உருண்டு போய் எழுந்து நின்றான் பீமன்.

''அடேயப்பா! இந்தத் தடிப் பயல் எவ்வளவு கனமாய்க் கனக்கிறான்!'' என்று மூச்சுத் திணறலும் முறுவலுமாகச் சொன்னான் ஆதி.

''ஹூம்! அவன், நம் காலத்து பீமன் அல்லவா?'' என்று தமாஷாகச் சொல்லிச் சிரித்தாள் வீராயி.

அப்புறம் —

''நாமெல்லாம் எப்படி ஏறுவது?'' என்றான் நாகன்.

''ம்.... இங்கே வாடா.... இந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு ஏறி வா.....'' என்றபடியே சுருணையைப் பிரித்துக்கயிற்றைத்தொங்கவிட்டான் பீமன்.

வீராயி,

நாகன்,

வால்மீகி

மூவரும் சிக்கிமுக்கிப் பாறையில் ஏறுவதற்கும், மெல்ல மெல்ல இருள் படருவதற்கும் சரியாயிருந்தது.

''ம்.... சரி, பசியும் பட்டினியுமாக, அலுப்பும்களைப்புமாகக்கிடக்கிறோம். சீக்கிரம் தூங்கலாம்.....'' என்றவாறே கைகளைத் தலைக்கு மேல் நீட்டி முறுக்கி, உடலை நெளித்து வளைத்துச் சோம்பல் முறித்தான், பீமன்.

''எல்லோரும் தூங்கிவிட்டால் எப்படி? இந்தப் பயங்கரக் காட்டில், பாழும் இருளில் ஏதேனும் ஆபத்து நேர்ந்தால்....?'' எச்சரிக்கையுடன் சொன்னான் வால்மீகி.

''ஒன்று செய்யலாம்'' என்றான் ஆதி.

''என்ன செய்யலாம்....?'' என்றான் நாகன்.

''முதலில், நான்கு பேர் தூங்கலாம். நான்கு பேர்களுக்கும் ஒருவர் காவலிருக்கட்டும். சற்று நேரத்துக்குப்

பிறகு, மூன்று பேர் தூங்கலாம். இரண்டு பேர் காவலிருக்கட்டும். அப்புறம்.....'' ஆதி மேலும் சொல்லுவதற்குள் —

''நல்ல யோசனைதான். முதலில், நாமெல்லோரும் தூங்கலாம். வீராயி காவலிருக்கட்டும்....'' என்றான் பீமன்.

''இல்லை, நானும் ஆதியும் நள்ளிரவுக்குப் பிறகு காவலிருக்கிறோம்'' என்றாள் வீராயி.

''அப்படியென்றால், முதலில் நான் காவலிருக்கிறேன்....'' என்றான் நாகன்.

உடனே, வீராயி குறுஞ் சிரிப்புடன் முதுகுப்புறமாய்த் தொங்குகின்ற இரண்டு பைகளைத் தோள்களிலிருந்து கழற்றினாள்.

''இதென்ன வேர்க்கடலை, தினை மாவு உருண்டைகளும், கேழ்வரகு அடைகளும் வைத்திருந்த பைகளில், இன்னும் என்ன இருக்கிறது?'' என்று ஆவலுடன் கேட்டான் பீமன்.

''இரவில், முழுப் பசியுடன் தூங்காமல், ஆளுக்கு ஒரு மாம்பழம் தின்றுவிட்டுத் தூங்கலாம்'' என்றபடியே, பையிலிருந்து ஒரு மாம்பழத்தை எடுத்தாள். வால்மீகியிடம் கொடுத்தாள், வீராயி.

''ஏது மாம்பழம்?'' என்றான் ஆதி.

''மாம்பழத்துக்காக ஓடி மலைப் பாம்பிடம் காலைக் கொடுத்துவிட்டுப் பீமன் கதறித் தவித்தானே.... அந்தச் சமயத்தில் இவைகளைப் பறித்து வைத்தேன்....'' வீராயி, பைகளிலிருக்கிற மாம்பழங்களை எடுத்து எல்லோருக்கும் கொடுத்தவள், தயங்கினாள்.

''என்ன முழிக்கிறாய்.....?'' மாம்பழத்தைக் கடித்துக் குதப்பியபடியே கேட்டான் வால்மீகி.

''இன்னொரு மாம்பழம் மீதியாயிருக்கிறதே, அதை என்ன செய்வது என்று யோசிக்கிறேன்....'' என்றாள் வீராயி.

''அந்த ஆறாவது மாம்பழத்தை இந்தத் தடிப் பயலுக்குக் கொடுத்துவிடு!'' என்று பீமனைப் பார்த்துச் சிரித்தவாறே சொன்னான் ஆதி.

வீராயி அந்தக் கடைசிப் பழத்தைப் பீமனிடம் கொடுத்துவிட்டுத் தனது பழத்தைத் தின்னத் தொடங்கினாள்.

சற்று நேரத்திற்குள் —

ஆரணியம்முழுவதும், 'கும்ம்...ம்ம்' மெனக் காரிருள் கவ்விப் பரந்து இறுக்கமாகத் தழைத்தது.

எல்லோரும் மாம்பழங்களைத் தின்று பசியாறிய களைப்பில், பாறையின் மீது படுத்தார்கள். அவர்களது தலைப்பக்கமாகத்தடியுடன் உட்கார்ந்த நாகன், சுற்றிச் சூழ்ந்திருக்கிற கருக்கிருளைப் பார்த்தவாறே காவலிருக்கத் தொடங்கினான்.

நேரம் மெல்ல நகர்ந்தது.

மரம், செடி, கொடி, மலை, குன்று, பாறை யாவும் கண்ணுக்குத் தெரியவில்லை. வெறும் இருள்தான் — இருள் மட்டுமே தெரிந்தது. ஆமாம், காடு முழுவதும் கருக்கிருளாய்ச் செருமிக் கொழுத்துக் கண்ணை உறுத்தியது! எங்கே பார்த்தாலும் இருள்! எதைப் பார்த்தாலும் இருள்! இருள்!

காடார்ந்தகாரக் காரிருளைப் பார்த்துப் பார்த்துக் கண்கள் தவித்தன. அச்சமூட்டும் அந்தகாரத்தில் எதையும் புரிந்து கொள்ள முடியாத குழப்பத்தில் உள்ளம் தத்தளித்தது. 'இந்தப் பாழும் இருளைப் பார்த்துத் தவிப்பதை விட, சற்று நேரம் மல்லாந்து படுத்துக் கொண்டு, நட்சத்திரங்களையும் மேகங்

சிவனும் சக்தியும்!

பாபு: உங்க தாத்தா ஏண்டா எப்பப் பார்த்தாலும் 'சிவனே'ன்னு இருக்கேன். 'சிவனே'ன்னு இருக்கேன்னு சொல்லிகிட்டிருக்காரு?''

கோபு: அவருக்கு 'சக்தி' இல்லேடா. அதனாலேதான்.

— பால. கோவிந்தராஜ்.



களையுமாவது பராக்குப் பார்க்கலாம்'' என்று நாகன் நினைத்த நொடியே —

'கிறீச்ச்....!'

'கிறீச்ச்...!'

செவிகளுக்கு மிக அருகில் எழும்பி, நெஞ்சை உலுக்கிய அலறல் சப்தத்தைக் கேட்டதும் —

நாகனுக்குத் திகீரென்றது!

அவன் பயமும், பதற்றமுமாகக் கைத்தடியை ஊன்றி எழுந்தான். தலைக்கு மேலே முகத்தை நிமிர்த்திப் பார்த்தான்.

வான வெளியிலே —

சிக்கிமுக்கிக் கல் பாறைக்கு மேலே —

வளைய வளைய வட்டமிட்டுக் கூவியவாறு வரும் இரண்டு மலைக் கழுகுகளைப் பார்த்தான். ''ஹே....! எங்களை எல்லாம் செத்துப் போன ஜடங்கள் என்று எண்ணி வட்டம் போடுகிறீர்களா? அருகில் வாருங்கள். இந்தத் தடியாலேயே 'மடார்! மடார்!' என்று இரண்டு போட்டுத் தலையை நொறுக்கி விடுகிறேன்! இறக்கையை முறித்துப் போடுகிறேன்!'' என்று ஆக்ரோஷமாக முணுமுணுத்தபடியே, கைத்தடியைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டான், நாகன்.

நாலைந்து நிமிஷங்களுக்குப் பிறகு—

வான வெளியில் வட்டமிட்டுக் கொண்டிருக்கிற பிணந்தின்னிக் கழுகுகள் மெல்ல மெல்ல மேலேறிக் கிளம்பி, அக்கினி மலையை நோக்கிப் பறந்து போயின.

அப்புறம் —

நாகன் பெருமூச்செறிந்தான். வாயைப் பிளந்து கொட்டாவி விட்டான். தூக்கம், இமைகளில் கனத்தது. உட்கார்ந்தான். வால்மீகி, பீமன் இருவரையும் எழுப்பிவிட்ட பிறகு, படுத்தான். படுத்தவன், ஓரிரண்டு விநாடிகளில் நல்ல உறக்கத்தில் மூழ்கிப் போனான்.

இன்னும் தூக்க மயக்கம் தீரவில்லை. உட்கார்ந்திருக்கிற வால்மீகி, மடக்கிய கால்களைக் கைகளால் வளைத்துக் கொண்டு, முட்டிக் கால்களில் முகத்தைப் புதைத்தவாறு தூங்கினான். அமர்ந்த நிலையில், தூக்கத் தவிப்பைத் தாங்காமல் சாய்ந்தாடிய பீமன், சட்டெனக் கால்களை நீட்டிப் படுத்....

'கிகிகிகி....கிக்கீ....'

'கிகிகி....கிக்கீ!க்கீ!....'

வீறிட்டெழும்பிய பயங்கரக் கிறீச்சலைக் கேட்டதும் —

தூக்கம் சிதைந்து விழித்த வால்மீகி, உள்ளம் குலுங்கித் தவித்தவாறு, அங்கும் இங்குமாய்ப் பார்த்துப் பேந்தப் பேந்த விழித்தான். அவனுக்கு அருகில் படுத்திருக்கிற பீமன், ''என்னடா அது....?'' எனக் கேட்டபடியே புரண்டு படுத்தான்.

சில விநாடிகளில் —

வால்மீகி சுதாரித்துக்கொண்டான். சரியாக உட்கார்ந்தான். தலையிலிருக்கிற முண்டாசுத் துண்டை அவிழ்த்து உதறி, மீண்டும் தலையில் சுற்றிக் கட்டிக் கொண்டான். திரும்பினான். தூங்கிக் கொண்டிருக்கிற பீமனைப் பார்த்தான். ''டேய் பீமா....!எழுந்திரு! டேய்....!'' என்று அதட்டினாற் போல் கூவி, அவனை உலுப்பி எழுப்பினான்.

''என்னடா நீ.... தொந்தரவு செய்கிறாய்....'' என்றபடியே எழுந்தான். சுற்றிச் சூழ்ந்து கவ்வியிருக்கிற கருக் கிருளைப் பார்த்தான். திகைப்பும் திணறலுமாகக் கண்களைப் பரபரப்புடன் தேய்த்துத் துடைத்துக் கொண்டு, மறுபடியும் இருளைக் கூர்ந்து பார்த்தான். ''ஹூம்....! இந்தப் பாழும் இருளில், நாம் என்னடா செய்யப் போகிறோம்?'' என்ற பீமன், பெரிய கொட்டாவியை ஊதித் தள்ளினான்.

அடுத்த நொடி —

கூப்பிடு தூரத்திலுள்ள மரங்களைக் கவ்விய இருளிலிருந்து அலறல் சப்தம் சூழுறியது. 'க்கீய்ய்! கீய்ய்....! கிகிகிகி!'

''அதென்னடா?'' என்றான் பீமன்.


(தொடரும்)



இரயில், பஸ் ஆகியவற்றில், 'எக்ஸ்பிரஸ்'கள் இருப்பது தெரியும். ஆனால் இந்தியாவில் 'எக்ஸ்பிரஸ் ரோடு'கள் இருப்பதை நீங்கள் அறிவீர்களா? அத்தகைய எக்ஸ்பிரஸ் ரோடுகளில் ஒன்று மேற்கு வங்காளத்தில், கல்கத்தாவிற்கும், துர்க்காபூருக்கும் இடையில் உள்ளது. இதன் நீளம் 160 கிலோ மீட்டர்.

பிருந்தாவனம்

விசுவாமித்திரர் ஆலயம்




நெல்லை மாவட்டத்தின் தென் கோடியில் உள்ள கடலோர கிராமமாகிய விஜயாபதியில் விசுவாமித்திரர் ஆலயம் உள்ளது. தை, ஆடி அமாவாசைகளில் பக்தர்கள் கடல் நீராடி ஆலயம் சென்று தரிசிப்பார்கள். இந்தியாவிலேயே விசுவாமித்திரர் ஆலயம் இங்குதான் உள்ளது என்று பெரியவர்கள் கூறுகிறார்கள்.

— க. ராஜா (8532),
ஸ்ரீவில்லிப்புத்தூர்.

உடலுடன் சம்பந்தப்பட்ட ஊர்கள்

குளித்தலை
கண்ணனூர்
நாசிக்
பொட்டவாய்த்தலை
பல்லாவரம்
நாகபுரி
தொண்டைமான்பட்டி
வலங்கைமான்
முதுகுளத்தூர்
காரைக்கால்

— ஜி. சுதர்ஸன் (8810),
திருச்செந்துறை.




எதில் எழுத?



"அப்பா நான் ஒரு பத்திரிகைக்கு சிரிப்புத் துணுக்கு எழுதப் போறேன். எதிலே எழுத?"

"எதிலாவது எழுது. ஆனால் சுவரிலே மட்டும் எழுதாதே!"

— க. சுந்தரலிங்கம் (11568),
தூத்துக்குடி.



மணிக் கூண்டு

"மணி கட்டாத இந்த மணிக் கூண்டாலே யாருக்கு என்னடா பிரயோசனம்?"

"ஏண்டா பிரயோசனம் இல்லே? என் வீட்டுக்கு வருகிறவங்களுக்கு அடையாளம் சொல்லவாவது பிரயோசனப்படுதே!"


— ஜோ. சினிவாசன், (1920), சென்னை—112.

லாரி வடிவில் நீர்த்தொட்டி

எங்கள் ஒசூர் நகரை அடுத்து இராயக் கோட்டை செல்லும் சாலையில் சிறிய குன்றின் மீது, ஒரு லாரி நிற்பது போலத் தெரியும். ஆனால், அது மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி! நீங்கள் எங்கள் ஊருக்கு வந்தால், அந்த லாரி வடிவில் அமைந்திருக்கும் நீர்த் தொட்டியைப் பார்த்து வியப்படைவீர்கள். உண்மையான லாரியைப் போலவே வர்ணம் தீட்டப் பெற்ற அந்த நீர்த் தொட்டி எங்கள் ஊர் நகராட்சி அமைத்தது!

— கே. நரசிம்மன் (7378), ஒசூர்.





என்ன கேட்கிறார்கள்?

கோபு தன் அம்மாவிடம் அம்மா முப்பதுவிற்குது.வாங்கிக்கொடும்மா' என்று அடம் பிடித்து அழுதான். செல்லாவும் தம்பியைப் போலவே 'அம்மா பதினொன்று விற்குது. வாங்கித் தாம்மா' என்று அழுதாள். பக்கத்து வீட்டு மூர்த்திக்கு அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றே புரியவில்லை. உங்களுக்குப் புரிகிறதா?

விடை: ஆரஞ்சுப் பழம் 30=6X5; 11=6+5


— எஸ். ஜெயஸ்ரீ (1254), திருச்சி—14.

அது எப்படி?

"கட்டணம் ஏறியது பற்றிக் கவலை இல்லாமல் எங்கு போனாலும் என் அப்பா டாக்ஸியில்தான் போவார் என்கிறாயே? அது எப்படி?"

"அவர் டாக்ஸி டிரைவர் ஆச்சே!"

— கே. ராஜா (6963), சென்னை—28



என்ன தவறு?

ஒரு விளையாட்டு அரங்கின் செயலாளர் அதன் தலைவரிடம்,

"ஐயா, நமது விளையாட்டு அரங்கில் நாளை நடக்கவிருக்கும் விளையாட்டுகளுக்கான விளம்பர போஸ்டர்களைத் தவறாக அச்சடித்துவிட்டார்கள்.

"அப்படி என்ன தவறு நேர்ந்தது?"

"இரு 'மல்யுத்தப் போட்டிகள்' என்பதற்குப் பதிலாக 'இருமல் யுத்தப் போட்டிகள்' என்று அச்சடித்து விட்டார்கள்.



— ஜி. கே. சங்கர் (771), மதனபுரம்.



அரிது

'அரிது' என்று முடியும் குறள்கள்:

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக் கவலை மாற்றல் அரிது.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

பொருள் அற்றார் பூப்பர் ஒருகால்; அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது.

— ஓ. எஸ். இரமேஷ். (9303)


வருமுன் காப்பது

ஒருமுறை முல்லா நஸ்ருதீன் ஒரு சிறுவனிடம் ஒரு பானையைக் கொடுத்து, தண்ணீர் எடுத்து வரச் சொன்னார். சிறிது தூரம் சென்றதும் அச்சிறுவனை அழைத்து, 'பானையை உடைக்காமல் எடுத்து வர வேண்டும்' என்று கூறி அவன் தலையில் இரண்டு குட்டு குட்டினார்.

"பாவம், அவன் மேல் என்ன தவறு? போகும்போதே இப்படி ஏன் குட்டினீர்கள்?" என்று ஒருவர் கேட்டார்.

"பானையை உடைத்த பிறகு அவனைக் குட்டுவதால் என்ன பிரயோசனம்? இப்பொழுதே குட்டினால் ஜாக்கிரதையாகக் கொண்டு வருவான். வருமுன் காப்பதே எப்பொழுதும் நல்லது" என்று கூறினார் முல்லா நஸ்ருதீன்.

— தா. இராஜேந்திர பிரசாத் (11517), சென்னை—87.




ஏன் தோற்றது?

முயலுக்கும் ஆமைக்கும் இடையே நடந்த ஓட்டப் பந்தயத்தில் முயல் ஏன் தோற்றது என்று தெரியுமா?

'முயல் ஆமையால் தோற்றது' என்பதை வேகமாக உச்சரியுங்கள். 'முயலாமையினால் தோற்றது' (முயற்சி செய்யாமையினால் தோற்றது)

— ஆர். பிரசன்னா, (3221), கரூர்—1.





கவிஞர் கண்ணதாசன் சொன்னது

பன்னிரண்டு வயது வரையிலே நான், தலைமுடியில் கிராப் செய்து கொண்டதில்லை. மொத்தமாக வளர விட்டுவிடுவார்கள். 'மலையக் கோவிலுக்கு முடி, அழகர் கோயிலுக்கு முடி' என்று ஒவ்வொரு கோயிலுக்காக முடி வளர்க்கச் சொல்வார்கள். காரணம், பால வயதில் தலையில் சேருகிற அழுக்கு மூளையின் ஆரோக்கியத்தைப் பாதிக்காத வண்ணம், அடிக்கடி தெய்வத்தின் பெயரால் 'முடி இறக்குதல்' என்ற பெயரில் மொட்டை அடித்துக் கொண்டே இருப்பார்கள்.

ஆதாரம்: அர்த்தமுள்ள இந்து மதம்


தகவல்: அ. நடராஜன் (4797), அண்ணாமலைநகர்.

மூன்று புனித இடங்கள்

இந்துக்களின் புனித இடமான சிங்காரவேலன் எழுந்தருளியுள்ள சிக்கல், கிறிஸ்தவர்களின் புனித இடமான வேளாங்கண்ணி, முஸ்லீம்களின் புனித இடமான நாகூர் — இவை மூன்றும் அடுத்தடுத்து இருப்பது ஆச்சரியப்படத்தக்கது.

— அ. சரவணன், திட்டக்குடி.





எது எது?


1. நாம் பாடம் பயிலச் செல்வது...?
2. கோலத்திற்கு முதலில் இடுவது...?
3. இதை வைத்தும் நெருப்பு மூட்டலாம்.....?
4. முருகனின் இளைய மனைவி....?
5. தங்கத்திற்கு அடுத்த மதிப்பு....?

விடைகள்: 1. பள்ளி; 2. புள்ளி; 3. சுள்ளி; 4. வள்ளி; 5. வெள்ளி.

— தி. மதிவாணன் (3755), பாப்பிரெட்டிபட்டி.

சித்தப்பாவாம் சித்தப்பா!

லென்ஸ்



சித்தப்பா அமெரிக்காவிலிருந்து திரும்பி வரப்போகிறார்' கண் விளிம்பில் எட்டிப் பார்த்த ஆவலுடன் அந்தச் செய்தியைச் சேகர் கிரகித்துக் கொண்டான்.

'அமெரிக்கா' 'சித்தப்பா' — இந்த இரண்டு வார்த்தைகளும் சேகரைக் கிட்டத்தட்ட கனவுலகிலேயே ஆழ்த்தி விட்டிருந்தன.

ஸ்கூலிலும், சக நண்பர்களிடம் பெருமையடித்துக் கொள்ளும் போதும், மற்ற நேரங்களிலும், சித்தப்பா வருகைதான் பேச்சில் கலந்திருந்தது!

சேகருக்குச் சித்தப்பா வாங்கி வரும் பரிசுப் பொருள்கள் எப்படியெல்லாம் இருக்கும்? யார் யாரிடம் பரிசுப் பொருட்களைக் காட்டலாம்? 'ம்! பக்கத்து வீட்டு ரமேஷிடம் நிச்சயம் காட்டணும். எதிர்வீட்டு நளினியிடம் பெருமையடித்துக் கொள்ளணும்... கலாவிடம் எதையும் காட்டக் கூடாது. உடனே 'திருஷ்டி' போட்டு விடுவான்....' என்று மனக்குதிரையைத் தட்டிவிட அது விரைந்து சென்றது கற்பனை உலகை நோக்கி.

''சித்தப்பா கண்டிப்பாக கேமிரா வாங்கி வந்திருப்பார். அது மட்டும் கையில் கிடைத்தால்... எல்லா நண்பர்களும் என்னிடம் வருவார்கள். 'போட்டோ எடுடா, எடுடா' என்று கெஞ்சுவார்கள்....'' ஆசைக்கு அளவேது? முடிவேது?

ஒருவழியாக சித்தப்பா விமான மார்க்கமாக வந்து சேர்ந்தார். மீனம்பாக்கம் விமான நிலையத்திலேயே அவருக்கு ஏக கிராக்கி! எல்லா உறவினர்களும் ஆளுக்கு ஆள் காரில் குடும்பத்துடன் வந்து அழைத்தனர். சேகரும்மகிழ்ச்சியோடுகைகொடுத்து அவரை வரவேற்றான்.

எல்லாரும் வியக்கும்படியாக, சித்தப்பா எல்லாரையும் அனுப்பிவிட்டு பேருந்து ஒன்றில் மூட்டை முடிச்சுடன் ஏறிக் கொண்டார். ஓட்டலில் அறை எடுத்துத் தங்கிவிட்டார்.

ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வீட்டிற்குச் சென்று எல்லாரையும் பார்த்

துப் பேசிவிட்டு, பரிசுப் பொருட்களைக் கொடுத்து வந்தார்.

அன்று சேகர் வீட்டுக்குச் சித்தப்பா வந்தார். சித்தப்பாவிடம் வழக்கம் போல அப்பா உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது "டேய்! சேகர்! உனக்கு என்ன கொண்டு வந்திருக்கிறேன் பார்!" என்று மெதுவாகப் பெட்டியிலிருந்து ஒரு 'வீடியோ கேம்' பெட்டியை எடுத்து வைத்தார்.

"சித்தப்பா! நிறைய வாங்கிட்டு வந்தீங்களா?" என்றான் சேகர் குழந்தைத்தனமாக.

"ம்! உனக்கு இது மட்டும்தான் பிடிச்சிருக்கா, பார்," என்று கூறிவிட்டு சித்தப்பா அப்பாவிடம் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

சேகருக்கு "வீடியோ கேம்" பற்றித் தெரியாவிட்டாலும், பெட்டி நிறைய எதிர்பார்த்தவனுக்கு ஒன்று மட்டும் கிடைத்தது ரொம்பவும் அவனைப் பாதித்துவிட்டது.

கேமிரா சகிதம் எத்தனையோ விளையாட்டுப் பொருட்களை எதிர்பார்த்து ஏமாந்து போனான் சேகர்.

எப்படி நண்பர்களைப் பார்ப்பது? சித்தப்பாவின் கையை எதிர்பார்த்து, வாசுவிடம் அவன் வீட்டுக்கு வருவதில்லை என்று வீராப்புப் பேசியிருந்தான் சேகர். சே! சித்தப்பாவாம் சித்தப்பா! கஞ்சமகாப் பிரபு! கேமிரா மட்டுமாவது வாங்கி வரப்படாதா? தேய்ந்தா போகும் சொத்து?'

வானுயரக் கனவுக் கட்டிடம் கட்டினவன் வசை மாரி பொழியத் தொடங்கிவிட்டான்—மனசுக்குள்ளேதான்!

"டேய் சேகர், காப்பி கொண்டு போய்க் கொடுடா சித்தப்பாவுக்கு..." என்றாள் அம்மா; அடுக்களையிலிருந்து.

"அம்மா, நான் வாசுவைப் பார்க்கப் போறேன்," என்று 'விர்'ரென்று சித்தப்பாவிடம் கூடச் சொல்லாமல் கிளம்பினான் சேகர்.

வாசு வீட்டிற்குப் போய் சித்தப்பா 'வீடியோ கேம்' மட்டும் வாங்கிய கதையைச் சொல்லி, அவரைக் கஞ்ச மகாப் பிரபுவாகச் சித்திரித்த சேகர், ரொம்ப நேரம் சென்றதும் வீடு நோக்கித் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

வழியிலிருந்த பஸ் ஸ்டாப்பில் அவனுடைய அப்பாவும், சித்தப்பாவும் நின்றார்கள். சித்தப்பாவை பஸ்ஸில் ஏற்றிவிட அப்பா வந்திருந்தார். அவர்களைப் பார்த்ததும் சேகர் அவர்களுக்குத் தெரியாமல் மறைவாக நின்று கொண்டான். இருட்டில் அவர்களும் இவனைப் பார்க்கவில்லை.

'சேகர்' 'சேகர்' என்று பேச்சின் நடுவே அடிபடுவதைக் கவனித்த சேகர், காதைத் தீட்டிக் கொண்டு கேட்டான்.

சித்தப்பாவின் குரல் கேட்டது:

"சேகருக்கு நான் அதிகம் எதுவும் வாங்கி வரலைன்னு கோபம் போலிருக்கு."

"ம்... அதெல்லாமில்லை,.... விளையாட்டுப் பையன்..." என்று அப்பா சமாளித்ததும் கேட்டது.

"இல்லை அண்ணா! எனக்கிருந்த ஆசையில் நான் சேகருக்காக ஒரு விலையுயர்ந்த காமிரா கூடக் கொண்டு வந்தேன். ஆனால், ஒட்டலிலிருந்து

* டப்பாவில் உணவுப் பொருட்களை அடைத்து, அவற்றைக் கெடாமல் பாதுகாக்கிறோம். இம்முறையை நிக்கலஸ் அப்பெர்ட் (Nicholas Appert) என்ற பாரிஸ் நாட்டைச் சேர்ந்தவர்தான் கண்டுபிடித்தார்.



"ஏன் ஒட்டகம் முட்டை இடுவது இல்லை?"

"அவ்வளவு உயரத்திலிருந்து முட்டையிட்டால், கீழே விழுந்து உடைந்துவிடுமே, அதனால்தான் சார்."

— பி. செந்தில்குமார் (6861), பேரூர்.



அதைக்கொண்டுவரப்போகும்போது எனக்கு என்னவோ தோன்றியது. நான் செய்வது தவறுன்னு எனக்குப் பட்டது....''

''புரியலியே!'' என்ற அப்பாவின் குரலைத்தொடர்ந்து,மீண்டும்கேட்டது சித்தப்பாவின் குரல்:

''அவனுக்கு இந்தச் சிறு வயசுலே ஆசைகளைப் பெருக்கி விட்டுட்டேன்னா நீங்கதான் கஷ்டப்படுவீங்க. அது மட்டுமில்லே. இந்தப் பரிசுகளின் மோகம் ஒரு மாசம்தான் தங்கும். அப்புறம் இதே மாதிரியான விலையுயர்ந்த பொருள்கள் மேல்தான் அவனோட கவனம் திரும்பும். நீங்க வாங்கித் தந்தாலும், தராவிட்டாலும் உங்களுக்குத் தொந்தரவுதான்.''. காமிரா வாங்கினா மட்டும் போதுமா? அதுல பிலிம் போட்டு, பிரிண்ட் பண்ண... நிறையச் செலவாகும்,உங்களுடைய கஷ்ட நிலைமையில நான் வாங்கிக் கொடுத்த பொருளாலே உங்களுக்குக் கஷ்டம் ஏற்படுத்த விரும்பல்லே.

''அது சரிதான்! ஆனால், நீ ஏன் ஓட்டலிலேதங்கினாய்?'' என்று அப்பாவின் குரல் சற்றே உடைந்து கேட்டது.

''அண்ணா, எனக்கு உங்க வீட்டிலே தங்கிடணும்னுதான் ஆசை இருந்தது. ஓட்டலிலே இருக்கிற சௌகரியத்தை எனக்கு வீட்டில் நீங்கள் தர முயற்சி பண்ணினா, உங்களுக்கு அநாவசியச் செலவு ஆகுமேன்னுதான்... மத்தவங்க வீட்டில் தங்கினா, உங்க மனசு புண்படுமேன்னுதான்...
ஓட்டலிலேயே தங்கிட்டேன். மன்னிச்சிடுங்க.''

இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே பஸ் வந்து விட்டது. சித்தப்பா வேகமாகப் பஸ்ஸில் ஏறிக்கொள்ள அப்பா கையசைத்து வழியனுப்பி விட்டு வீடு திரும்பினார். சேகரின் மனம் கிடந்து தவித்தது. 'சே! எத்தனை பெரிய தவறு பண்ணிட்டேன்? நம்ம நிலைமைக்கு ஏற்ப நாம் இருந்தாத்தான் மதிப்பும் கௌரவமும் அப்படின்னு உணராமே, அடுத்தவங்க கொடுக்கிற பரிசுக்காக ஆசையைக் கோட்டையாக் கட்டி...''

வீட்டுக்கு வந்து சேரும்போது, குறைநீங்கியவனாகத் திரும்பினான். ''சித்தப்பான்னா சித்தப்பாதான்...!'' என்று கூறிக்கொண்டு வேலையில் கவனம் செலுத்தினான்!

The following particulars regarding the ownership of 'GOKULAM', the Tamil monthly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication: Madras
2. Periodicity of Publication: Monthly
3. Name of Printer: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony,
   Anna Nagar,
   Madras-600 040.

4. Name of Publisher: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony,
   Anna Nagar,
   Madras-600 040.

5. Name of Editor: K. Rajendran
   Nationality: Indian
   Address: 1, Fifth Street,
   Lake Area,
   Nungambakkam,
   Madras-600 034.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital: Bharathan Publications Private Limited, 84/1-C, Race Course Road, Guindy, Madras-600 032.


I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. Murali,
Publisher.

1.3.1986

புதுமைப் போட்டி 4

முதற் பரிசு பெறும் மதிப்புரை—ஆ. ஜெ. செ. மீரா



இளைய பாரதத்திற்கு ஒரு நல்ல படிப்பினையாக அமைந்தது 'ஒரு பூனை புலியாகிறது' என்ற தொடர் கதை. நாட்டுப் பற்றை வளர்க்கும் ஒரு சிறந்த கதை இது. ஏடு தூக்கிப் பள்ளி செல்லும் இன்றைய சிறுவர்கள் நாடு காக்கும் வீரமிக்கவராய் விளங்க வாய்ப்பிருக்கிறது என்பதை விளக்குகிறது. இந்த இளைஞர் ஆண்டிற்கு ஏற்ற கதை இது. நாட்டிற்குத் தொண்டு செய்ய, செல்வமோ, உடல் வலிமையோ தேவையில்லை. மனவலிமையும், அறிவுமே தேவை என்பதை இது விளக்குகிறது.

''பிறப்பிடம் எதுவாய் இருந்தாலும்
சிறப்பிடம் பெறுவது அறிவாலே'' என்று எடுத்துக் கூறுகிறது.

இக்கதையில் வரும் எல்லாக் கதாபாத்திரங்களும் மனத்தில் பதியும்படியுள்ளன. செல்வந்தர்களிடமும் இரக்கமும் அன்பும் உண்டு என்பது விஜய்யின் மூலம் அருமையாக விளக்கப்பட்டுள்ளது. நாட்டுக்காகப் பாடுபட்டு அதற்காகத் தன் நல் உயிரையும் ஈந்த தேனீயை நினைக்கும் போது கண்கள் குளமாயின. பகைவரின் காரிலேயே ஏறித் தப்பித்த சேரனின் ஆற்றலை என்னென்பது! பின், கயவர்களால் தான் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் போது, 'சேரன் தீயை ஏற்படுத்தித் தப்பித்துக் கொள்ளும் இடத்தில், 'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்பது அழகாக விளக்கப்பட்டுள்ளது. பாப்பாவும், அவளின் அன்னையும் ஏழையாக இருந்த போதிலும் சேரனுக்கு உதவ முன் வந்தது நெஞ்சை நெகிழச் செய்தது. காலந்தவறாத அந்த மத்திய அமைச்சர் தம் உயிருக்கு ஆபத்து எனத் தெரிந்தும், அஞ்சாமல் விழாவில் கலந்து கொள்ளுவது பாராட்டத் தக்கது.

டாலர் அனைத்துச் சிறுரின் மனத்தையும் கவர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. டாலருக்கும் பரிசு அளித்திருந்தால், இன்னமும் நன்றாக இருந்திருக்கும். சேரனின் செயற்கருஞ் செயலால் அறிஞர், விஜய், பாப்பா, பாப்பாவின் அன்னை ஆகியோர் மட்டுமல்ல; நாங்களும் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தோம். சேரனின் புகழால் அவன் தாய் எப்படி மகிழ்ந்திருப்பாள் என்பதை ஆசிரியர் குறிப்பிடா விட்டாலும்,

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.''

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இலக்கணமாகி இருப்பாள் என்பது உறுதி. மேலும், சேரனிடம் அமைச்சர் ''என்ன வேண்டும் கேள்?'' எனக் கேட்டபொழுது தனக்கென்று கேட்காமல், தனக்குதவிய பாப்பாவின் நலனுக்காகக் கேட்டது அவனது நன்றி உணர்வை விளக்குகிறது.

ஆசிரியர் குறிப்பிட்டதுபோல இந்தக் கதையைப் படிக்கும் சிறுவர்களில் பல நூறு பேர் சேரனைப்போல் நாட்டுக்குச் சேவை செய்யச் சபதம் செய்திருப்பார்கள். அவர்களில் சிலராவது தங்கள் சபதத்தை நிறைவேற்றினால்

போதும். ஜாக்கியின் கும்பல் என்ன, உலகின் மாபெரும்நாடேபடையெடுத்தாலும் பாரதத்தை அணுக, அசைக்க, அழிக்க முடியாது என்பது திண்ணம். ஆசிரியர் கதையின் தொடக்கத்திலிருந்து முடிவு வரை விறுவிறுப்பாகக் கொண்டுசெல்கிறார். இடையிடையில் அறிஞர்களின் பொன்மொழிகளையும் அறிவுரைகளையும் அழகாக எடுத்தாண்டுள்ளார். அவர் குறிப்பிட்ட கென்னடியின் பொன்மொழி,

> ''நாடு உனக்காக என்ன செய்தது என்று கேட்காதே!
> நாட்டிற்கு நீ என்ன செய்தாய் என்று உன்னையே கேட்டுக் கொள்.''

என்பது எங்களையும் சிந்திக்கச் செய்தது. இந்தக் கதை சிறுவர்களை மட்டுமல்ல; பெரியவர்களையும் கூட ஆர்வமாகப் படிக்கச் செய்தது. மொத்தமாகக் கூறினால், இந்தக் கதை எல்லாப் பருவத்தினருக்கும் ஏற்ற ஒரு சிறந்த, விறுவிறுப்பான, அருமையான கதை என்று கூறலாம்.

வாழ்க பாரதம்; வளர்க அதன் புகழ்!

2வது பரிசு பெறும் மதிப்புரை

– ஆ. சிவப்பிரியா

டாக்டர் பூவண்ணன் வருங்காலச் சிற்பிகளாகிய சின்னஞ் சிறுவர்களுக்குத் தேச பக்தியையும், நேர்மை,



வீரம் ஆகிய நற்பண்புகளையும் வளர்க்க இனிய, எளிய நடையில் ''ஒரு பூனை புலியாகிறது'' என்னும் அரிய படைப்பை நமக்குத் தொடர்கதையாகத் தந்துள்ளார். நீரோட்டம்போல தங்கு தடையின்றிச் செல்லும் அவர்தம் சொல்லாற்றலால், தான் கூறும் கருத்துக்களைச் சிறுவர் உள்ளத்தில் கல்மேல் எழுத்துப் போல் பதிய வைக்கிறார். 'அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என்ற ஆவலைத் தூண்டும் வகையில் ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவையும் அமைத்துள்ளார்.

நம் அன்றாட வாழ்வில் காணக் கூடிய சாதாரண பள்ளிச் சிறுவனாக சேரன் நமக்கு அறிமுகமாகிறான். ''நான் பலசாலியுமல்ல; எனக்கு மன பலமும் இல்லை; என்றால் நாட்டிற்கு எந்த சேவையும் செய்ய முடியாது'' என்னும் மனநிலையில் இருந்த சேரன், கையில் ஒரு பெரிய பொறுப்பைத் தேனீ ஒப்படைத்ததும் படிப்படியாக அறிவோடும்,நிதானத்தோடும்பொறுமையாகச் செயல்படுகிறான் என்பதை மிக யதார்த்தமாக ஆசிரியர் விளக்கிச் செல்கிறார்.

நவம்பர் 8 ம் தேதியிலிருந்து, 14 ம் தேதி மத்திய மந்திரியின் உயிர் காக்கப்படும்வரை நடக்கும்ஒவ்வொருநிகழ்ச்சியையும் தம் எழுத்தாற்றலால் நம் மனக்கண்முன் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். நல்லவர்களுக்குத் தெய்வம் மனித வடிவில் கைகொடுக்குமென்ற நம்பிக்கையை ஒரு சிறுமியின் மூலம் நம் உள்ளத்தில் பதிய வைக்கிறார். ஆசிரியர் நம்மைக் கதையோடு ஒன்ற வைத்து, சேரன் எதிரிகளால் துன்பப்படும்போது, நாம் அவனுக்காகப் பதறவும், அவன் தப்பிச் செல்லும் போது நாம் மனம் மகிழவும் வைக்கிறார்.

மாதுவுக்குத்தீக்காயம்பட்டபோது, தன்னை அடித்த அவனிடமும் இரக்கம் கொள்ளும் சேரனின் பிஞ்சு உள்ளத்தில் முழுமையாக வளர்ந்திருக்கும் மனிதப் பண்பு,பாரததேசத்தின் அடிப்படைப் பண்பே எனக் காணும் போது நாம் பெருமிதம் கொள்கிறோம்., போலீஸ் கமிஷனர் கூறியதுபோலவே சேரனின் சென்னைப் பயணம் சேரன்



தண்டவாளம் தேவையில்லை; தரையிலேயே ஓடும் என் ரயில்!

புகைப்படம்: எம். நடராஜன்

செங்குட்டுவனின் இமயப் பயணம் போல் வரலாற்றில் நிலைத்துவிட்டது. சேரன் மைக்ரோ பிலிமை ஒளித்து வைக்கும் இடம் நம் கற்பனைக்கும் எட்டாத ஒன்றாக உள்ளது.

"கால தாமதம் சாலவும் தீது," "அஞ்சுவது அஞ்சாமை பேதமை," "ஊழிற் பெருவலி யாவுள," "விதியையும் வென்றே தீருவேன்" போன்ற சொற்றொடர்களை ஆசிரியர் தக்க இடங்களில் கையாள்வது மிக்க அருமை. நிகழ்காலத்தில் பொருள் எவ்வாறு பல வேலைகளைச் சாதிக்கிறது என்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

கடைசி அத்தியாயம் இத்தொடர் கதைக்குச் சிகரமாக, மணிவிளக்காக அமைந்துள்ளது. இக்கதையைப் படிக்கும் ஒவ்வொரு சிறுவனையும் "நாடு எனக்கு என்ன செய்தது என்று கேட்க மாட்டேன். நாட்டுக்கு நான் என்ன செய்தேன் என்று கேட்டுக் கொண்டு, நாட்டுக்குச் சேவை செய்து நானும் ஒரு சேரனாவேன்" என்று சபதம் எடுக்கச் செய்யும். எழுத்தாற்றலுக்காக ஆசிரியருக்கு என்ன பரிசு கொடுத்தாலும் தகும்.

வளர்க அவர்தம் நற்பணி!

ரஞ்சி கோப்பைக்கு ஒரு நட்சத்திரம்

ரஞ்சி கோப்பைப் பந்தயங்களின் பொன் விழா 1985ம் ஆண்டு வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. முதல் ரஞ்சி கோப்பைப் பந்தயம் சென்னையில்தான் மைசூருக்கும் சென்னைக்கும் நடைபெற்றது. இந்த முதல் பந்தயத்தில் பங்கேற்கும் வாய்ப்பினைப் பெற்றவர் பி.எஸ். ராமச்சந்திரன். தன் தாத்தா பங்கேற்ற ரஞ்சி கோப்பைப் பந்தயத்தில், அந்த இளைஞரும் பங்கேற்று மாபெரும் சாதனைகளைச் செய்திருக்கிறார் என்றால் அந்த இளைஞரைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டாமா? இவர் இடது கை பாட்ஸ்மன். இவருக்குச் செஞ்சுரி போடுவதென்றால் ரொம்பவும் ஆசை. தமிழ்நாட்டிலேயே ரஞ்சி கோப்பைப் பந்தயங்களில் 9 செஞ்சுரி போட்ட ஒரே தமிழக ஆட்டக்காரர் என்ற புகழைப் பெற்றிருக்கிறார் சிவராம கிருஷ்ணன். அது மட்டுமல்ல; இந்த இளைஞருக்கு தேசிய ரஞ்சிப் பந்தயங்களில் 4000 ரன்களைக் குவித்த ஒரே தமிழக ஆட்டக்காரர் என்ற பெருமையும் கிடைத்திருக்கிறது. தமிழ்நாட்டில் கிருபால் சிங் ரஞ்சி கோப்பைப் பந்தயங்களில் 8 செஞ்சுரி போட்டிருக்கிறார். கிருபாலின் ரிகார்டை சிவராம கிருஷ்ணன் முறியடித்திருக்கிறார்! தெற்கத்திய பிரிவு கிரிக்கெட் ஆட்டக்காரர்களில் செஞ்சுரி போட்டவர்களில் டெஸ்ட் நட்சத்திரங்கள் ஜெயசிம்மா, பிரிஜேஷ் பட்டேல், ஜி.ஆர். விசுவநாத் இவருக்கு முன்னோடிகள்.

இவரது சிறப்பான செஞ்சுரி — 169 ரன்கள் கிடைத்தது படேபடே பௌலர்களான பிரஸன்னா, சந்திரசேகர், பின்னி, விஜய கிருஷ்ணா, ஜெயபிரகாஷ் ஆகியோர் அடங்கிய குழுவுக்கெதிராக.

ஆந்திரக் குழுவுக்கெதிராகத் தொடர்ச்சியாக மூன்று சதங்கள் 177, 112, 104; கேரளக் குழுவுக்கு எதிராக 165 நாட் அவுட், 100 நாட் அவுட்; பிகார் குழுவுக்கெதிராக 108 நாட்



குண்டுமணி



எஸ். ஸ்ரீராமன்.

அவுட்; தலை சிறந்த பம்பாய்க் கோஷ்டிக்கெதிராகவும் 116 ரன்கள் ரஞ்சி கோப்பைப் பந்தயங்களில் எடுத்திருக்கிறார்.

1980—81ம் ஆண்டில் சிவராம கிருஷ்ணன் அகில இந்திய ராங்கில் இரண்டாவது இடம் பெற்றது அவரது 630 ரன் சாதனையினால் கிடைத்தது. 1984—85ம் ஆண்டில் மூன்றாவது இடம் இவரது 596 ரன்களினால் பெற முடிந்தது!

ஒன்பது செஞ்சுரியோடு சதத்தை எட்டாது 90க்கு மேல் ரன்கள் எடுத்த பல சமயங்களும் உண்டு. தியோதர் கோப்பை கிரிக்கெட் பந்தயத்தில் 'அதிக ரன்கள்' அடித்ததில் இவருக்கு மூன்றாவது இடம் கிட்டியது. இளம் வயதில் கலாசாலை மாணவராக 1972ல் சென்னை சர்வ கலாசாலைக் குழுவுக்கு ஆடி 213 ரன்கள் எடுத்தது பலருக்கு மறந்திருக்காது! இவர் நல்ல பாட்ஸ்மன் ஆக இருப்பதோடு பீல்டிங்கிலும் சூரர். ஒன்பது செஞ்சுரிகள் அடித்துத் தமிழகத்துக்குப் பெருமை சேர்ந்த சிவராம கிருஷ்ணனின் சாதனை தேசீய செலக்டர்களின் கண்ணில் படாதது ஆச்சர்யம்தான்! ஒரு வேளை இவர் தமிழகத்தில் பிறக்காமல் பம்பாயிலோ வடநாட்டிலோ பிறந்திருந்தால் இவரை டெஸ்ட்டுக்கு எடுத்திருப்பார்களோ என்னவோ?

ஒருவருக்குநிறையத்திறமைஇருக்கலாம். அந்தத் திறமையைச் சுடர் விட்டுப் பிரகாசிக்க அவருக்கு அகில இந்திய அளவில் டெஸ்ட் சான்ஸ் கிடைக்காமல் போனால் அவருக்கு விரக்தி ஏற்பட்டு விடுவது சகஜம் தானே? தமிழகக் கிரிக்கெட் ஆட்டக்காரர்களான வேங்கடராகவன், டி.ஈ. சீனிவாசன் கிரிக்கெட்டிலிருந்து 'ஓய்வு' பெற்றது போல் இந்த இளைஞரும் 'ஓய்வு'க்கு அப்ளிகேஷன் போட்டு விடாமல் இன்னும் இவரது சாதனைப் பட்டியல் சிறக்க வழி பிறக்குமா? ஒன்பது செஞ்சுரிகள் தமிழகத்துக்குப் பெருமை சேர்த்ததுபோல் இந்திய அரங்கில் இவர் புகழும் சேர்க்கும் காலம் என்று வருமோ?

இந்திய கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டின் தலைமைப் பதவியை, நிர்வாகத்துக்குத் தலைசிறந்த எஸ். ஸ்ரீராமன் ஏற்றிருக்கிறார். அவரது தலைமைக் காலத்தில் இந்த இளைஞருக்கு டெஸ்ட் சான்ஸ் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்ப்போம்!

புதிர் 9 விடை

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை.
உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

(பாடல் தலைப்பு: 'தமிழ்')

வெற்றி யாருக்கு?



டாக்டர் பூவண்ணன்

கந்தா நகரம் பாக்தாத்தின்
சுல்தான் மாலிக் ஷாஎன்பார்
சொந்த சகோதரன் பகையாலே
தொடங்கிய போரில் குதித்தாரே!

ஆயிரம் ஆயிரம் வீரர்களை
அணியணி யாக அனுப்பினராம்!
ஆயினும் போரோ முடியவில்லை!
யாரோ வெல்வார்? தெரியவில்லை!

சண்டை நடக்கும் ஓர்நாளில்
சாயங் கால வேளையினில்
மன்னர் ஷாவும் மந்திரியும்
மசூதி சென்று தொழுதனரே!

தொழுகை முடித்து, மந்திரி, பின்
தொடர வந்தார் மாலிக்ஷா.
வழியில் அரசர், அமைச்சரிடம்
வகையாய்க் கேட்டார் ஒருகேள்வி.


"எல்லாம் கொடுக்கும் இறைவனிடம்
எதனை வேண்டித் தொழுதீர்,நீர்?
சொல்லுக! சொல்லுக!" என்பதுதான்
சுல்தான் கேட்ட ஒருகேள்வி.

"இறைவா! நடக்கும் போரினிலே
எங்கள் சுல்தான் வெற்றிபெற
அருள்வாய்!" என்றே தொழுதேன்,நான்"
அமைச்சர் இப்படிப் பதில்சொன்னார்.

"அரசே! நீங்கள் ஆண்டவனை
யாது வேண்டித் தொழுதீர்கள்?
உரைப்பீர்" என்று மன்னரையே
உடனே அமைச்சர் கேட்டாரே!

"போரில் இருவர் மோதுகிறோம்
பொன்போல் மக்களை ஆளும்திறம்
யாரிடம் அதிகம் உள்ளதுவோ,
அன்னவர் வென்றிட அருள்செய்க

என்றே கேட்டேன்" எனச்சொன்னார்
எவரும் போற்றும் மாலிக்ஷா.
பண்பில் இவர்போல் உயர்ந்தவரைப்
பார்ப்பது அரிது, அரிதேயாம்!



வேலை கிடைத்தது

டி. ஜானகி

அமுதன் வீட்டுத் திண்ணையின் வெளிப் பக்கத்திலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளைப் பார்த்ததும், சின்னப்பனுக்கு சந்தோஷம் தாங்கவில்லை. வேகமாக வீட்டிற்குள் நுழைந்தான்.

அங்கே —

அமுதன் கம்பஞ் சோற்றைக் கரைத்துக் குடித்துக் கொண்டிருந்தான்.

"டேய் அமுதா! எங்கம்மா என்னை பஸ்ஸிலேயே போன்னு சொல்லிப் பணம் கொடுத்திருக்காங்க. உன்னோடை நான் சைக்கிள்லே வரலை. பஸ்ஸுக்கு நேரமாச்சு. நான் வரேன்" என்று சொல்லிவிட்டு வேகமாக வாசல் பக்கம் வந்தான்.

அந்தச் சமயம் பார்த்து அமுதனின் தந்தை வெளியே இருந்து உள்ளே நுழையவே அவரிடம் இரண்டு நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தான். அவர் வீட்டுக்குள்ளே சென்றதும் சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் இல்லை. தன் சட்டையில் குத்தியிருந்த குண்டூசியை எடுத்தான். காற்று அடைக்கப்பட்டிருக்கும் சைக்கிள் டயரில் மெதுவாக ஒரு குத்து குத்தினான். வேகமாக அவ்விடத்தை விட்டு அகன்றான்.

எதிர்த்தாற் போல் உள்ள பஸ் ஸ்டாண்டிற்குள் நுழைந்தான். பஸ் கிளம்பிக் கொண்டிருந்தது. அவசர அவசரமாக அதில் ஏறினான். அப்பொழுதும் அவன் நெஞ்சு படபடப்பு அடங்கவில்லை.

பக்கத்து டவுனில் பணக்காரர் பரமேஸ்வரன் வீட்டிற்கு எடுபிடி ஆளாக வேலை செய்ய ஒரு பையன் தேவை என்று பஞ்சாயத்துத் தலைவர் சிவசங்கரன் கூறியிருந்தார். அமுதன், சின்னப்பன் இருவருமே வேலை செய்ய சம்மதம் என்று தெரிவித்தனர்.

"தம்பிகளா! புதன்கிழமை மத்தியானம் சரியா இரண்டு மணிக்கு இண்டர்வியூ மாதிரி வச்சிருக்கிறாரு. உங்களையும் சேர்த்து அஞ்சாறு பையங்க வருவாங்கன்னு நினைக்கிறேன். அவருக்கு எல்லாமே சரியான நேரத்திலே நடக்கணும். இரண்டு மணிக்குச் சரியா நீங்க அங்கே இருக்கணும். தாமதமாய்ப் போனீங்கன்னா வேலை கிடைக்கிறது கஷ்டம். எனவே, சரியான நேரத்துக்குப் போயிடுங்க. உங்க ரெண்டு பேரிலே யாருக்குக் கிடச்சாலும் எனக்கு சந்தோஷம்" என்று சொல்லியிருந்தார்.

அவங்களுருக்கும் பக்கத்து டவுனுக்கும் இடையே ஐந்து கிலோ மீட்டர் தூரம்தான். முதலில் சின்னப்பன், அமுதனின் சைக்கிளிலேயே போவதாகத்தான் முடிவு எடுத்திருந்தான். ஆனால் அவன் பேராசை உள்ளம் அந்த வேலை தனக்கே கிடைக்க வேண்

டும் என்று நினைத்தது. அதற்காகத் தான் கதையின் ஆரம்பத்தில் கூறியது போல் செய்தான்.

'அமுதன் பாதி வழி வரும் பொழுதே டயர் பஞ்சராயிடும். சரியான நேரத்துக்கு அவனாலே இண்டர்வியூவுக்கு வரமுடியாது. வேலை எனக்குத்தான் கட்டாயம் கிடைக்கும்' என்று எண்ணியபடி மகிழ்ச்சியோடு பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தான் சின்னப்பன்.

சரியான வெய்யில். தார் ரோடில் வேகமாக வந்து கொண்டிருந்த அமுதனால் சைக்கிளைச் செலுத்த முடியவில்லை.

'சரசர' என்ற சத்தம் கேட்டது. சைக்கிளை ஓட்டுவதும் சிரமமாக இருந்தது. இறங்கிப் பார்த்தான். சக்கரத்தில் காற்றே இல்லை. அமுதனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. இன்னும் மூன்று கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது.


அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. இந்த வேலை கிடைக்கும் என்று எவ்வளவு ஆசையாக இருந்தேன். சைக்கிள் இப்படி காலை வாரிவிட்டதே!' என்று வருத்தப்பட்டுக்கொண்டான்.


'நல்ல காலம். சின்னப்பன் என் சைக்கிளில் வராமல் இருந்தானே. வந்திருந்தால் அவனும் என்னைப் போல் நடு வழியில் முழித்துக் கொண்டிருப்பான். அவனுக்காவது அந்த வேலை கிடைக்கட்டும்' என்று எண்ணிக் கொண்டான்.

தூரத்தில் ஒரு மோட்டார் சைக்கிள் வருவது தெரிந்தது. அவரிடம் 'என்னை ஏற்றிச் செல்கிறீர்களா?' என்றுகேட்கலாமா என்று ஒரு விநாடி யோசித்தான். எதிர்த் திசையில் ஒரு லாரி வந்து கொண்டிருந்தது.

அமுதன் ஓரமாக ஒதுங்கிக் கொண்டான். எதிர்ப்புறமாக வந்து கொண்டிருந்த லாரியில் மோதாமல் இருப்பதற்காக மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டு வந்த இளைஞன், ஓரமாக ஒதுங்கி ஓட்டினான். மோட்டார் சைக்கிள் குலுங்கிய குலுங்கலில், பின் சீட்டில் வைத்திருந்த தோல் பை நழுவிக் கீழே விழுந்துவிட்டது. இளைஞன் கவனிக்கவில்லை. லாரி சென்று விட்டது. அமுதன் கண்களில் தோல்

ஓவியராகலாம்





பை தென்பட்டது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞனைக் கூப்பிட வாயெடுத்தான். அதற்குள் அவர் கண்களுக்குப் புள்ளி போல் தெரிய ஆரம்பித்தான்.

என்ன செய்வது?

தோல் பையை உற்றுக் கவனித்தான். பாட்டிலில் மிட்டாய்கள் இருப்பது 'பளிச்'சென்று தெரிவது போல் முன் பக்கச் சின்ன அறையில் வைக்கப்பட்டிருந்த 'விசிட்டிங் கார்டு' பளிச்சென்று தெரிந்தது.

பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்தான். அம்மா கொடுத்த ஒரு ரூபாய்ப் பணம் இருந்தது. நகரத்திற்கு நடந்தோ அல்லது பஸ்ஸிலோ சென்று, பையை உரியவரிடம் சேர்ப்பிக்க நினைத்தான்.

சற்றுத் தொலைவில் தோட்டமும் வீடும் தெரிந்தன. சைக்கிளை அங்கு கொண்டு சென்றான். நல்ல காலம், அந்த வீட்டில் வசிப்பவர் அவன் தந்தைக்குத் தெரிந்தவராதலால் சைக்கிளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்வதாகக் கூறினார். அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு மீண்டும் தார் ரோட்டை அடைந்த அவனுக்கு ஓர் ஆச்சர்யம் காத்துக் கொண்டிருந்தது.

தோல் பையைக் காணாமல் அந்த இளைஞன் மெதுவாக மோட்டார் சைக்கிளை ஓட்டியபடி வந்து கொண்டிருந்தான். அமுதன் அவர் அருகே ஓடினான். கையிலிருந்த பையை நீட்டினான். அந்த இளைஞனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

நடந்ததை அமுதன் தெரிவித்தான். அமுதனின் நல்ல பண்பு அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. "அமுதா! இந்தத் தோல் பையில் எங்கள் குடும்பத்துச் சொத்து சம்பந்தமான பத்திரங்களும் ஆயிரம் ரூபாய் பணமும் வைத்திருக்கிறேன். நீ செய்த உதவிக்கு மிக்க நன்றி. இன்னும் பத்து நிமிடம் இருக்கிறது இரண்டடிக்க. என் மோட்டார் சைக்கிளில் ஏறிக் கொள். குறுக்குப் பாதை வழியாக உன்னைப் பணக்காரர் பரமேஸ்வரன் வீட்டில் கொண்டு விடுகிறேன்." என்றான்.

மகிழ்ச்சியோடு அமுதன் மோட்டார் சைக்கிளில் ஏறிக் கொண்டான்.

இண்டர்வியூ முடிந்துவிட்டது. அமுதனுக்கு அந்த வேலை கிடைத்துவிட்டது. மறுநாளிலிருந்து பரமேஸ்வரன் அவனை வேலைக்கு வரச் சொன்னார். அமுதனின் கண்கள் சின்னப்பனைத் தேடின. காண முடியவில்லை.

மனநிம்மதியோடும் உற்சாகத்தோடும் பஸ் ஸ்டாண்டை அடைந்தான் அமுதன்.

என்ன ஆச்சரியம்!

அப்பொழுதுதான் சின்னப்பன் பஸ்ஸிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான். அமுதன் அருகில் சென்றான். "ஏண்டா? இவ்வளவு லேட்டு? இண்டர்வியூ முடிஞ்சு போயிடுத்தே" என்று கூறினான்.

"அதை ஏன் கேட்கிறாய். நான் ஏறி வந்த பஸ் பாதியில் ரிப்பேராயிடுத்து. ரிப்பேரைச் சரி பார்த்துக் கிளம்ப நேரமாயிடுத்து"" என்றான் வருத்தத்தோடு.

அமுதன் நடைபெற்றதை விவரித்து மோட்டார் சைக்கிளில் குறுக்குப் பாதையில் வந்ததால், சின்னப்பன் வந்த பஸ்ஸைப் பார்க்கவில்லை என்றான்.

"அமுதா! உன் நல்ல குணத்திற்கு ஆண்டவன் உனக்கு நல்ல வழிவிட்டிருக்கிறார்" என்றான் சின்னப்பன். அவன் கண்களில் நீர் கசிந்தது. அதில் அவன் பொறாமையும் கரைந்துவிட்டது.

கைக்குழந்தைக்கு நீச்சல் பயிற்சி!

ரஷியாவில் மூன்று மாதக் கைக்குழந்தைக்கும் நீச்சல் பயிற்சி அளிக்கிறார்கள். தண்ணீர்த் தொட்டிகளில் இந்தப் பயிற்சி அளிக்கிறார்கள். இப்படி நீச்சல் பயிற்சி அளிப்பதால் குழந்தைகளுக்குச் சளி பிடிப்பது இல்லை. அதோடு நன்றாகத் தூங்குகிறது. நல்ல பசியும் எடுக்கிறது. மன வளர்ச்சியும் ஏற்படுகிறது என்று ரஷிய டாக்டர்கள் கூறுகிறார்கள்.

—வசந்தா கோவிந்தன்.





மூலதனம்

திருமதி விஸ்வநாதன்

அது ஒரு சிறிய கிராமம். சிறிய வீடுகளாக வரிசையாக, அழகாக அங்கே இருந்தன. அந்தக் கிராமத்தில் ஓர் ஏழை விவசாயி வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒரே மகன். பெயர் கந்தன். அவனை அந்த ஊரில் யாரும் 'கந்தன்' என்று அழைப்பதில்லை. 'சோம்பேறி' என்றுதான் அழைத்தார்கள். ஏனென்றால் அவன் எப்போதும் தூங்கிக் கொண்டே இருப்பான். அல்லது, சும்மா வெட்டியாகத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டே பொழுதைக் கழிப்பான்.

அவனுக்கு ஒரு வேலையும் செய்யத் தெரியாது. படிப்பும் ஏறவில்லை.

ஒருநாள் இடியும் மின்னலுமாக மழை கொட்டியது. காவேரி ஆற்றில் புது வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. அப்போது ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் அந்தக்கிராமம் முழுகிப்போனது. சில வீடுகளும், குடிசைகளும் அடித்துச் செல்லப்பட்டன. மாடுகளும், மனிதர்களும் கூட ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டனர்.

கந்தனின் அப்பாவும்வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார். அவரது மறைவால் கவலையுற்ற அம்மாவும் சீக்கிரமே இறந்து போனாள். கந்தன் தனியனாக நின்றான். கந்தனது நிலையைக் கண்ட பக்கத்து வீட்டுப் பார்வதம் மிகவும் கவலையுற்றாள்.

அவனைக் கூப்பிட்டுச் சாப்பாடு கொடுத்தாள். நன்றாகச் சாப்பிட்டான் கந்தன். அம்மா இறந்த பிறகு சரியாகவே உணவு கிடைக்கவில்லை. யார் இவனுக்குச் சாப்பிடக் கொடுப்பார்கள்? 'வேலை ஏதாவது செய்' என்று சொன்னால், 'தெரியாது' என்று சொல்லுவான். இல்லையேல், திண்ணையில் படுத்துத் தூங்கிப் போவான்.

பார்வதம் ஒரு யோசனையுடன் அவனைக் கிட்டே அழைத்தாள்.

''கந்தா,. நல்லாச் சாப்பிட்டியா? வயிறு நிறைந்ததா?''

''ஓ...''

''நீ சாப்பிட்ட உணவின் விலை ஒரு ரூபாய். தருகிறாயா!'' என்றாள் பார்வதம்.

''என்ன அக்கா விளையாடுகிறீர்கள்? நான் எங்கே போவேன் பணத்திற்கு?'' என்று பதறினான் கந்தன்.

''எங்கயாவது வேலை செய்து சம்பாதித்துத் தாயேன்!'' என்றாள் அக்கா.

''வேலை செய்து... அட... ட... அதெல்லாம் நம்மால முடியாது'' என்று அலுத்துக் கொண்டான் கந்தன்.

''சரி, வேலை செய்ய வேண்டாம். வேலை செய்யாமல், பணம் சம்பாதிக்க ஒரு வழி இருக்கிறது. அதை உனக்கு மட்டும் சொல்கிறேன். நீ யாருக்கும் சொல்ல மாட்டாயே...!'' என்றாள், அக்கா.

''என்ன வழி...? என்ன வழி...? சொல்லுங்களக்கா. நான் யாரிடமும் சொல்லாமல் ரகசியமாக வைத்துக் கொள்கிறேன்,'' என்றான் கந்தன்.

''ரொம்ப சரி. உனக்கே அந்த ரகசியத்தைச் சொல்கிறேன். என் பின்னே வா...'' என்று நடந்தாள் அக்கா.

கந்தன் தொடர்ந்தான். தோட்டத்தின் ஒரு மூலையைக் காட்டி அங்கே தோண்டச் சொன்னாள்.

''இங்கே ஏன் தோண்ட வேண்டும்?''

''ம்... புதையல் கிடைக்கும்...''

''புதையலென்றால்?''

'ஓ... அதுவே தெரியாதா உனக்கு' என்றுமனத்திற்குள்நினைத்துக்கொண்

டவள்,

''கேள்வி கேட்காமல் சொன்னதைச் செய். பணம் வேண்டுமா, வேண்டாமா?''

''வேண்டும்...''

குறிப்பிட்ட நீள அகலத்தை அளந்து, அங்கே குழி வெட்டச் சொல்லி விட்டுப் போனாள்.

கந்தன் வெட்டினான்.

மாலை வந்ததும் அக்கா மீண்டும் வந்து பார்த்தாள். போதுமான அளவு குழி வெட்டப்பட்டிருந்தது. ''போதும். இன்று என் வீட்டில் சாப்பிட்டு விட்டு நீ வீட்டிற்குப் போய்ப் படுத்துத் தூங்கு. மீண்டும் நாளைக்கு வா. நடந்ததை யாரிடமும் மூச்சு விடாதே!'' என்றாள்.

மறுநாள் மீண்டும் அக்காவின் வீட்டுத் தோட்டத்தில் மேலும் இரண்டு குழிகள் தோண்டினான்.

பார்வதம் நான்கு தென்னை மரக் கன்றுகளைக் கொண்டுவந்தாள். அவற்றைக் குழிக்கு ஒன்றாய் நட்டு வைத்து மூடச் சொன்னாள்.

''அக்கா என்ன இது!'' கந்தன் விளங்காமல் கேட்டான்.

''இதுதான் பணங்காய்க்கும் கன்று. இது செடியாக, மரமாக வளர்ந்து காய் காய்க்கும். அப்போது பணம் கொட்டும்'' என்றாள்.

''அப்படியா...! ஒரு ரூபாய் விழுமா?''

''என்ன கணக்கு ஒரு ரூபாய்?''

''நீங்கள் சாப்பிட்டதற்காக ஒரு ரூபாய் தரச் சொன்னீர்களே!''

''ஓ... அதுவா! விழும்! விழும்!'' அக்கா சிரித்துக் கொண்டே சொன்னாள்.

சில நாட்களில் கந்தனின் சோம்பேறித்தனம் மெல்ல மெல்ல மறையத் தொடங்கியது.

இதுபோலவே தரிசாய்க் கிடந்த கந்தனின் நிலத்தையும் உழுது பயிரிடச் செய்தாள் பார்வதம்.

''இதிலிருந்து எப்படி அக்கா பணம் கிடைக்கும்? என் அப்பா இந்த வேலைகளைச் செய்வதைப் பார்த்திருக்கிறேன், ஆனால், எந்த இடத்தில் எந்தச் செடியில் பணம் காய்க்கும் என்றுதான் தெரியாது!'' என்றான்.

''இன்னும் சில மாதங்கள் பொறுத்துக் கொள்; எல்லாம் புரிந்து விடும்'' என்றாள்.

அப்புறமெல்லாம், அவனால் சும்மாவே இருக்க முடிவதில்லை. ஏதேனும் வேலை செய்து கொண்டே இருந்தான். யாரும் அவனைச் சோம்பேறி என்று சொல்வதில்லை. பதிலாக மூக்கில் விரல் வைத்து வியந்தார்கள்.

அறுவடை காலமும் வந்தது. கந்தன் அக்காளின் யோசனைப்படி அறுவடை செய்தான். போரடித்து போரடித்து நெல்லைச் சேகரித்து மூட்டைகளாகக் கட்டினான். ''அக்கா பணம் காய்க்கும் என்றீர்களே! நெல்தானே விளைந்தது...? இது சாப்பாட்டிற்கு ஆகும். ஆனால், பணம்? நீங்கள் என்னை ஏமாற்றுகிறீர்கள்?'' என்றான்.

''இல்லையப்பா, உன்னை நான் ஏமாற்றவில்லை. என்னுடன் சந்தைக்கு வா...'' என்று அழைத்துக் கொண்டு வண்டியில் ஏற்றப்பட்ட மூட்டைகளுடன் சந்தையை அடைந்தாள்.

கூட்டுறவு அங்காடியில் நெல் மூட்டைகளை விலைபேசி ஒப்படைத்தாள்.

கந்தனின் கையில் கனையாய்ப் பணம் வந்து சேர்ந்தது.

''இப்போது என்ன சொல்கிறாய்? இது உன் பணம். உன் உழைப்பின் வெகுமதி. ஆனந்தம்தானே!''

கந்தன் விழித்தான்.

''கந்தா, உன் அப்பா இப்படித்தான் பணம் சம்பாதித்தார். பணம் மரத்திலோ, செடியிலோ காய்ப்பதில்லை. தானியம்தான் விளைந்தது. உழைப்புத்தான் மூலதனம். உன்னிடம் உழைப்பே இல்லாதிருந்தது. உழைக்கும்படி செய்ய அப்பாவியான உனக்கு மரத்தில் பணம் சுலபமாய்க் காய்க்கும் என்றுசொல்லிமெல்லமெல்ல உழைக்கச் செய்தேன். உன் சோம்பேறித்தனம் போனதுமே நீ நல்ல உழைப்பாளியாகி விட்டாய். பிறகுதான் உன் நிலத்தை உழுது பயிரிடச் செய்தேன். இப்போது உழைப்பெனும் மூலதனத்தைப் போட்டுப் பணம் சம்பாதிக்கக் கற்றுக் கொண்டாய். இனி நீ உன் காலிலே நிற்கலாம். உன்னைப் பற்றி நான் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை,'' என்றாள் மகிழ்ச்சியாக. கந்தன் தெளிவு பெற்றான்.

நாடகம் தந்த பாடம்

இராஜு எஸ்.ராஜ்



குச்சுமணி என்ற மாணவனை அந்தப் பள்ளிக்கூடத்தில் எல்லோருக்கும் தெரியும். குண்டுமணி போல் தோற்றமுடைய அவனுக்கும் அவன் பெயருக்கும். இப்போது சம்பந்தமே இல்லை போல் தோன்றும். ஆனால் உண்மையில் சம்பந்தமிருந்தது. குச்சு மணி என்ற மக்குமணி எவ்வாறு குண்டுமணி ஆனான் என்பதை மேலே காண்போம்.

பெற்றோர் அவனுக்கு மணி என்றே பெயரிட்டனர். ஏழாம் வகுப்பு படிக்கும்போது அவன் மிகவும் ஒல்லியாக இருந்தான். புடலங்காய் எனப் பல மாணவர்கள் அவனுக்குப் புனை பெயர் சூட்டினர். புல்தடுக்கி பயில்வான் என்றும் சிலர் அவனை அழைத்தனர். காற்று பலமாக வீசினால் ஒடிந்து விடுவதுபோல் தோற்றம்.

சில மாணவர்களுக்குப் படிப்பு நன்றாக வரும். விளையாட்டு வராது. மற்றும் சிலருக்கோ விளையாட்டு நன்றாக வரும்; ஆனால் படிப்பு துளியும் வராது. ஆனால் மணிக்கோ படிப்பும் வராது; விளையாட்டும் தெரியாது. ஆசிரியர்கள் அவனை மக்குமணி என அழைத்தனர். சக மாணவர்கள் குச்சு மணி என்றழைத்தனர். இறுதியாகக் குச்சு மணி என்ற பெயரே நிலைத்து விட்டது.

குச்சு மணியின் உடல்நிலையைக் கண்டு அவன் தாயும் தந்தையும் மிகவும் வருந்தினர். நகரத்தில் உள்ள புகழ் பெற்ற டாக்டர்களிடமெல்லாம் அழைத்துச் சென்றனர். டாக்டர்கள் அவனைச் சோதித்துவிட்டு அவனுக்கு எந்தவித நோயும் இல்லை என்று கூறி விட்டனர். சிலர் சில டானிக்குகளையும் சத்து மாத்திரைகளையும் எழுதிக் கொடுத்தனர். ஆனால் எந்தவிதப் பலனும் ஏற்படவில்லை.

கடைசியாக ஒரு டாக்டர், ''காய்கறிகள் பழங்கள், கீரை வகைகள், பால், பால்பொருட்கள், பருப்பு வகைகள் ஆகியவற்றை உணவில் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். இவன் உடல் தேறிவிடும்'' என்று கூறினார்.

ஆனால் மணியோ டாக்டர்கள் கூறிய உணவு வகைகளை உண்ண மறுத்து வந்தான். அவைகளைக் கண்டாலே அவனுக்கு ஒருவித வெறுப்பு. காலையில் இரு தோசைகள், ஒரு கப் காப்பி, மதியம் ரசத்துடன் மிகச் சிறி



, கரடிக்கு நாவல் பழம் என்றால் உயிர். நாவல் மரத்தில் ஏறி கிளைகளைப் பலமாக உலுக்கும். பின்னர் கீழே இறங்கி வந்து தரையில் விழுந்து கிடக்கும் பழங்களைப் பொறுக்கித் தின்னும். மரத்தில் இருந்தே பழங்களை பறித்துத் தின்பதற்கு ஏனோ அதற்குத் தெரிவதில்லை.

தளவு சாதம், இரவில் இரு இட்லிகள் மட்டும், இவையே அவனது உணவு.

பெற்றோர்கள் அவனிடம் மன்றாடிப் பார்த்தனர். அவன் ஒரேயடியாக மறுத்துவிட்டான்; நாளடைவில் மிகவும் பலவீனமடைந்து போனான்.

* * * * *

அப்போது அப்பள்ளிக் கூடத்தில் ஆண்டு விழா கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. குச்சுமணியின் ஆசிரியர் ஒரு நாடகம் தயார் செய்திருந்தார். 'ஆரோக்கிய நீதிமன்றத்தில் அன்பரசன்' என்பது அதன் பெயர். நாடகத்தில் குச்சுமணிக்கு அன்பரசன் வேடம் கொடுக்கப்பட்டிருந்தது.

ஆண்டு விழாவும் வந்தது. நாடகம் அரங்கேறத் தயாராயிருந்தது. ஆண்டு விழா நிகழ்ச்சிகளுக்கே சிகரம் வைத்தது போல் திகழ்ந்த அந்நாடகத்தைக் காண அனைவரும் ஆவலாயிருந்தனர். நாடகம் தொடங்கியது.

பால்; தயிர், மோர், வெண்ணெய், நெய், போன்ற பொருட்களையும், காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள், பருப்பு வகைகள் போன்ற சத்துள்ள உணவுவகைகளையும் அன்பரசன் உணவில் சேர்த்துக் கொள்ளாததால் அவன் உடல் மிகவும் மெலிந்து போய் விடுகிறது. விரைவில் நோய்வாய்ப் படுகிறான். படுக்கையில் விழுகிறான்! அவன் உயிர் உடலை விட்டுப் பிரியும் நிலை! எமதூதர்கள் வந்து அவனைக் கொண்டுசெல்கின்றனர். ஆரோக்கிய நீதி மன்றத்தில் நிறுத்துகின்றனர்.

உயர் போலீஸ் அதிகாரி திருவருமுன்காப்போன் அவர்களின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரசு வக்கீல் திரு நலம் அவர்கள் அன்பரசன் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளைக் கூறினார். திருதூய்மை என்னும் துணை வக்கீல் அவருக்குத் துணையாகப் பாய்ண்டுகளை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அரசு வக்கீல் தனது வாதத்தை எண்பிப்பதற்காகப் பல சாட்சிகளை விசாரித்தார். அங்கு அன்பரசனுக்கு எதிராகச் சாட்சி சொன்னவர்கள் பலர். அவர்களில் ஒருவர் காய்கறி என்பவர்.

காய்கறிகளின் வடிவத்தில் அட்டைகளை வெட்டி வண்ணம்தீட்டி, உடலின் முன்பக்கம் அணிந்து கொண்டு பல மாணவர்கள் மேடையில் தோன்றினர். "காய்கறியாகிய நான் கூறுவதெல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேறில்லை" என்று சத்தியம் செய்தபின் அவர் சாட்சியமளித்தார். "ஐயா, அன்பரசன் எங்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை; அவருக்கு எங்கள் மேல் வெறுப்பு; உணவில் எங்களைச் சேர்த்துக் கொள்வதே இல்லை எங்களிடம் மிகுதியாகக் காணப்படுகின்ற உயிர்ச் சத்துக்களாகிய வைட்டமின் **A.B.C.D** போன்றவை அவருடலில் இல்லை. எனவேதான் அவர் நோய்களால் தாக்கப்பட்டார்; சாவின் வாயிலில் வந்து நிற்கின்றார்" என்றார்.

வழுவழுவென்றிருக்கிறது என்று கூறி வெண்டைக் காயையும் கசக்கிறது என்று கூறி, பாகல் காயையும் இனிப்பாயிருக்கிறது என்று கூறி காரட்டையும் வெறுத்ததால்தான் இவருக்கு இந்நோய் ஏற்பட்டது என்று அந்தந்தக் காய்கள் வந்து சாட்சியமளித்தன.

இவ்வாறு காய்கறிகள் குச்சுமணியின் மேல் குற்றம் கூறியதைப் பார்த்து மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

"இவர்கள் கூறிய குற்றச்சாட்டை நீ ஏற்றுக் கொள்கிறாயா?" என்று நீதி.

பதி கனம் ஆரோக்கியம் அவர்கள் கேட்டபோது அன்பரசன் ஆமாம் என்று பதிலுரைத்தான்.

பின்னர் அடுத்த சாட்சி விசாரிக்கப்பட்டது. "ஐயா, என் பெயர் கனி, முக்கனியாகிய மா, பலா, வாழை என்போர் என் சகோதரர்களே. இதோ குற்றவாளிக் கூண்டிலே நிற்கும் அன்பரசன் எங்களை உண்பதே இல்லை. எங்களை உண்ணாததால்தான் அவர் உடல் குச்சுபோல் இளைத்தது; நோய்களைக்கொண்டுவந்துசேர்த்தது" என்றார். மாணவர்களின் கரவொலி விண்ணை முட்டியது.

அடுத்ததாக வெள்ளை நிறத்தில் பாட்டில்கள், குவளைகள் போன்ற உருவத்தை அணிந்து கொண்டு பால் குடும்பத்தினர் வந்தனர். "அன்பரசர் எங்களைத் தனது உணவில் சேர்த்துக் கொள்வதில்லை. எனவேதான் புரோட்டீன், கொழுப்பு போன்ற சத்துக்கள் இவர் உடலிலில்லை. அதனால்தான் இவர் நோய்களால் தாக்கப்பட்டார்" எனக் கூறிச் சாட்சியமளித்துச் சென்றனர்.

அன்பரசனின் வேடம் போட்டவனோ மணி. அவனுடலோ குச்சு போலிருந்தது. எனவே சாட்சிகளும், நீதிபதியும் வக்கீலும் பேசுவதெல்லாம் உண்மையாகவே குச்சு மணியைக் குறை கூறுவதுபோல் அமைந்திருந்தன. எனவே கைதட்டல்களும் ஆரவாரங்களும் மாணவர்கள் மத்தியில் மிகுந்து காணப்பட்டன.

பின்னர் கீரைவகைகள் வந்து சாட்சியமளித்தனர். "ஐயா, எங்கள் பெயர் கீரை; எங்களில் அரைக்கீரை, தண்டுக்கீரை, சிறுகீரை, பொன்னாங்கண்ணி, அகத்தி எனப் பலருண்டு. எங்களில் தாது உப்புகள், வைட்டமின்கள், இரத்த விருத்திக்குத் தேவையான இரும்புச் சத்துக்கள் ஆகியவை உள்ளன. எங்களை இவர் உணவில் சேர்த்துக் கொள்ளாததால்தான் இவருக்குப் பல நோய்கள் ஏற்பட்டன" என்றனர் அவர்கள். அத்தனை குற்றசாட்டுகளையும் அன்பரசன் ஏற்றுக் கொண்டார்.

இப்போது அரசு வக்கீல் எழுந்தார். "கனம் கோர்ட்டார் அவர்களே. திரு அன்பரசன் அவர்கள் மேல் நான் கூறிய குற்றச்சாட்டுகள் பல. அவற்றை மெய்ப்பிக்கும் வண்ணம் ஏராளமான சாட்சிகள் இங்கு விசாரிக்கப்பட்டனர். இன்னும் பல சாட்சிகள் என்னிடம் உள்ளனர். ஆனால் இந்தக் குற்றவாளி தன்மேல் சுமத்தப்பட்ட எந்தக் குற்றத்தையும் மறுக்காமல் ஏற்றுக் கொண்டார். எனவே அவருக்கு உயர்ந்த பட்சத் தண்டனையை வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்" என்று கூறி முடித்தார்.


நீதிபதியவர்கள் தனது தீர்ப்பை மறுநாளுக்கு ஒத்தி வைத்தார். கோர்ட் கலைந்தது. காட்சி முடிவுற்றது.

நாடகத்தின் இறுதிக் காட்சி தொடங்கியது. நீதிபதியின் தீர்ப்பைப் பார்வையாளர்களும் மாணவர்களும் ஆவலாய்எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

நீதிபதி தீர்ப்பை வாசித்தார். "அன்பரசனின் மீது பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டபோதிலும் அடிப்படையான குற்றச்சாட்டு ஒன்றே. அது தான் அவர் சத்துள்ள உணவை உண்ணவில்லை என்பது. அதற்கு ஆதாரவாக அரசு வக்கீல் அவர்கள் பல சாட்சிகளை விசாரித்தார்கள். இங்கே காய்கறிகளும், கனிகளும், கீரைகளும்,

சோவியத் யூனியனில் 10 கிலோ மீட்டருக்கும் அதிகமான நீளமுள்ள ஆறுகள் ஒன்றரை லட்சம் இருக்கின்றன. இத்தனை ஆறுகளின் மொத்த நீளம் சுமார் 30 லட்சம் கிலோ மீட்டர். ஒப், லீனா, அமூர், எனிசி, வால்கா ஆகிய நதிகள் 3200 கிலோ மீட்டருக்கும் அதிகமான நீளம் உடையவை.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.



பாலின் குடும்பத்தாரும் வந்து சாட்சியமளித்தனர். அன்பரசன் எந்த சாட்சியத்தையும் மறுக்கவில்லை; ஒப்புக் கொண்டார் எல்லாவற்றையும். அவர் மிகவும் இளைஞனாக இருப்பதால் சிறிய தண்டனையை அளிக்கிறேன். இனி அவர் தனது உணவில் நாள்தோறும் காய், கனி, கீரை, பால் மற்றும் பால் பொருட்களைக் கட்டாயமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஓராண்டுக்குள் தனது குறைகளைப் போக்கி உடல் நலத்தைச் சீராக்கிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நீதி மன்றம் தனது காவலர்களை அனுப்பி அன்பரசனைப் பிடித்து எமனிடம் ஒப்படைக்கத் தயங்காது" எனக் கூறி "வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன்'' என்றார்.

நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பார்வையாளர்களும், ஆசிரியர்களும் மாணவர்களும் கைதட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். நாலைந்து முறைதான் பயிற்சி செய்திருந்தபோதிலும், நாடகம் முழு வெற்றியாக அமைந்தது. நாடகத்தின் வெற்றிக்குக் காரணமாய் அமைந்தது மணியின் குச்சு போன்ற தோற்றமே. எலும்பும் தோலுமாக இருந்த அவன் அப்பாத்திரத்திற்கு மிகவும் பொருத்த மானவனாக இருந்தான்.


* * * * *

ஆண்டுவிழா நிகழ்ச்சிகள் முடிந்தன. இரவு எட்டு மணி. குச்சுமணி வீட்டுக்கு வந்தான். வீட்டுக்கு வந்தது பழைய குச்சுமணி அல்லன்; புதிய குச்சுமணி அவன் உள்ளத்தில் உறுதி பிறந்தது; அதை நாளடைவில் செயல்படுத்தினான்.

எந்தக் காய்கறிகள் வீட்டில் சமைக்கப்பட்டிருந்தாலும் வேண்டாம் என்று மறுக்காமல் ஒதுக்காமல் சாப்பிட்டான். கீரைகளைத் தொட்டும் பார்க்காத அவன் அவற்றை விரும்பிச் சாப்பிட்டான். பழங்கள், பால், மோர், நெய், பருப்பு வகைகள் ஆகியவற்றைத் தாராளமாகச் சேர்த்துக் கொண்டான். அவன் உடல் தேறத் தொடங்கியது. தினமும் மாலையில் விளையாட ஆரம்பித்தான். சிறுசிறு உடற்பயிற்சிகள் செய்தான். நீண்ட நேரம் படித்தான். படிப்பிலும் விளையாட்டிலும் திறமை பெற்றான்.

குச்சுமணியின் பெற்றோர் மிகவும் மகிழ்ந்தனர். தங்கள் மகன் மிக விரைவில் இந்நிலையை அடைவான் என அவன் தந்தை எதிர்பார்க்கவில்லை. ஆண்டு விழாவுக்கு ஒரு வாரத்துக்கு முன்தான் அவர் மணியின் ஆசிரியரைச் சந்தித்தார். தனது மகனின் உடல்நிலை குறித்து, தனது வருத்தத்தை அவரிடம் தெரிவித்தார். மணிக்குபுத்தி சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அவ்வாசிரியர் இப்படி ஒரு நாடகத்தைத் தயார் செய்து அதிலே மணியை அன்பரசனாக நடிக்க வைத்து அவன் மனத்தை மாற்றிவிடுவார் என அவர் எதிர்பார்க்கவில்லை. அவரது உள்ளம் அவ்வாசிரியருக்கு நன்றி கூறி மகிழ்ந்தது.



இன்னொரு பொங்கல்



என்று வருமோ?

புகைப்படம்: எம். நடராஜன்.

கோகுலம் சிறுவர் சங்கம்

கிண்டி, சென்னை-600 032

இச்சங்கத்தில் யார் சேரலாம்?

தமிழ் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் குழந்தைகள் சங்கத்தில் சேரவேண்டும் என் பது எங்கள் ஆசை.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினர் ஆகலாம்.

உறுப்பினர் ஆனதும்.....

கோகுலத்திற்கு நீங்கள் எதை எழுதினாலும் எப்போது எழுதி னாலும் மறக்காமல் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுங்கள்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப் பட்டிருக்கும். உறுப்பினர் பெயரும், பிறந்த நாளும் முகவரியும் அதில் இருக்கும்.

பயன் என்ன?

உறுப்பினர் ஆனவர்களின் பெயர்களை முகவரியுடன் கோகுலத்தில் வெளியிடுவோம். உறுப்பினர்கள் இதன் மூலம் பேனா நண்பர்கள் ஆகலாம்.

உறுப்பினர்கள் கோகுலத்துக்குக் கதைகள், கவிதைகள், துணுக்குகள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந் தால் வெளியிடுவோம்.

உறுப்பினர்களுக்கான பலவிதப் போட்டிகளை நடத்துவோம். வெற்றி பெறுவோர் பரிசுகள் பெறலாம். அவர்களின் படங் களையும் வெளியிடுவோம்.

'கோகுலம்' கௌரவ ஆசிரியர், ஆசிரியர், அல்லது 'கோகு லத்தின் பிரதிநிதிகள் உங்கள் பகுதிக்கு வந்தால் அறிவிப்போம். சந்தித்து உரையாடலாம்.

ஆண்டுக்கு ஒரு முறை நல்ல முறையில், பயன் தரும் வகை யில் விழா நடத்தலாம்.

உறுப்பினராகக் கட்டணம் உண்டா?

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர் மனு

பெயர்:

பிறந்த தேதி:

முகவரி:

கையெழுத்து



* சிறுவர் திரைப்பட விழாவில் அந்தந்த மாநில உடையுடன் மத்திய அமைச்சர் காட்கிலுடன் சில குழந்தைகள்.

சிறுவர் தேர்ந்தெடுத்த திரைப்படம்!

இந்திரா அனந்தகிருஷ்ணன்

"பாரதி! இப்படி வா. உன் குழுவின் அங்கத்தினர்களை அழைத்துக் கொண்டு இங்கு வா. எல்லோரிடமும் பேனாவும், காகிதமும் இருக்கா என்று கவனித்துக் கொள்."

இப்படி ஒரு கம்பீரக் குரலைக் கேட்டு நான் திரும்பினேன். 'யார் இந்த பாரதி? என்ன குழு? குழுவின் அங்கத்தினர்கள் யார்? என் மனத்தில் கேள்விகளின் அடுக்கு பெருகியது. அக்கேள்விகளுக்குப் பதில் தேட நான் தயாரானேன்.

ஊர் — பெங்களூர். தேதி — நவம்பர் மாதம் 15ம் தேதி.

சிறுவர் திரைப்படச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற நான்காவது சர்வதேச சிறுவர் திரைப்பட விழாவில் நான் கலந்து கொண்டிருந்தேன். அங்குதான் எனக்கு, சற்றும் எதிர்பாராதவிதமாக பாரதியின் சந்திப்புக் கிட்டியது.

பாரதி, பாண்டிச்சேரியில், சுப்பிரமணிய பாரதியார் பள்ளிக்கூடத்தில், ஒன்பதாவது வகுப்பில் படிக்கும் சிறுமி.

"நீ இங்கு எப்படி வந்து சேர்ந்தாய்? பள்ளிக்கூடம் லீவா?" என்று அவளைக் கேட்டேன்.

"பள்ளிக்கூடத்திலிருந்துதானே என்னை அனுப்பியிருக்கிறார்கள்!" பாரதி மகிழ்ச்சியுடன் பதிலளித்தாள்.

அம் மகிழ்ச்சிக்குக் காரணம்? பாரதி மேலும் சொன்னாள்:

"சிறுவர் திரைப்படச் சங்கம், ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஒரு சில பள்ளிக்கூடச் சிறுவர்களை தேர்ந்தெடுத்து, இங்கு விழாவில் கலந்து கொள்ள வரவழைத்திருக்கிறது. இச்

சிறுவர்கள், கணக்கில் மட்டும் 100/100 வாங்குபவர்கள் அல்ல. பள்ளிக்கூடத்தில் மொத்தமாக நடக்கும் எல்லா நடவடிக்கைகளிலும் ஆர்வத்துடன் பங்கெடுத்துக் கொள்ளும் சிறுவர்கள். ஆக மொத்தம், இவ் விழாவில் 250 சிறுவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்.''

'இதில் பாரதிக்கு என்ன தனி மதிப்பு?' என்று என் மனத்தினுள் கேள்வி எழும்பிக் கொண்டிருக்கும் போதே, பாரதி தொடர்ந்தாள். அவளைத் தூண்டிவிட வேண்டிய அவசியமே இல்லை. பிரகாசமான புன்முறுவலுடன் கலகலவென்று தெளிவாகப் பேசக்கூடிய சிறுமி அவள்.

''இந்த 250 சிறுவர்களிடையில் ஒரு விசேஷமான **குழுவின்** 9 அங்கத்தினர்கள் மறைந்திருக்கிறார்கள் என்று எங்களில் யாருக்குமே முதலில் தெரியாது. நாங்கள் அனைவரும் 12 — 13 ஆம் தேதி இங்கு வந்து சேர்ந்தபின் எங்கள் **நடவடிக்கைகளை** சிறுவர் திரைப்படச் சங்கத்தினர் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள் போலும்! இப்படியாக எங்களை மதிப்பிட்டு, 'சிறுவர் ஜூரி' என்னும் குழுவின் 9 அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். இக்குழுவின் தலைவியாக நான் நியமிக்கப்பட்டேன்.''

ஓஹோ! இதுதான் இச்சிறுமியின் குதூகலத்திற்குக் காரணமா?'என்றது என் மனம்.

''மிக முக்கியமான குழுவோ, இச் சிறுவர் ஜூரி?'' என்று நான் கேட்டேன். பாரதி பதில் சொல்வதற்குள்,

''இதிலென்ன சந்தேகம்?'' என்ற கட்டைக் குரலைக் கேட்டு நான் திரும்பினேன்.

கோவாவிலிருந்து வந்துள்ள 14 வயதுச் சிறுவன் கேதார் தூமே, என் கேள்வியைக் கேட்டு அருகில் ஓடி வந்து பதிலளித்தான்.

''சிறுவர்களின் படங்களை, பெரியவர்களைவிட, சிறுவர்கள்தானே சரியாக மதிப்பிட முடியும்?''

கேதாரும் 'சிறுவர் ஜூரி'யைச் சேர்ந்தவன். தொடர்ந்து ஜூரியைச் சேர்ந்த ஆறு சிறுவர்கள் ஓடி வந்தனர்.

நிற்பவர்கள்: ஜான் ஐஸக் (பெங்களூர்); பிரமோத் (மகாராஷ்டிரம்); கேதார் தூமே (கோவா); ரூபா (பெல்காம்); பாரதி (பாண்டிச்சேரி).

உட்கார்ந்திருப்பவர்கள்: திகோலா (மேகாலயா); லகேந்திரா (மணிப்பூர்); லோம் (இமாசலப் பிரதேசம்); மாதுர் ராய் (அஸ்ஸாம்).

* சிறுவர் திரைப்பட விழா நடுவர் குழு:





நடனமாடி மகிழ்விக்கின்றனர் சில சிறுவர்கள்.

எல்லோரையும் விடச் சிறியவள், எட்டே வயது நிரம்பியிருந்த அஸ்ஸாமைச் சேர்ந்த மதுர் ராய். ஒன்பதாவது அங்கத்தினர் எங்கே? என் கண்கள் தேடின. அப்போது பதின்மூன்று வயதுள்ள ஒரு பையன், ஒரு நடுத்தர வயதுள்ள பெண்மணியுடன் நடந்து வந்து சேர்ந்தான். என் முகத்திலுள்ள கேள்விக்குறியைக் கண்டு அப்பெண்மணி சொன்னாள்:—

"இவன்தான் ஜான் ஐஸக். பெங்களூரைச் சேர்ந்தவன். ஊமை. காது கேட்காது. இருப்பினும், அவனை இக்குழுவில் சேர்த்தது, அவனுக்கு மிகவும் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது"

தான் சொன்னதைச் சைகை மொழியில் ஜானிடம் சொன்னாள் அப்பெண்மணி. அவன் பளிச்சென்ற புன்சிரிப்புடன் தலையாட்டினான்.

இந்த ஜூரியின் கடமைகள் என்னென்ன?

பதினொன்கு நாடுகளிலிருந்து போட்டியில் வந்து கலந்து கொண்டிருந்த சிறுவர் திரைப்படங்களைப் பார்த்துமதிப்பிட வேண்டும். கடைசித் தினத்தன்று, அங்கத்தினர்கள் அனைவரும் கலந்தாலோசித்து முற்றிலும் சிறந்த படத்திற்குப் பரிசளிக்க வேண்டும். ஒன்பது அங்கத்தினர்களும், பொறுப்புடனும் ஆர்வத்துடனும் கடமையைச் செய்தனர்.

"வெளிநாடுகளிலிருந்து வரும் படங்கள் நாம் அறியாத மொழியில் இருக்குமே! அவைகளை எப்படி மதிப்பிட்டீர்கள்?" என்று கேட்டேன்.

"அப்படங்களின் ஒவ்வொரு காட்சிக்கும் ஆங்கிலத்திலே குறிப்புத் தந்திருக்கிறார்களே!" — பெல்காமிலிருந்து வந்திருந்த ரூபா பதிலளித்தாள். "ஆனால் சிறப்பான படத்திற்கு, உண்மையில் மொழியின் அவசியம் இரண்டாம்பட்சம்தான். நடிப்பு, காட்சிகள், கதையின் ஓட்டம், படப்பிடிப்பு ஆகியவை முதலில் நம்மைக் கவர்ந்துவிடுகின்றன".

"இது முற்றிலும் உண்மையே! என்னால் அவசரமாக அந்த ஆங்கிலக் குறிப்புக்களைப் படிக்க முடியாத போதிலும்,சிறப்பான படத்தைநான் நன்றாக ரசித்தேன்" என்றான் மேகாலயாவைச் சேர்ந்த சிறுவன் நிகோலா. ஜானும் இதையே சைகை மொழியில் சொன்னான்.

போட்டியில் முதற் பரிசுப் பெற்ற படம் 'Moonlit Cottage' என்ற சீன தேசத்துப் படம். சிறுவர் ஜூரி, பெரியோர் ஜூரி இரண்டுமே இதைத்தான் தேர்ந்தெடுத்தன. உண்மையாகவே, இது மொழிக்கு அப்பாற்பட்ட படம். படத்திலேயே லயித்துப் போனவர்

களுக்கு. குறிப்பைப் படிக்க எங்கே நேரம்? விழாவில், 'சிறுவர்களும், திரைப்படங்களும்' என்று ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. இதில், விழாவிற்கு வந்திருந்த பல சிறுவர்களும் கலந்து கொண்டனர். அப்பப்பா! அச்சிறுவர்கள் எவ்வளவு தெளிவாகவும் அழுத்தமாகவும், தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைத்தனர்!

"நம் நாட்டுச் சிறுவர் படங்கள், சிலவெளிநாட்டுப்படங்களைப்போல் ஏன் கவர்ச்சிமிக்க நடிப்பும், மகிழ்ஊட்டும் காட்சிகளும் நிரம்பியதாக இருப்பதில்லை? அம்மாதிரி இந்தியப் படங்களைக் காண நாங்கள் ஆவலாயிருக்கிறோம். அது இல்லை என்றுதான், அமிதாப்பச்சனின் கூத்துக்கும், கமலஹாசனின் ஆட்டத்திற்கும் கை தட்டி மகிழ வேண்டியிருக்கு!" — இப்படி ப்ரசாந்த் என்னும் பையன் தைரியமாக எழுந்து நின்று பேசினான்.

"பள்ளிக்கூடங்களில் நல்ல சிறுவர் படங்கள் ஏன் காட்டுவதில்லை? குழந்தைகள் படம் பார்ப்பது கேவலம், கல்விக்கு ஏற்றதில்லை என்று பெரியோர்கள் கருதுகிறார்களா? நான் இதுதான் முதல் முறையாகச் சிறுவர்களுக்கு என்று தனிப்பட்ட முறையில் சிறப்பாக எடுக்கப்பட்ட படங்களைப் பார்க்கிறேன். இம்மாதிரி விழாக்கள் இன்னும் அதிகமாக சிறு நகரங்களிலும் கிராமங்களிலும் நடக்க வேண்டும்" என்றாள் மற்றொரு பத்து வயதுச் சிறுமி.

மாலவிகாவின் கருத்து "ஏன் சிறுவர்கள் படம் பிடிக்கக் கற்றுக் கொள்ளக் கூடாது? அக்கல்வியைப் போதித்து, படப்பிடிப்பில் எங்களைச் சம்பந்தப்படுத்த வேண்டும். எங்கள் கருத்துக்களையும், எங்கள் கதைகளையும், படத்தில் உட்படுத்த வேண்டும்."

மீண்டும் பாரதி பளிச்சென்று எடுத்துரைத்தாள்: "நம் நாட்டுச் சிறுவர்களுக்குச் சிறப்பான படங்கள் மிகவும் தேவை. இதை நம் நாட்டுப் படத்தயாரிப்பாளர்கள் அறிந்து கொண்டு எங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும். சிறந்த சிறுவர் படத்தைப் பெரியோரும் அநுபவிக்கலாமே! 'Moonlit Cottage' சிறியவர்கள், பெரியவர்கள் எல்லோரையும் மகிழ்வூட்டவில்லையா? நல்லொழுக்கத்தைப் போதிக்கும் படங்கள் அவசியம்தான். ஆனால், அவை மகிழ்வூட்டுவதாகவும் இருக்க வேண்டுமே! இம்மாதிரியான விழாக்கள் மேலும் மேலும் நடத்துவது மிகவும் அவசியம் என்று நானும் உறுதியுடன் கூறுகின்றேன். இங்கு, இவ்வளவு சிறுவர்கள் ஒன்று கூடினது, தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கு மிகவும் ஏற்றது. நான் மீஜோராமைப் பற்றியோ, அருணாசலப் பிரதேசத்தைப் பற்றியோ புத்தகங்களில் இல்லாத எவ்வளவோ விவரங்களை இங்கு அப்பிரதேசத்துச் சிறுவர்களுடன் கலந்து பழகித் தெரிந்து கொண்டிருக்கிறேன்."

விழாவிற்கு வந்திருந்த சிறுவர்கள் படம் பார்த்து, ரசித்து, கருத்தரங்கில் கலந்து கொண்டதைத் தவிர, நிறைய ஒன்றுகூடி ஆடிக் களித்து மகிழ்ந்தனர். எல்லாச் சிறுவர்களும் சேர்ந்தாற்போல் ஒரே ஓட்டலில் தங்கியிருந்ததால், ஒன்றாகப் பேசிப் பழகக் கூடிய வாய்ப்பு அவர்களுக்கு நிறைய இருந்தது.

இச்சிறுவர்களின் நடுவே, நார்வேயிலிருந்து வந்துள்ள பன்னிரண்டு வயதுச் சிறுமி நடிகை ஸின்னிவாவும் உண்டு. நம் நாட்டிலுள்ள வெவ்வேறு மாநிலங்களின் சிறுவர்களையும், அவர்களின் வெவ்வேறு மொழி, ஆடை பழக்கவழக்கங்களையும் பார்த்து ஸுன்னிவா **வியந்தாள்** என்றாலும், இவ்வேறுபாடுகளினிடையே ஒரு விசேஷ ஒற்றுமையைக் கண்டு அவள் மேலும் வியந்தாள்.

சிறுவர்கள் அனைவரும் கூடி இவ்விழா நடந்த பத்து நாட்களையும் மிகக் குதூகலத்துடன் கழித்துவிட்டு விடைபெற்றுக் கொள்ளும்போது கண்களில் நீர் கசிந்தது.

வருங்காலத்தில், நம் நாடு, சிறுவர்களுக்கென்று சிறந்த படங்களைத் தயார் செய்து, வெவ்வேறு நகரங்களிலும், கிராமங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் காண்பித்து சிறுவர்களின் மனத்தை மகிழ்வூட்டக் கூடும் என்று நம்புகிறோம்.

Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras—600 032. (Phone: 431543).
Editor: K. Rajendran.



தீரர் சத்தியமூர்த்தி

பிறந்த நாள்: 19-8-1887

மறைந்த நாள்: 28-3-1943

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka